# சிப்பி தேடும் மழைத்துளி





இன்பா அலோசியஸ்

www.pustaka.co.in

# சிப்பி தேடும் மழைத்துளி





இன்பா அலோசியஸ்

www.pustaka.co.in

http://www.pustaka.co.in

# சிப்பி தேடும் மழைத்துளி...

# Chippi Thedum Mazhaithuli...

Author :

இன்பா அலோசியஸ்

Infaa Alocious

For more books

http://www.pustaka.co.in/home/author/infaa-alocious

Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.

All other copyright © by Author.

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

பொருளடக்கம்

சிப்பி – 1

சிப்பி – 2

சிப்பி – 3

சிப்பி – 4

சிப்பி – 5

சிப்பி – 6

சிப்பி – 7

சிப்பி – 8

சிப்பி – 9

சிப்பி – 10

சிப்பி – 11

சிப்பி – 12

சிப்பி – 13

சிப்பி – 14

# சிப்பி தேடும் மழைத்துளி….

## சிப்பி – 1

காலை நேர பரபரப்பில் இயங்கிக் கொண்டிருந்த சந்திரா, வீட்டின் அழைப்புமணி ஒலியெழுப்ப, கைவேலையை போட்டுவிட்டு, வாசலுக்கு விரைந்தாள்.

முகத்தை இறுக்கமாக வைத்துக்கொண்டு வீட்டுக்குள் நுழைந்த சூர்யா, அவள் முகம் பாராமல், “இந்த கல்யாணத்தில் எனக்கு இஷ்டமில்லைன்னு சொல்லிட்டு வந்துட்டேன்..”, உரைத்துச் சென்ற வார்த்தைகள், அவளை உறையச் செய்தது.

“சூர்யா…, என்னடா சொல்ற…? திரும்ப சொல்லு…”, தான் கேட்ட செய்தியை நம்ப முடியாமல் வீறிட்டாள்.

“இந்த கல்யாணம் வேண்டாம்…, எனக்கு பிடிக்கலன்னு சொல்லிட்டு வந்துட்டேன்… போதுமா…? முதல்ல உள்ள வந்து சோத்த போடு…, பசிக்குது…”, தன் கையில் இருந்த பேகை அறைக்குள் கொண்டு வைத்தவனாக குளிக்க டவல் எடுத்துக் கொண்டிருந்தான்.

அவன் சொன்ன விஷயத்தை ஜீரணிக்க முடியாமல்…, நின்ற இடத்திலேயே நின்றுவிட்டாள் சந்திரா.

‘திருமணத்தை நிறுத்திவிட்டேன் என்பதை…, என்னவோ அவர்கள் வீட்டில் வாங்கவிருந்த பொருள் வேண்டாம் என சொல்லிவிட்டு வந்த பாவனையில், மிகவும் சாதாரணமாகச் சொல்லிச் சென்ற தம்பியை நம்ப முடியாமல் வெறித்தாள்.

அசையாமல் நின்ற தமக்கையைத் தாண்டி..., குளிக்கச் சென்று விட்டான்.

‘ஐயோ..., அப்போ நான்தான் இங்கே தப்பு செஞ்சுட்டனா? அவன் வேண்டாம்னு என்று சொல்லியும், பிடிவாதமா நிச்சயத்தை முடித்து விட்டேனே..., அந்த கோபமா...? அதுக்கா இப்படி செஞ்சுட்டான்...?’, தேகம் மொத்தமும் நடுங்கியது.

தீபிகாவின் வெட்கம் சுமந்த முகம் கண்களுக்குள் வந்து போனது.

‘இல்லையென்றால்...., அக்கா எந்த பெண்ணைப் பார்த்தாலும் கட்டக் கூடாது என முடிவு செய்து வைத்திருந்தானா?’ எதுவாக இருந்தாலும் இப்பொழுது பெரிதாக காயம் பட்டது தீபிகா மட்டுமே என்பதில் எந்த ஐயமும் இல்லை.

‘இப்போ நான் என்ன செய்ய...? ஒத்த வார்த்தை...., ஒரு செய்கை..., ஒரு கண்ணசைவு..., எதுவும் இல்லாமல்..., ஒரேடியாக..., முற்றாக அனைத்தையும் போட்டு உடைச்சுட்டு வந்திருக்கானே....’, உள்ளம் பதறியது.

நிச்சயத்தின் பொழுது கூட..., ‘மாப்பிள்ளை நேரில் வந்திருந்தா நல்லா இருந்திருக்கும்...?’ என தன் ஆதங்கத்தை வெளிப்படுத்திய ரத்தினமும்,

“மாப்பிள்ளையை போன்லயாவது பேச சொல்லியிருக்கலாம்....”, தன் எண்ணத்தை வெளிப்படுத்திய சியாமளாவும்,

“அவங்களுக்கு என்னை பிடிச்சிருக்கு தானே...?”, வெட்கமும், தவிப்புமாய் கேட்ட தீபிகாவும், மனக்கண்ணில் விரைய, இதயம் வெற்றிடமாகிப்போன உணர்வு.

ரத்தினம் விசாரித்தவரை, சூர்யாவின் தொழில் நேர்த்தியும், நேர்மையும், அவன் குணமும், அவரை பெரிதாக யோசிக்க வைக்கவில்லை. அதைவிட..., அவரே நேரடியாக அவன் நேர்மையை எதிர்கொண்டும் இருக்கிறார். எனவேதான், சூர்யா இல்லை என்றாலும்..., அவர்கள் ஊர் வழக்கப்படி மாப்பிள்ளை வரவில்லை என்றாலும், சந்திராவை நம்பி நிச்சயத்தை முடிக்க வைத்தது.

இருபத்து ஏழு வயது முடியப்போகும் தருவாயிலும், திருமணத்தை ஒத்திபோடும் சூர்யாவின் செய்கை ஏற்படுத்திய பயம்..., சந்திராவை அவசரமாக பெண் பார்க்க வைத்தது. இதற்கு முன்பு பார்த்த பெண்கள் அனைவரையும், அவர்கள் படிக்கவில்லை, தைரியமில்லை, பெண் சொந்தக் காலில் நிற்க வேண்டும், நான் இல்லையென்றாலும் என் குடும்பத்தை தாங்குபவளாக வேண்டும் என உரைத்து அவன் மறுக்க, சற்று விழி பிதுங்கித்தான் போனாள்.

பெண்ணில் குறை சொன்னால் அதை மாற்ற முயலலாம்..., அவன் வைக்கும் கோரிக்கைகளின் தாக்கத்துக்கு ஏற்ற பெண்ணை தேடுவதுதான் சந்திராவுக்கு சவாலாக இருந்தது.

திருச்சியில் இருந்து இருபது கிலோமீட்டர் தூரத்தில் இருக்கும் சிறு கிராமம் அது. அங்கே விவசாயமே பிரதானம். அங்கே படித்த பெண்களை விரல் விட்டு எண்ணிவிட முடியும். அப்படியே படித்த பெண்களாக இருந்தால்..., அதற்கு ஏற்ற வரன்களை அவர்கள் எதிர்பார்த்தார்கள்.

சூர்யாவும் பட்டதாரி இளைஞன்தான்..., ஆனால்..., படிப்புக்கேற்ற வேலை இல்லாமல், அதை வைத்து சுய தொழில் செய்கிறான். அரிசி மண்டி, உரக்கடை..., என அவன் பலம் பெரியதுதான். ஆனாலும்..., ஒயிட்காலர் ஜாபை படித்த பெண்கள் விரும்ப, சூர்யாவின் விருப்பத்தை நிறைவேற்ற முடியாமல் திணறினாள் சந்திரா.

ஒரு திருமணத்துக்குச் சென்றவள்..., எதேச்சையாக தீபிகாவைப் பார்க்க, அவளைப் பற்றி விசாரித்ததில்..., படிப்பு, அவள் வேலை..., அவள் தந்தையின் தொழில்..., பெற்றவர்களுக்கு ஒரே பெண்..., என அனைத்தும் தன் தம்பியின் எண்ணத்துக்கு ஒத்துவர, அங்கேயே பேச்சை துவங்கி விட்டாள்.

இந்த பெண்ணை நிச்சயம் அவன் மறுக்க மாட்டான் என்ற அவளது அதீத நம்பிக்கை..., இரண்டு வாரத்தில் அவன் வந்துவிடுவான் என்பதால்..., பெண்ணைப்பற்றி அவனிடம் கோடி காட்டியவள்...., வரப்போகும் ஆடி மாசத்துக்கு முன்பாக நிச்சயத்தை முடித்துவிட விரும்பினாள்.

ஆனால்..., போன இடத்தில் சூர்யாவால் குறித்த நேரத்துக்கு வர முடியாமல் போக..., தீபிகா கைவிட்டு போய்விடக் கூடாதே என்ற அவசரத்தில்..., தானே முன்னின்று நிச்சயத்தை முடித்துவிட்டாள்.

அதைக் கேட்ட சூர்யா சற்று அதிர்ந்துதான் போனான். ஏற்கனவே அக்கா பார்த்த பெண்களின் கணக்கிலேயே தீபிகாவை எண்ணியவன், சந்திராவை பேசக் கூட அனுமதிக்கவில்லை.

தன் வேலையை சீக்கிரமாக முடித்தவன், பெண் வீட்டாரை மிகுந்த காத்திருப்புக்கு உள்ளாக்க விரும்பாமல், அவர்கள் எதிர்பார்ப்பை தொடர வைக்க விரும்பாமல்..., ஊருக்கு வந்தவன்..., நேராக பெண் வீட்டுக்குச் சென்று திருமணத்தில் தனக்கு விருப்பம் இல்லையென்று சொல்லிவிட்டு வந்துவிட்டான்.

ஒரு வேகத்தில் திருமணம் வேண்டாம் என சொல்லிவிட்டு வந்துவிட்டாலும்..., ஒரு பெண்ணின் இடத்தில் இருந்து யோசிக்கையில்..., அதுவும், ஒரு அக்காவின் தம்பியாக..., அவளுக்கு இப்படி நேர்ந்திருந்தால் தன்னால் தாங்கியிருக்க முடியுமா? இந்த வினா எழுகையில்..., எழுந்த உணர்வை முயன்று தடுத்தான்.

ஆனாலும்..., தன்னை ஒரு முறை கூட காணாதவளுக்கு, தன் மறுப்பு பெரிய பாதிப்பை ஏற்படுத்தாது என்றே நினைத்தான். திருமண நிச்சயம் முடிந்துவிட்டாலே..., அவனை கணவனாக வரித்துவிடும் பெண்ணின் மனம் அவனுக்கு எங்கே தெரியும்?

அவனது மறுப்பை எப்படி தாங்கிக் கொள்வாள் எனப் புரியவில்லை. அதை அவன் புரிந்து கொள்ளவும் முயலவில்லை.

அவன் குளித்து முடிந்து வரும் வரைக்குமே சந்திரா அசையாமல் அங்கேயே இருக்க..., தமக்கையை வித்தியாசமாகப் பார்த்தவன், சாப்பிட நகர்ந்தான்.

“அக்கா..., சாப்பாடு...”, அவளைக் கலைக்க, சூர்யாவின்மேல் கோபம் இருந்தாலும், அவன் வயிறைக் கவனிப்பதே அந்த

நேரம் பிரதானமாகத் தோன்ற, கூடத்தில் அமர்ந்திருந்த அவனுக்கு தட்டை வைத்தாள்.

“என்ன காரியம் பண்ணிட்டு வந்து நிக்கற சூர்யா...? நீ சொல்லிட்டு வந்த விஷயத்தோட வீரியம் தெரிஞ்சுதான் செய்தியா...? உனக்கென்ன கிறுக்கா? ஏண்டா இப்படி பண்ற...?”, அதிர்ச்சி விலகாமல் வினவினாள்.

அவள் கோபத்தை லட்சியமே செய்யாமல், தன் உணவிலேயே கவனமாக இருந்தான் சூர்யா.

“ம்ச்..., சாப்பிடும்போது தொணதொணங்காதே..., நீ சோத்தை வை...”, ஒரு மாதம் வீட்டு சாப்பாடு இல்லாத ஏக்கம் அவன் வேகத்தில் தெரிந்தது. அதைவிட..., தன் மனதுக்குள் மெல்லியதாக இருக்கும் உறுத்தல் எங்கே அதிகரித்து விடுமோ என்ற அச்சத்தாலேயே அவ்வாறு நடந்து கொண்டான்.

“ஆமா..., நல்லா கொட்டிக்க. அங்கே..., அந்த பொண்ணு என்ன நிலைமையில் கிடக்கோ...”, புலம்பினாள்.

“ஒரு விஷயத்தை செய்ய முன்னாடி, இப்படின்னு சொல்ல மாட்டியாடா? உன் இஷ்டத்துக்கு முடிவெடுக்குறதா இருந்தால்..., பிறகு, அக்கான்னு நான் உனக்கு எதுக்கு இருக்கேன்....?”, புலம்பித் தள்ளினாள்.

“அட..., அவங்களே எதுவும் சொல்லலை..., நீயேன்...”, அவன் அசால்ட்டாக உரைக்க,

“எதுவும் சொல்லலையா...? எப்படிடா சொல்லுவாக..., நீ சொன்ன விஷயம் அப்படி. அந்த அதிர்ச்சியை ஜீரணிக்கவே அவங்களுக்கு நாலு நாள் ஆகும்.

“டேய்..., உனக்குன்னு நான் எத்தனை பொண்ணு பாத்தேன்..., எல்லாத்தையும் ஏதாவது நொட்டை சொல்லி தட்டிக் கழிச்ச..., சரின்னு விட்டாச்சு. இப்போ.., நிச்சயமே முடிச்சாச்சு..., இப்போ போய்..., உங்க பொண்ணை கட்ட மாட்டேன்னு சொன்னா...? யோசிக்கவே மாட்டியா...? முதல் வேலையா அவங்களுக்கு பேசணும்...”, திருமணம் நின்றுவிட்டது என்பதை அவ்வளவு சுலபமாக அவளால் ஏற்க முடியவில்லை.

“அதான் முடிஞ்சு போச்சே…, தேவையில்லாமல் எதையும் கிளறி வைக்காதே…”, அலைபேசியைத் தேடிய அவளை கடிந்தான்.

“என்னது முடிஞ்சு போச்சா? அதெப்படி முடியும்னு கேக்கறேன்…? ஏண்டா…, தைரியமான பொண்ணு வேணும்…, சொந்த காலில் நிக்கணும், படிச்சிருக்கணும்…, இதுதானே உன் ஆசை. அப்படி ஒரு பொண்ணைத்தானேடா உனக்கு பார்த்தேன்…, டீச்சர் பொண்ணைவிட பெருசா யாரைடா நீ எதிர்பாக்குற…?”, அவளுக்கு ஆத்திரமாக வந்தது.

“ஆண்டவா…, இப்போ நான் என்னத்த செய்ய? போன் போட்டா பேசுவாங்களா மாட்டாங்களான்னு தெரியலையே…”, புலம்பியவள், அலைபேசியை எடுத்து அவர்களுக்கு அழைக்க,

“என்னக்கா சொல்ற…? பொண்ணு டீச்சரா…?”, முதல் முறையாக பெண்ணைப் பற்றிய நல்ல விஷயத்தை, அதுவும் மனசுக்கு பிடித்த விஷயத்தை உரைக்க, வாயில் உணவை வைக்கப் போன அவனது கை அந்தரத்திலேயே நிலைத்தது.

ஏற்கனவே மனம் மெல்லியதாக தடுமாறிக் கொண்டிருக்க…, பெண்ணைப் பற்றிய விஷயத்தைக் கேட்டு…, மனம் ஆட்டம் காணவே செய்தது.

“ஆமா…, இப்போ கேளு…, இருடா…”, இணைப்பு கிடைக்கவே அவனை அடக்கியவள், போனில் கவனத்தை செலுத்தினாள்.

சூர்யாவுக்கோ…, முதல் முறையாக தவறு செய்துவிட்டோமோ…, என தவிக்க, “என்னங்க சொல்றீங்க…? எப்போ…? எந்த ஆஸ்பத்திரி…? ஒண்ணும் இல்லையே…, சரி…”, தோய்ந்துபோய் அலைபேசியை வைத்தவள், தள்ளாடி தரையில் அமர்ந்தாள்.

“பாவி…, குடியை கெடுத்துட்டியே…, இப்போ நான் என்ன செய்வேன்…?”, தலையிலடித்துக் கொண்டு அழ, அவ்வளவு நேரமாக தூரமாக இருந்த அவள் கணவன் முருகன் பதறிக்கொண்டு ஓடி வர, சாப்பாட்டை பாதியில் நிறுத்திய சூர்யாவின் இதயத்துடிப்பு தாறுமாறானது.

## சிப்பி – 2

“ஜே பி ஹாஸ்பிடல்..., அதன் வழக்கமான பரபரப்பில் இயங்கி கொண்டிருந்தது. அவசர சிகிச்சைப் பிரிவின் எதிரில்..., தவிப்பும் துடிப்புமாக உலவிக் கொண்டிருந்தனர் சிலர்.

“என்ன இந்த பொண்ணு இப்படி பண்ணிட்டா...?”.

“இவல்லாம் என்னத்துக்கு படிச்சா...?”.

“இப்படி பண்ணிட்டாளே..., இதை நான் எதிர்பாக்கவே இல்லை...”.

“பாவிப்பொண்ணு..., பெத்தவங்களை ஒரு நிமிஷம் கூடவா நினைச்சு பார்த்திருக்காது....”.

“இத்தனை வருஷம் இவளை கஷ்டப்பட்டு வளத்தது இதுக்குத் தானா?”, பலவிதமான குரல்கள்..., ஆதங்கமாகவும், கோபமாகவும், ஆற்றாமையாகவும் ஒலித்துக் கொண்டிருந்தது.

உள்ளே உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் தீபிகாவின் தாய்..., சியாமளா..., ‘ஓ...’ வென்ற அழுகையில் தரையில் விழுந்து கதறிக் கொண்டிருக்க, தந்தை ரத்தினமோ தன் அழுகையை கட்டுப்படுத்திக் கொண்டு, அங்கிருந்த இருக்கையில் தோய்ந்திருந்தார்.

“பாவி மக, ஒரு வார்த்தை சொல்லலியே..., அவன்மேல் இம்புட்டு நினைப்பை வளத்துருக்கான்னு தெரிஞ்சிருந்தா..., அவன் காலில் விழுந்து சம்மதம் வாங்கி இருப்பேனே...”, சியாமளா தாங்க முடியாமல் புலம்பிக் கொண்டிருந்தாள்.

“ஏய்..., முதல்ல வாயை மூடுடி...”, அவ்வளவு நேரம் அமைதியை கடை பிடித்த ரத்தினம், மனைவியின் இந்த பேச்சைக் கேட்டு கொந்தளித்து விட்டார்.

அங்கே இருந்த அனைவரும்..., அவர் குரலுக்குத் திரும்பி அவரைப் பார்க்க, தன் தவறு புரிந்தவராக அமைதியாக..., சிந்தையோ..., திருமணக் கனவுகளை சுமந்திருந்த தன் மகளைச் சுற்றி வந்தது.

அதைவிட..., திருமண நிச்சயமே முடிந்துவிட்ட பிறகு..., ‘இந்த திருமணத்தில் இஷ்டமில்லை....’ எனச் சொல்லிச் சென்ற

சூர்யாவிடம் நிலைத்து..., மனதை காந்த செய்தது.

திருமண நிச்சயத்துக்கு அவன் வராத பொழுதே நான் சந்தேகப் பட்டிருக்க வேண்டுமோ...? சூர்யாவின் அக்கா..., சந்திராவின் பேச்சை நம்பியிருக்கக் கூடாதோ...? மாப்பிள்ளையின் முகத்தை புகைப்படத்தில் பார்த்து ஏமாந்து விட்டோமோ....?' மனம் காலம் கடந்த நினைவில் தத்தளித்தது.

'இல்லையே..., நேரிலும் பார்த்திருக்கிறேனே..., நேர்மைக்காரனாயிற்றே..., அதனால் தானே இந்த திருமணத்துக்கு ஒத்துக் கொண்டேன்...' மனம் பரிதவித்தது.

'எவ்வளவு சுலபமாக சொல்லிவிட்டு சென்றுவிட்டான்...' நினைக்கவே நெஞ்சு ஆறவில்லை.

ஒரு மனமோ..., திருமணத்திற்கு முன்பாவது சொன்னானே என நிம்மதி கொண்டிருக்க, அந்த நிம்மதியை அடியோடு அழித்துப் போட்டது மகளது செய்கை.

அந்த ஊரிலேயே..., இளநிலை பட்டப்படிப்பு முடித்து..., சென்னைக்கு சென்று கல்வியியல் (B. Ed) படிப்பை முடித்து, சொந்த ஊரிலேயே பள்ளியில்..., நாற்பது குழந்தைகளுக்கு பாடம் சொல்லிக்கொடுக்கும் மகள்..., நிச்சயம் இதை தாங்கிக் கொள்வாள்..., என நினைத்திருக்க, அவன்மேல்..., அதுவும்..., ஒரு முறை கூட நேரில் காணாத அவன்மேல்..., நினைப்பை இவ்வளவு தூரம்...

அதுவும்..., தன் உயிரையே மாய்த்துக் கொள்ளும் அளவுக்கு, அவன்மேல் ஆசையை வளர்த்திருப்பாள் என அவர் எதிர்பார்த்திருக்கவே இல்லை. இவ்வாறு எண்ணி மனதை இறுக்கிக் கொள்ள முயன்றாலும்..., திருமணக் கனவுகளில் நிச்சயம் திளைத்திருப்பாள் என்பதை அவராலும் மறுக்க முடியாதே...

இன்னும் சில நிமிடங்கள் தாமதமாக தன் மனைவி அவளை பார்த்திருந்தால்... நினைக்கவே நெஞ்சம் பதறியது.

அவர் தைரியமான ஆண்மகன்தான்..., எந்த சூழலையும் எதிர்த்து நிற்பவர்தான்..., அது அனைத்தும்..., தன் ஒரே மகளுக்கு அப்பாற்பட்ட விஷயத்தில் மட்டுமே என்பதை அவரே உணர்ந்த நொடி இதுவாகத்தான் இருக்கும்.

தன் ஆஸ்திக்கும்..., ஆசைக்கும்..., ஒரே மகள்..., தன் குல விளக்கு..., அது ஒரு நிமிடத்தில் அணையப் பார்த்ததே..., அணைக்கப் பார்த்தானே....' சூழ்நிலையை மீறி, அவர் கோபம் எழுந்தது.

சியாமளா தன் ஆதங்கத்தை, வருத்தத்தை வார்த்தைகளில் கொட்ட, ரத்தினம் வார்த்தைகளில் வடிக்க முடியாத துயரத்தில் வதங்கினார்.

இப்போதைய நினைப்போ..., உள்ளே உயிருக்குப் போராடும் மகள் எந்த நிலையில் இருக்கிறாளோ...' என்பதிலேயே சுழன்றது.

அவர் பீதியை அதிகரிக்கும் விதத்தில்..., செவிலியர், பரபரப்பாக இங்கும் அங்கும் உலாவுவதும்..., கையில் மருந்து பாட்டிலும்..., பக்கெட்டும், இன்னும் பிற பொருட்களோடு ஓட..., அடி வயிற்றில் பயப்பந்து சுழன்றது.

'ஆண்டவா..., என் புள்ளையை காப்பாத்திடு...' மனம் முதல் முறையாக கடவுளிடம் கோரிக்கை வைத்தது.

அதே நேரம்..., அவளை இப்படி ஒரு முடிவிற்கு தள்ளிய சூர்யாவின்மேல் கடும் கோபம் கிளர்ந்தது. 'இத்தனை வருடம் நான் பொத்தி வளர்த்த என் மகளை, ஒரே நொடியில் என்னிடமிருந்து பிரிக்கப் பார்த்தானே...' எழும் கோபத்தை இருக்கும் இடம் கருதி மறைத்துக் கொண்டார்.

ஆனாலும்..., 'அவன் இப்பொழுது என் கையில் கிடைத்தால்....' மனம் கருவிக் கொண்டது.

'அவளுக்கு மட்டும் ஏதாவது....' அந்த இடத்தில் தன் எண்ண ஓட்டத்தை நிறுத்திக் கொண்டார்.

'ஆகாது..., ஆகக் கூடாது..., என் ஒரே செல்லத்துக்கு..., செல்வ மகளுக்கு..., என் வாழ்வின் ஆதாரத்துக்கு..., எதுவும் ஆகிவிடக் கூடாது...', மனம் தவித்தது.

"அண்ணே...", பதறியடித்து ஓடிவந்த காவேரி அங்கே இருந்த நிலைமையைப் பார்த்து துடித்துப் போனாள்.

தரையில் விழுந்து புலம்பும் அண்ணியைத் தேற்றவா...? இடிந்துபோய் இருக்கும் அண்ணனை கவனிக்கவா...? தடுமாறியவள், வாய்விட்டு புலம்பும் அண்ணியை விட, இறுக்கமாக இருக்கும் அண்ணனே பிரதானம் எனத் தோன்ற..., “இப்படி இருக்காதண்ணே..., கொட்டிடு...”, தன் அண்ணன் இப்படி இடிந்துபோய் இருப்பதை காண முடியாத அவர் தங்கை காவேரி புலம்பினார்.

“என்னண்ணே ஆச்சு...? நம்ம தீபியா...? என்னால நம்பவே முடியலண்ணே” தன் ஆதங்கத்தையும்..., கேள்வியையும் முன்வைக்க,

“எல்லாம் பிறகு சொல்றேன்..., இப்போ...”, தனிமை வேண்டும் என அவர் அவர் சொல்லாமல் சொல்ல...,

“இப்படி இருக்கியேண்ணே..., என்னால பாக்க முடியலண்ணே. அவளுக்கு ஒண்ணும் ஆகாது..., நீ வேண்ணா பாரேன்..., கண்ணு முழிச்சு..., உன்னைய அப்பான்னு சொல்லத்தான் போறா...”, கலங்கிய தன் கண்களை முந்தானையால் துடைத்தவாறு..., அவருக்கு ஆறுதல் அளித்தாள்.

அந்த நேரம் அவருக்கு அந்த வார்த்தைகள் அவசியமாய் இருக்க..., அது ஏற்படுத்திய தாக்கமும் அதிகரிக்க, நிதானித்தவர், “எனக்கு ஒண்ணுமில்லை.. நீ போ..., அவளை அழ வேண்டாம்னு சொல்லு. அதெல்லாம் என் பொண்ணுக்கு எதுவும் ஆகாது... நீ அவளைப் பாரு...”, தங்கையின் கைபிடித்து, மனைவியின் பக்கம் நகர்த்தினார்.

“அண்ணே...”, தன் அண்ணனின் குரல், தைரியமாக காட்ட முயன்று தோற்று, நடுங்கியதை உணர்ந்தவளாக அழைக்க,

“போண்றன்ல....”, விட்டால் கோபம் வெடித்துவிடும் விடுவேன் என்னும் நிலையிலும், தங்கையை விரட்டினார்.

அண்ணனின் நிலை புரிந்தவளாக..., “மதினி..., எந்திரிங்க..., அதெல்லாம் நம்ம தீபிக்கு எதுவும் ஆகாது. முதல்ல கண்ணைத் தொடைங்க...”, கைத்தாங்கலாக அவளை எழுப்பினாள்.

“மதினி..., என் பொண்ணு என்னை இப்படி ஏமாத்திட்டாளே.., ஒரு வார்த்தை சொல்லலியே..., மனசு ஆறலையே..., நான் இனிமேல் என்ன செய்வேன்....?”, தனக்கு ஒரு ஆதரவு வந்துவிட்ட எண்ணத்தில் புலம்பலைத் தொடர,

“நீ இப்போ வாயை மூடப்போறியா இல்லையா...”, மகளைப்பற்றி எதிராக எதுவும் நினைக்க முடியாத விதத்தில் அந்த தந்தையின் உள்ளம் தவித்தது.

“மதினி..., கொஞ்சம் பேசாமத்தான் இருங்க...”, அண்ணன் கோபப்படுவதை தாங்காமல், அவளை அடக்கினாள்.

அதே நேரம்..., செவிலி ஒருத்தி வெளியே வர..., “நர்சம்மா..., என் பொண்ணு...”, தன் வயதையும் மீறி அவளிடம் ஓடினார் ரத்தினம்.

“சார்..., அதான் பாத்துட்டு இருக்காங்கன்னு சொல்றேனே. விஷம் மட்டும் குடிச்சால் பரவாயில்லை..., அதை ஜூஸோட சேர்த்து குடிச்சால்..., விஷம் வேகமா பரவாதா...? நிலைமை தெரியாமல்..., கொஞ்சம் விலகுங்க..”, அவள் வேலையைச் செய்ய வேண்டிய அவசரம், அவளை அவ்வாறு பேசத் தூண்டியது.

“ஐயோ...”, அதைக் கேட்ட சியாமளா மேலும் கதறத் துவங்க..., செவிலியின் பேச்சை கேட்ட பிறகு..., காவேரியாலும் தன் தைரியத்தை பிடித்து வைக்க முடியவில்லை.

நேரம் கடந்து கொண்டிருக்க..., வெளியே இருக்கும் இவர்கள் நிலைதான் கவலைக்கிடமாக மாறிக் கொண்டிருந்தது.

மனம் திக் திக்கென அதிரும் உணர்வை அனைவரும் அனுபவித்தார்கள். உயிரை கையில் பிடித்துக் கொண்டு இருப்பது என்னவென்று, அவசர சிகிச்சைப்பிரிவுக்கு வெளியே காத்திருக்கும் ஒவ்வொருவரும் உணரும் தருணம்...

‘நோயாளி பிழைத்துவிட்டார்...’ என்ற ஒற்றை வார்த்தையை மட்டுமே எதிர்பார்க்கும் நொடிகள்..., நரகம் என்று சொன்னால் சரியாக இருக்குமா?

இயற்கையின் பாதிப்புகளையே தாங்கிக்கொள்ள முடியாது என்னும்போது, சுயமாக எடுக்கும் கொடூர முடிவுகள்....,

அவர்களையே ஆதாரமாகக் கொண்டு சுழலும் உறவுகளை நடைபிணம் ஆக்கி விடாதா....?

என்னவென்றும்..., எப்படி நடந்ததென்றும்..., அறிந்துகொள்ளும் வேகத்தை காவேரியால் அடக்கவே முடியவில்லை.

தன் அண்ணியை ஓடிப்போய் தாங்கியவள்..., "நம்ம வீட்டில் எப்படி மதினி விஷம் வந்தது...?", அவளால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

"சரி..., எதுக்கு அவ இப்படி ஒரு முடிவுக்கு வந்தா...? அதுவும் கல்யாணம் முடிவாகி இருக்கும் இந்த நேரத்தில்..., மாப்பிள்ளை வீட்டுக்குத் தெரிஞ்சா...", அவள் புலம்ப...

"ஆமா..., பொல்லாத மாப்பிள்ளை..., அந்த நாய்தானே இதுக்கெல்லாம் காரணம்....", தன்னை மீறி வெடித்த ரத்தினம்..., காரணத்தை சுருக்கமாக உரைக்க, ஸ்தம்பித்தாள் காவேரி.

"என்னண்ணே சொல்ற..., மாப்பிள்ளை நம்ம தீபியை கட்டிக்க மாட்டேன்னு சொன்னாரா...? நிசமா...?", நம்ப முடியாமல் கேட்டாள்.

"இன்னும் என்ன மாப்பிள்ளை..., என் பொண்ணை சாவுக்கு தள்ளி இருக்கான்..., அவன்...", அவர் வார்த்தையை முடிக்கும் முன்பு..., அவசர சிகிச்சை பிரிவுக்குள் இருந்து மருத்துவர் வெளியே வர..., அனைவரின் கவனமும் அவரிடம் திரும்பியது.

"டாக்டர்....", அனைவரும் அவரிடம் விரைய,

"பேஷன்ட் இப்போ ஓகே. ஸ்டொமக் வாஷ் பண்ணி இருக்கு. த்ரோட் எல்லாம் புண்ணாகி இருக்கு. கொஞ்சம் கவனமா பாத்துக்கணும். பேசி அவங்களை டென்ஷன் பண்ணாதீங்க. ஆறுதலா இருங்க..., இப்போ உடனே பார்க்க வேண்டாம். ரூமுக்கு மாத்தின பிறகு போய் பாருங்க...", அவர் செல்ல, அவ்வளவு நேரமாக டென்ஷனாக இருந்த அவர்கள் முகம் மலர்ந்தது.

# சிப்பி – 3

தமக்கையின் பதறிய வார்த்தைகளும், தவிப்பும் துடிப்புமான செய்கையும், அவனைத் திட்டி உதிர்த்த வார்த்தைகளும்..., சாப்பாட்டை விட்டு எழுந்தே விட்டான்.

“அக்கா...”, அவள் கையைத் தொட, ஆத்திரமாக அவன் கையை தட்டி விட்டாள்.

“ஏன்க்கா...?”, அவள் அலட்சியத்தை தாங்க முடியாமல் கேட்டான்.

“என்னை அப்படி கூப்பிடாதடா..., உன்னால அங்க ஒரு உயிர் ஊசலாடிட்டு இருக்கே..., ஐயோ...., நான் என்ன செய்வேன்...?”, ஒப்பாரி வைத்தாள்.

“என்ன சந்திரா சொல்ற...?”, அவ்வளவு நேரமாக அமைதியாக இருந்த முருகன் கேட்க,

“தீபிகா மருந்தைக் குடிச்சுட்டாளாங்க...”, அவள் உதிர்த்த வார்த்தைகள், ஆண்கள் இருவரையும் நிலை குலையச் செய்தது.

“என்ன...”, முருகன் திகைக்க..., “என்னக்கா சொல்ற...?”, சூர்யா வீறிட்டான்.

“இந்த கண்றாவிக்குதான் நான் அப்போவே சொன்னேன்..., உன் தம்பிக்கு பொண்ணு பாக்குற வேலை எல்லாம் வேண்டாம். அவன் நினைப்பெல்லாம் பெரிய லெவல்ல இருக்கு, நமக்கு ஒத்து வராதுன்னு படிச்சு படிச்சு சொன்னேனே கேட்டியா?

“இப்போ பார்..., ஒரு அப்பாவி பொண்ணோட உசுரை பணயமா வச்சு ரெண்டு பேரும் விளையாண்டு இருக்கீங்க. இந்த நிச்சயமே வேண்டாம்னு தலைப்பாடா அடிச்சுகிட்டேன்...., கேட்டியா நீ...., உன் தம்பிக்கு ஆயிரம் பொண்ணு கிடைக்கும்..., அந்த பொண்ணோட உசுர் போனா வருமா...?”, தன் கோபம் அத்தனையும் வார்த்தைகளில் கொட்டினான்.

“இவன் நினைப்புக்கு ஏத்த மாதிரி அவ இருக்கான்னு தானே பாத்தேன். இப்படி என் தலையில் கல்லைப் போடுவான்னு நான் எதிர்பாக்கலையே...”, அவள் மூக்கை சிந்த,

“எதிர் பாத்துருக்கணும்..., நூறு பொண்ணு பாத்தியே..., ஒரு பொண்ணையாவது நேர்ல பார்க்க வந்திருக்கானா...? பொறவு எந்த தகிரியத்தில் நீ இதைச் செய்த...? இப்போ அந்த பொண்ணுக்கு மட்டும் ஏதாச்சும் ஆகட்டும்...., உன்னைய பொலி போட்டுடுறேன்...”, விரல் நீட்டி எச்சரித்தவன், தன் சட்டையை மாட்டிவிட்டு கிளம்பிவிட்டான்.

அவன் செல்லவே..., சந்திரா என்ன செய்வது எனத் தெரியாமல் அழுகையைத் தொடர, சூர்யா தன் அக்காவின் அருகில் இருந்து எழுந்து சற்று தூரமாகச் சென்று அமர்ந்தான்.

தாய் தந்தை இறக்கும்பொழுது அவனுக்கு வயது பதினைந்து. அவன் அக்காவுக்கு வயது பதினெட்டு. அப்பொழுதே அவளுக்கு அண்ணனாக இருந்து, தைரியமாக நிலைமையை கையாண்டவன்.., இந்த நிமிடம்..., அடுத்து என்ன செய்வது எனத் தெரியாமல் திண்டாடிப் போனான்.

மரணம்..., அது அத்தனை சுலபமானதா...? ஒரு பக்கம் கோபமும்..., ஒரு பக்கம் பயத்தையும் அவனுக்கு ஒருங்கே அளித்தது.

தனக்காக மரணத்தை தழுவும் அளவுக்கா என்மேல் நேசம் கொண்டுள்ளாள்?’ இந்த நினைப்புதான் முதலில் எழுந்தது.

அந்த நேரம்..., ‘இப்படி ஒரு கோழையையா அக்கா எனக்காக பார்த்தாள்...?’ இந்த நினைப்பு மட்டும் எழவே இல்லை.

‘அங்கே என்னவாயிற்றோ...?’ உள்ளம் பதறியது. உடனே சென்று பார்க்கச் சொல்லி நெஞ்சம் விம்மியது.

‘யோசிக்காமல் செய்து விட்டேனோ...?’, முதல் முறையாக தன் செய்கையை ஆராய்ந்தான்.

சந்திராவோ விடாமல் புலம்பிக் கொண்டிருக்க, தன்னை சற்று மீட்டவன்..., “அக்கா..., எந்த ஹாஸ்பிட்டலாம்...?”, மெதுவாக வினவினான்.

“ஏன்..., அவ உசுரு மிச்சமிருந்தால் அதையும் போக வைக்கவா...?”, வெடுக்கென கேட்க, அவன் உள்ளம் அடிபட்டு போனது.

‘நீ செய்ததுதான் தவறு...’ என அவளிடம் சொல்ல வாய் வராமல், கையைக் கழுவியவன், கிளம்பி வெளியே சென்றுவிட்டான்.

****மருத்துவமனையிலோ...., தீபிகாவை அறைக்கு மாற்றி ஒரு நாள் கடந்திருக்க, இதழ் வெடிக்க..., தொண்டை எரிய..., மிகவும் சோர்வாக படுக்கையில் படுத்திருந்தாள்.

அவளைச் சுற்றிலும் இருந்த உறவுகள் கூட்டம்..., சரமாரியாக கேள்விகளை அடுக்கிக் கொண்டிருந்தது. எதற்கும் பதில் சொல்லாமல்..., இமைகளை மூடிக்கொண்டு படுத்திருந்தாள்.

சியாமளா அழுகையும்..., நிம்மதியுமாக..., அந்த அறையின் மூலையில் சுருண்டு அமர்ந்திருக்க..., ரத்தினமோ..., மகளின் முகத்தையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

கடந்த ஒரு நாளாக..., தன் மகளை திரும்பப் பார்ப்போமா என ஏங்கிப் போனவராயிற்றே. எவரின் கேள்விக்கும் மகள் பதில் உரைக்காமல் இருக்க, அவள் தலை கோதியவர்..., “ஏங்கண்ணு..., இந்த அப்பன், ஆத்தாளை விட..., அவன் எந்த விதத்தில் உனக்கு உசத்தியா போயிட்டான்...?”, குரல் நனைந்து வெளியேறியது.

அவ்வளவு நேரமாக அமைதியாக இருந்தவள்..., “அப்பா..., அப்படில்லாம் இல்லப்பா...., எனக்கு நீங்கதான்பா முக்கியம். உங்க கௌரவம்தான் முக்கியம்...”, சட்டென எழுந்தவள், தன் தந்தையை கட்டிக் கொண்டாள்.

தந்தையும் மகளும் கண்கள் பனிக்க அமர்ந்திருக்க, “இப்போ என்னத்துக்கு மேலுக்கு முடியாத புள்ளைய அழ வச்சுட்டு இருக்க...? கண்ணைத் துடை..”, அண்ணனை அதட்டிய காவேரி..., நிலைமையை சீராக்க முயன்றாள்.

“என் ராசாத்திய..., தாங்க முடியலையே...”, அவ்வளவு நேரமாக தைரியமாக இருந்தவர்..., கடந்த மணி நேரங்களில் இருந்து வெளிவர முடியாமல் குலுங்கினார்.

“அப்பா..., அழாதீங்கப்பா..., இனிமேல் நான் இப்படி பண்ண மாட்டேம்ப்பா...”, தானும் அழுதாள்.

அதே நேரம்..., அறைக்குள்..., அவ்வளவு நேரமாக சலசலப்பாக இருந்த இடம், ஒரு மயான அமைதிக்கு உள்ளாக..., அனைவரின் கவனமும் வாசல் பக்கம் திரும்பியது.

“இவன் என்னத்துக்கு இங்கே வந்திருக்கான்...?”.

“இவர்தானே மாப்பிள்ளை...?”.

“எம்புட்டு தைரியம் பாரேன்...”, விதவிதமான குரல்கள் எழ, மகளை படுக்கையில் கிடத்திய ரத்தினம்..., ஆத்திரமாக எழுந்து வந்தார்.

‘இவன் ஏன் இப்போ இங்கே வந்தான்...?’ காவேரியின் நினைவு இதுவாகத்தான் இருந்தது.

“நான் சொல்வதை....”, அவன் துவங்கும் முன்பே...,

“நீ எதுக்குடா இங்கே வந்த...? அதான் எல்லாம் முடிஞ்சு போச்சுன்னு சொல்லிட்டு போனியே..., இங்கன இருந்து போய்டு..., நான் கொலைகாரனா மாற முன்னாடி போய்ட்டா உனக்கு நல்லதா போய்டும்...”, தன் மொத்த கோபத்தையும் வெளிப்படுத்தினார்.

“என்னங்க..., கொஞ்சம் பொறுமையா...?”, சியாமளா எழுந்து ஓடி வர,

“இதுக்கு மேலே என்னடி பொறுமை வேண்டிக் கிடக்கு..., அதான் மொத்தமா முடிஞ்சு போச்சே...”, வெடித்தவர்,

“இன்னும் ஏன் இங்க நிக்கற..., நீயா வெளியே போய்ட்டா உனக்கு கௌரவம்..., நான் கழுத்தை பிடிச்சு வெளியே தள்ளினா..., அது உனக்கு அசிங்கம்...”, விட்டால் அவனை அங்கேயே அடித்து துவைத்துவிடும் வேகம் அவரிடம்.

அவனோ..., அவரது கோபத்தில் சற்றும் பாதிக்கப் படாதவனாக, பார்வையோ..., படுக்கையில் கிடந்த தீபிகாவிடமே நிலைத்தது. கிராமத்து பெண்களுக்கே உரிய நிறம்..., திருத்தமான முகம். தலை கலைந்து, சோபையாக காட்சி தந்தாலும்..., அவளிடம் ஒரு வசீகரம் இருப்பதாகவே அவனுக்குத் தோன்றியது.

தான்.. அறைக்குள் நுழைந்த நிமிடம்..., அவள் கண்களில் வந்து போன மின்னலும்..., அதைத் தொடர்ந்த வலியும்..., அதை மறைக்க அவள் இமைகளை மூடிகொண்ட விதமும்..., அவனை அசைத்துதான் பார்த்தது.

“என்னை மன்னிச்சுடுங்க....”, அவன் மன்னிப்பை வேண்ட,

அவள் உடல்மொழியில் ஒரு விரைப்பும்..., ரத்தினத்திடம் ஒரு ஆத்திரமும் வெளிப்பட்டது.

“மன்னிக்கிறதா...? நிக்க வச்சு கழுத்தை அறுத்துட்டு..., சுளுவா மன்னிப்பு கேக்கற..., உன்னை வெட்டிப் போட்டா கூட என் ஆத்திரம் அடங்காதுடா. இதில் மன்னிப்பா கேக்கற...? வெளியே போடா...”, அவர் எகிற,

“நான் உங்க பொண்ணுகிட்டே பேசணும்...”, அவன் கேட்க, அவன் நெஞ்சு தைரியம் கண்டு சுற்றி இருந்தவர்கள் வியக்கவே செய்தார்கள்.

அதற்கு ரத்தினம் பதில் கொடுக்கும் முன்பு..., “இவர் யார்ப்பா...? இவர் என்னத்துக்கு என்கிட்டே பேசணுமாம்...?”, தீபிகாவின் குரல் இடையிட, அனைவரின் பார்வையும் அவளிடம் திரும்பியது.

“என்னங்க..., நான்...”, அவன் துவங்க..., அவனை கை நீட்டி தடுத்தவள்...,

“உங்களை இப்போ வரைக்கும் யார்ன்னு தெரியாது..., தெரிஞ்சுக்கவும் விருப்பம் இல்லை...., நீங்க போகலாம்...”, அவள் வார்த்தைகள், அவன் புருவதை உயரச் செய்தது.

“தீபி..., வார்த்தை...”, சியாமளா பரிதவிக்க..., “ஏய்..., நீ ஏண்டி என் பொண்ணை தடுக்கற...? அவ இந்த ரத்தினத்தோட வித்துடி..., அப்படி சொல்லும்மா...”, தன் மகள் அருகில் சென்றவர், அவளை தோளோடு அணைத்துக் கொண்டார்.

“வெளியே போடா...”, ரத்தினம் உச்ச டெசிபலில் கத்த, நின்ற இடத்தில் இருந்தவன், தீபிகாவை அழுத்தமான ஒரு பார்வையில் ஏறிட, அதைக் கண்ட ரத்தினம்..., ரத்தம் கொதிக்க, அவனை கழுத்தைபிடித்து வெளியே தள்ளும், வேகத்தோடு அவனை நெருங்கினார்.

அந்த நொடியில்..., தீபிகாவின் கண்களில் அப்பட்டமான அச்சம் வந்து போனது.

# சிப்பி – 4

சுற்றிலும் இருக்கும் உலகம் ஒரு நொடி அதன் இயக்கத்தை நிறுத்தியதாகவே அனைவருக்கும் தோன்றியது. சீறி ஓடிய ரத்தினத்தை தடுக்கவோ..., அசையாமல் நின்ற சூர்யாவை விலகிச் செல்ல சொல்லவோ கூட, அங்கிருந்த யாருக்கும் முடியாத நிலை. பதறிய நிமிடம் எதுவும் செய்யத் தோன்றாதே..., அப்படியான சூழல்...,

இந்த நிமிடம்..., ரத்தினம், சூர்யாவை அடித்துவிட்டால்..., அதற்குப் பிறகு அனைத்தும் முற்றாக முடிந்து போகும் நிலை.

நொடியில் சுதாரித்த காவேரி..., “அண்ணே...”, கழுத்து நரம்பு புடைக்க கத்த, அதற்கு முன்பாகவே..., அவர் செய்யப் போவதை உணர்ந்து, அங்கிருந்து வெளியேறியிருந்தான் சூர்யா.

அந்த அரை நொடிக்கும் குறைவான நேரத்தில்..., அவன் பார்வை..., தீபிகாவிடம்..., ‘உனக்காகத்தான்....’ என சொல்லிச் சென்றது.

அந்த நொடி..., நிச்சயம் பெண்கள் மனதில் ஒரு பெரும் நிம்மதி பிறந்தது மட்டும் உண்மை.

‘அப்பாடி....’ அவளையும் மீறி..., அவள் கோபத்தையும் மீறி, மனதுக்குள் எழுந்த நிம்மதியை, எந்த விதத்தில் எடுத்துக் கொள்ள என்றே அவளுக்குத் தெரியவில்லை.

அவள் இதயம் அவ்வளவு நேரம் துடிக்க மறந்து..., அப்பொழுதுதான் துடிப்பதுபோல்..., படபடவென அடித்துக் கொண்டது.

‘என்னை வேண்டாம் என சொல்லிச் சென்ற ஒருவனுக்காகவா இந்த தவிப்பு...’ தன்னையே கேட்டுக் கொண்டவளுக்கு..., கிடைத்த பதில்..., நெஞ்சையே விம்மச் செய்தது. எழும் கண்ணீரை அடக்க..., நெஞ்சுக்கூடு உலர்ந்து போகும் உணர்வு.

கண்ணீர் வழிந்து தன் மனதை காட்டிக் கொடுத்துவிடுமோ..., அஞ்சியவள், இமைகளை இறுக மூடிக் கொண்டாள். தொண்டைக்குழிக்குள் கசந்து வழியும் உணர்வு. இதை எப்படி தவிர்க்க..., அவளுக்குப் புரியவே இல்லை.

“கொஞ்சம் கூட நிதானமாவே இருக்க மாட்டியாண்ணே..., எங்க இருக்கோம்..., என்ன பண்றோம்..., எதுவும் தெரியாதா. ஏற்கனவே அந்த நர்சம்மா வேற எல்லாம் வெளியே போங்கன்னு கத்திட்டு போச்சு. இப்போ...”, அவள் சொல்லி முடிக்கும் முன்பே...

“என்னம்மா...., ஏற்கனவே சொல்லிட்டு தானே போனேன்..., பேஷண்டை தனியா விடுங்க.., டிஸ்டர்ப் பண்ணாதீங்கன்னு. சொன்ன பிறகும் இவ்வளவு கூட்டம் சேர்த்துட்டு இருக்கீங்க. அத்தோட..., ஒரே கூச்சல் வேற..., பக்கத்து ரூம்ல எல்லாம் பேஷன்ட் நிம்மதியா இருக்கணுமா வேண்டாமா? பெரிய டாக்டர் வேற சத்தம் போடறார்.

“முதல்ல எல்லாம் கிளம்புங்க... பேஷண்டோட ஒரு ஆள் மட்டும் இருந்தால் போதும்..., போங்க எல்லாம்..., அட போங்கம்மா..., சுத்தி உக்காந்து ஒப்பாரி வச்சுகிட்டு..., அந்த புள்ளையை நிம்மதியாவே இருக்க விட மாட்டேங்கறீங்க...”, அனைவரையும் அறையை விட்டு கிளப்பியே விட்டாள்.

“அட..., போறோமத்தா..., எங்க புள்ளைக்கு ஒண்ணுன்னா நாங்க நிம்மதியா வீட்டில் சோறு உண்க முடியுமா...?”, ஒரு பாட்டி குரல் கொடுக்க,

“உங்களுக்கு சோறு இறங்கலைன்னா..., இங்கே வந்து இந்த புள்ள சாப்பாட்டையும் கெடுக்கணுமா...? போங்கம்மா....”, அவளும் இரண்டு நாட்களாக பார்த்துக் கொண்டுதானே இருக்கிறாள். தீபிகாவை நிம்மதியாக இருக்க விடுவதுபோல் அவளுக்குத் தெரியவில்லை.

மற்றவர்கள் கிளம்பிவிட..., ரத்தினமும், சியாமளாவும், காவேரியும் அறைக்குளே இருக்க..., “உங்களுக்கு வேற தனியா சொல்லணுமா? அவ அம்மா மட்டும் இருக்கட்டும்..., நீங்கல்லாம் கிளம்புங்க...”, அசையாமல் அங்கேயே நின்றாள்.

“எப்போ நாங்க வீட்டுக்கு கிளம்பலாம்...?”, காவேரி அவளிடம் கேட்க,

“அதெல்லாம் நீங்க டாக்டர் ரவுண்ட்ஸ் வரப்போ கேட்டுக்கோங்க..., அவங்களை கொஞ்சம் நிம்மதியா இருக்க விடுங்க.., போங்க...”, விட்டால் கழுத்தை பிடித்து வெளியே தள்ளி விடுபவள் போல் நின்றாள்.

“மதினி..., புள்ளைய பாத்துக்கோங்க..., நான் சோறு கொண்டாறேன்..., வாண்ணே..., ஒருவா சாப்பிட்டு வரலாம்...”, அவர்களும் கிளம்பி விட்டார்கள்.

ரத்தினம், “பொறவு வாரேன்..., டாக்டர் வந்தா எப்போ வீட்டுக்கு போகலாம்னு கேட்டுப்போடு...”, துண்டை உதறி தோளில் போட்டவாறு சென்றார்.

அனைவரும் வெளியேறிய பிறகுதான்..., தீபிகாவால் நிம்மதியாக மூச்சு கூட விட முடிந்த உணர்வு. தனிமை அவள் மனதை இலகுவாக்க..., மூடிய இமைகளுக்குள் இருந்து, கடைவிழியோரம் கண்ணீர் வழிந்தது.

அப்பொழுது..., அவள் தலையைக் கோதியது அவள் தாயின் கரம்..., “அம்மாடி..., எதையும் நினைக்காத கண்ணு...., எல்லாம் சரியா போயிடும். அம்மா சொல்றேன் இல்ல...”, வாஞ்சையாக மகள் தலை கோதினாள்.

அந்த இதம்..., அவளை இன்னும் உடைத்துப் போட..., “அம்மா....”, எழுந்து தாயை கட்டிக் கொண்டாள். தாய் அறியாத சூலா..., சூர்யாவோடு திருமணம் பேசத் துவங்கியது முதல், மகளது கண்களில் தெரிந்த சந்தோசம்..., பரவசம்..., திருமண நிச்சயத்துக்குப் பிறகு தெரிந்த உற்சாகம், கனவு..., ஒரு தாயால் மட்டுமே உணர்ந்து கொள்ள முடியும்.

அவளுக்கு அவனை அவ்வளவு பிடித்திருக்கிறது என்பதை உணர்ந்ததாலேயே, கணவன் தயங்கியபொழுது கூட, ‘புள்ளைக்கு புடிச்சிருக்கு..., என்ன யோசனை பண்றீங்க...’ என கணவனை முடுக்கியவராயிற்றே.

அதேபோல்..., சூர்யா திருமணம் வேண்டாம் என்று சொன்னவுடன்..., மற்றவர்கள் அறியாதவாறு அவள்மேல் முழு

கவனம் செலுத்தியதால் மட்டுமல்லவா அவளை உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்க முடிந்தது.

தன் தோள் சாய்ந்து அழும் மகளை அணைத்துக் கொண்டவர்..., “எதா இருந்தாலும் பேசிடு கண்ணு. எங்களுக்கு இருக்கறது நீ ஒத்த புள்ள..., நீ இல்லாமல்..., எங்களுக்கொசரமாவது நீ இருக்கணும் கண்ணு...”, மகளை கடிந்துகொள்ள முடியாமல்..., ஆதங்கமாக..., ஏக்கமாக..., தன் உள்ளக் கிடக்கையை கொட்டினார்.

“என்னைய மன்னிச்சிடுங்கம்மா..., ஏதோ ஒரு வேகத்தில் செஞ்சுட்டேன்...”, தாயின் கழுத்தை கட்டிக் கொண்டாள்.

‘ஒண்ணுகிடக்க ஒண்ணு ஆகி இருந்தால்...’ மனதில் இருந்த நினைப்பை வெளியிடவில்லை.

‘ஆண்டவா..., என் புள்ளையை இப்படி தவிக்க விடுறியே...’ கடவுளிடம் சாடியது.

அதே நேரம்..., அறையின் கதவை படீரென திறந்துவிட்டு, புயல்போல் உள்ளே நுழைந்தாள் சித்ரா. வந்த வேகத்தில்..., தாயின் அணைப்பில் இருந்த தீபிகாவை ஒற்றை இழுப்பில் இழுத்தவள், அவள் கன்னத்தில் ஓங்கி இரண்டு அறை விட்டாள்.

“ஏய் சித்ரா..., புள்ளைய விடுடி..., அடிக்காதே...”, அவள் கையை தடுத்தார்.

“புள்ளையா..., இவளா..., அப்போ மடியில படுக்க போட்டு பாலைக் குடு. புள்ளையாம் புள்ளை..., இவளை என்னத்துக்கு நீ ஆஸ்பித்திரிக்கு தூக்கிட்டு வந்த...? அங்கனையே சாகட்டும்னு விட்டுத் தொலைக்க வேண்டியது தானே...”, தன் அத்தையிடம் கொதித்தவள்...,

“ஏண்டி..., உனக்கு எம்புட்டு தைரியமிருந்தால் இப்படிச் செய்வ...? அம்புட்டு சீக்கிரம் நீ போய்டுவியா...?”, அவள் வார்த்தைகள் ஆத்திரமாக வெளிவந்தாலும், கண்களோ கண்ணீரை வடிக்க, தன் அத்தை மகளை தன்பக்கம் இழுத்து அணைத்துக் கொண்டாள்.

சித்ரா..., வேறு யாருமல்ல..., காவேரியின் மகள்..., தீபிகாவை விட இரண்டு வயது பெரியவள்..., திருமணம் முடித்து இரண்டு வயது குழந்தைக்குத் தாய். அவளது கணவன் பட்டாளத்தில் வேலையில் இருப்பதால்..., எப்பொழுதும் தாய் வீட்டிலேயே இருப்பாள்.

காவேரியின் வீடும்..., ரத்தினத்தின் வீடும் இரண்டு தெரு தள்ளி இருப்பதால்.., சித்ராவும், தீபிகாவும் நெருங்கிய தோழிகளாகவே இருந்தார்கள். மனதுக்குள் நினைப்பது, இருப்பது என அனைத்தையும் பகிர்ந்து கொள்ளும் அளவுக்கு நெருக்கம்.

அந்த உரிமையிலே வெளிப்பட்டது அவளது செய்கை. “அத்த..., நீ வீட்டுக்குப் போ..., நான் இவளை பாத்துக்கறேன்...”, அவள் குரலில், இப்பொழுது நீ போயே ஆக வேண்டும் என்ற கட்டளை இருந்தது.

“ரெண்டு நாளா எங்கே போயிருந்தியாம்..., இப்போ வந்து என் அம்மாவை விரட்டுற...?”, தீபிகா பொரிய,

“அது..., ஐத்த போவட்டும்..., விலாவரியா சொல்லுறேன்...”, நொடித்துக் கொள்ள,

“நல்ல புள்ளைக...’, சித்ராவை பார்த்துவிட்டால்..., தன் மகள் சரியாகி விடுவாள் என்பதால்..., நிம்மதியாக கிளம்பி விட்டார்.

தாய் செல்லவே..., சற்று நேரம் அங்கே அமைதி நிலவ, “நீயும் எதையாச்சும் ஆரம்பிக்காதே சித்ரா..., ஏற்கனவே எல்லாம் சேர்ந்து என்னைய நோகடிச்சுட்டாங்க...”, மெதுவாக உரைத்தாள்.

“எனக்கு அதெல்லாம் வேண்டாம்..., உன்னோட நடிப்ப உன் அப்பன் ஆத்தா வேணா நம்பலாம்..., நான் நம்ப மாட்டேன்....”, சித்ரா உரைக்க, அமைதியாக தலை கவிழ்ந்தாள் தீபிகா.

## சிப்பி – 5

தன் கேள்விக்கு பதில் உரைக்காமல்..., தலை கவிழ்ந்த தீபிகாவின் கன்னம் தாங்கி, அவளை நிமிர்த்தியவள், “இப்படி ஒரு விஷப்பரீட்சை வைச்சே ஆகணுமா? ஏதாவது தப்பா போயிருந்தா...? நினைக்கவே நெஞ்சு

பதறுதுடி..., பாவி..., ஏண்டி இப்படிப் பண்ண...? என்கிட்டே கூட பேசணும்னு உனக்குத் தோணலையா?

“எல்லாத்தையும் சொல்லுவியேடி..., இப்போ மட்டும் என்ன...? ஓ..., புருஷன் நினைப்பை எப்படி இவகிட்டே சொல்றதுன்னு நினைச்சுட்டியோ...”, ஆதங்கமாக கேட்க, அவள் கரத்தை கெட்டியாக பற்றிக் கொண்டாள்.

“தெரிஞ்ச பதிலுக்கு கேள்வி கேட்டால் நான் என்னத்த சொல்ல...?”, விம்ம,

“அதையே உன் வாயால கேட்டா எனக்கு குளு குளுன்னு இருக்குமில்ல அதான்...”, இறுக்கமாகவே பதில் கொடுத்தாள்.

“நான் இப்போ இதைச் செய்யலன்னா..., இந்நேரம் என் வீட்டில் நாலு மாப்பிள்ளை உக்காந்து இருப்பான்..., என்னால..., அதை தாங்க முடியாது சித்ரா. அதுக்கு..., இந்த ஆஸ்பத்திரி எவ்வளவோ பரவாயில்லை...”, கண்ணீர் குரலில் உரைத்தாள்.

அதுதான் நடந்திருக்கும் என்பது சித்ராவுக்கும் தெரியுமாகையால், ஒரு நிமிடம் அமைதி காத்தவள்..., “அதுக்கு..., உன்னோட அப்பாரு இதுக்குமேலேயும் சும்மா இருப்பாருன்னு நினைக்கறியா...? இது எத்தனை நாள் தாங்கும்...?”, அவளிடமே திருப்பிக் கேட்க, தீபிகாவிடம் பதில் இருக்கவில்லை.

“வெளியே அவனைப் பாத்தேன்...”, திடுமென அவள் உரைக்க, வெடுக்கென அவளை நிமிர்ந்து பார்த்தாள்.

அதை குறித்துக் கொண்ட சித்ரா..., “சரி..., எதுக்கு வந்திருக்கானாம்...? அத்தோட..., அவன் நர்சம்மா கிட்டே பேசுறதைப் பாத்தா..., இங்க வந்திருப்பான் போல..., உங்கப்பா இதுக்கு ஒத்துப்பாரா...?”, நிச்சயமாக நடக்காது என்பது அவள் வார்த்தைகளிலேயே வெளிப்பட்டது.

“சிந்துன பாலுக்கு வருத்தப்பட்டா ஒண்ணும் பண்ண முடியாது. அதை அள்ளவும் முடியாது..., அள்ளினாலும் உபயோகப்படாது...”, அவள் வார்த்தைகளில் துக்கம் வடிந்தது.

“உன் மனசை அதுக்கு சமாதானப் படுத்திட்டியா....?”, சித்ரா துருவ,

“மனசுக்கு அடம்பிடிக்க மட்டும்தான் தெரியும்..., உனக்கு வாய்ச்சது இவ்வளவுதான்னு தெரியும் போது..., அடங்கிடும்...”, அவள் பார்வை பரிதவித்தது.

அதை உணர்ந்து கொண்ட சித்ராவுக்கு..., மனதுக்குள் ரத்தம் வடிந்தது. இந்த காதல் எவ்வளவு கொடூரமானது..., மனதுக்குள் இருப்பவனை மறக்க முடியாமல்..., சாகும் அளவுக்கு ரிஸ்க் எடுத்திருக்கிறாளே. அதிலும்..., இதை, தான் செய்யவில்லை என்றால்..., உடனடியாக வேறு மாப்பிள்ளை பார்த்து விடுவார்கள் எனத் தெரிந்து..., கண்முன்னே சாவை நிறுத்த எவ்வளவு தவித்திருப்பாள்...., அவள் துயரம் கண்டு சித்ரா கலங்கினாள்.

“ஏன் அப்படி நினைக்கணும்...?”, நிறுத்தியவள்..., “உன் அத்த மவளா நான் இதை சொல்ல மாட்டேன். ஆனா..., உனக்கு ப்ரண்டா வேற போயிட்டனே..., சொல்லாமல் இருக்க முடியலை. நம்ம சொந்தத்தை எல்லாம் இங்க இருந்து விரட்டினது அவன்தான் போல...”,அவள் உரைக்க,

தன் எச்சரிக்கையையும் மீறி..., தீபிகாவின் கண்கள் ஆர்வத்தை பிரதிபலிக்க, அதைப் பார்த்தவாறே..., “அவன்தான் நர்சம்மாகிட்டே சொல்லி இதை சாதிச்சான் போல..., அவன்மட்டும் அதைச் செய்யலன்னா.., நான் இப்போ கூட வந்திருக்க மாட்டேன்...”, சித்ரா உரைக்க, எங்கோ ஒரு மூலையில் அவள் மனதை அரிக்கத் துவங்கினான்.

“ஓ...” ஒரு மாதிரி குரலில் உரைத்தவள்...., ‘இதையெல்லாம் புரிஞ்சு செய்யிறவருக்கு என் மனசு மட்டும் புரியலையோ...., எங்கே..., அவர்தான் என்னைப் பார்க்கவே இல்லையே..., பொறவு எப்படி என் நினைப்பு புரியுமாம்...’, மனம் வேதனையில் கசங்கியது.

தன் மனதைப் புரியாமல்..., ஒரே வெட்டாக வெட்டிவிட்டுப் போன அவன்மேல் கோபம் வர மறுப்பதை அவள் என்ன செய்ய? மூன்று வருடமாக ஊர் உலகத்துக்குத் தெரியாமல்..., மனதுக்குள் பொத்தி வைத்த அவன் நினைப்பு...

இது நடக்குமா நடக்காதா என கடந்த வருடங்கள் கடந்திருக்க, இதோ கைகூடி விட்டது என கை சேரப் போகையில்..., அவனே

வெட்டி எறிந்த வலி..., அது கொடுத்த வேதனை, ரணம்..., அதைத் தாங்க முடியாமல்தான் துவண்டு போனாள்.

இடையில் இருந்த அந்த ஒரு மாதமும் இல்லாமல் போய்விட்டால் நன்றாக இருக்குமே..., நெஞ்சம் விம்மியது.

“நான் வேணா அவன்கிட்டே பேசவா..?”, சித்ரா கேட்க,

“உன்னோட அத்த மவ இன்னும் அம்புட்டு தரம் தாழ்ந்து போய்டல...”, ஒரு பெண்ணுக்கே உரிய தன்மானம் சீறியது.

“அப்படின்னா...”, எதையோ கேட்கப் போனவள்..., வார்த்தைகளை அப்படியே நிறுத்தி விட்டாள்.

தீபிகாவின் மனதுக்குள் இருக்கும் காதல் அவளுக்குத் தெரியாமல் போயிருந்தால்..., மற்றவர்கள் போல..., உயிரை விடத் துணிந்து விட்டாளே என சாடி இருப்பாள்.

ஆனால்..., அவள் மனதுக்குள் இருக்கும் நினைப்பிற்கு தானும் ஒரு விதத்தில் காரணம் என்பதால்..., அவளால் அதை உரைக்க முடியவில்லை. அந்த நினைப்பால் தானோ என்னவோ..., தீபிகாவை உடனே வந்து காண, அவள் மனசாட்சி அனுமதிக்கவில்லை.

“இங்கே வந்தானா...? என்ன சொன்னான்...? மாமா ஏதாச்சும் சொன்னாரா?”, அவள் மனம் அதிர்ந்தது. தன் மாமனைப் பற்றி அறிந்தவளாயிற்றே.

“ஆமா..., மன்னிப்பு கேக்கணுமாம்...., யாருக்கு வேணும் அவர் மன்னிப்பு...”, இதழ்கள் துடிக்க, “எனக்கு யாருன்னே தெரியாதுன்னு சொல்லிட்டேன்..”, கோபமாக சொல்ல முயல, ‘சொல்லி விட்டேனே...’ என அவள் பரிதவிப்பதை சித்ரா உணர்ந்து கொண்டாள்.

அந்த நேரத்திலும்..., தந்தையிடமிருந்து அவனை காப்பாற்றி இருக்கிறாளே..., சித்ராவின் நினைப்பு இதுவாகத்தான் இருந்தது.

“மன்னிப்பு கேக்கணுமா...?”, சித்ராவுக்கே கோபம் பொத்துக்கொண்டு வந்தது.

“அவனை இனிமேல் எங்கயாச்சும் பாத்தேன்…”, அவள் எகிற, “விடு…, ஒண்ணும் வேண்டாம்…”, சட்டென அவளைத் தேக்கினாள்.

“ஏண்டி…, இப்படி மாத்தி மாத்தி பேசி என்னை சாவடிக்கிற…? இப்போதைக்கு நாம அதைபத்தி பேச வேண்டாம். எல்லாம் பொறவு பாத்துக்கலாம்…”, தீபிகாவின் பேச்சில் குழம்பிப் போனாள்.

அதே நேரம் மருத்துவர் வந்து அவளை பரிசோதிக்க, “டாக்டர்…, இவ சரியாயிட்டா தானே…, நாங்க வீட்டுக்கு கூட்டி போகலாமா?”, சித்ரா விசாரிக்க,

“தாராளமா கூட்டி போகலாம். கொஞ்ச நாள் காரம் கொடுக்காதீங்க அவ்வளவுதான்….”, அவர் சென்றுவிட்டார். அதன் பிறகு…, “நீ செத்த படு…, நான் இங்கயே இருக்கேன்…”, அவள் அருகில் அமர்ந்து கொண்டாள்.

“சின்னவனை எங்கே…?”, தீபிகா கேட்க, “அவனை நம்ம பொன்னாத்தா கிட்டே விட்டு வந்தேன். இங்க வந்தா…, ரணகளம் ஆக்கிடுவானே… அதான்…”, தீபிகாவின் தலை கோதினாள்.

“உங்க எல்லாத்தையும் ரொம்ப கலங்கடிச்சுட்டேனா…?”, பரிதாபமாக கேட்க,

“இல்லன்னு சொல்ல மாட்டேன்…”, வேடிக்கைபோல் உண்மையை உரைக்க, தீபிகாவின் முகம் சற்று வாடிப் போனது.

“இப்போ என்னத்துக்கு இதெல்லாம்…, உன்னைய அப்படியெல்லாம் நாங்க சும்மா விட்டுட மாட்டோம். தைரியமா இரு…, பாத்துக்கலாம்…”, அவள் தைரியம் கொடுக்க, அவள் கரத்தை தன் கைகளுக்குள் அடக்கியவள், இமைகளை மூடிக் கொண்டாள்.

“இனிமேல் எனக்கு அவர் வேண்டாம்…”, இமைகளை அழுந்த மூடிக்கொண்டு அவள் உரைக்க, தீபிகாவின் கையை ஆதரவாக தட்டிக் கொடுத்தாள்.

மனமோ..., ‘ஆண்டவா..., எல்லாத்தையும் சரியாகவே நடத்தி முடித்திருக்க கூடாதா...?”, அவளால் வேறு என்னதான் செய்ய முடியும்? தெய்வத்தை நாடினாள்.

அதே போல்..., மருத்துவமனையை விட்டு வெளியேறிய சூர்யாவுக்கு..., மனதுக்குள் இனம் புரியாத பாரம். வதங்கிய கொடியென படுக்கையில் கிடந்த தீபிகாவின் தோற்றமும், அவள் கண்ணின் மின்னலும், தன்னைத் தெரியாது என உரைத்த கோபமும்..., அவள் தந்தை, தன்னை அடிக்க நெருங்குகையில், அவள் கண்ணில் தெரிந்த பயமும்...,

நிச்சயம் தான் தவறு செய்துவிட்டோம் என்பதை அவனுக்கு பொட்டில் அடித்தாற்போல் உணர்த்தியது.

தனக்காக ஒருத்தி உயிரை விடவே துணிந்திருக்கிறாள்..., அவளை கைவிடுவதா...? இனிமேல் விட்டுக் கொடுப்பதா...? தன் லட்சியம், கனவு, எதிர்பார்ப்பு அனைத்தையும் தூக்கி தூரப் போட வைத்தது.

ஒரு உயிரை விடவா, தன் நினைப்பு பெரிது...’ தன்னையே கேள்வி கேட்கத் தூண்டியது. இந்த இரண்டுநாள் தாமதம் கூட தவறு என்று தோன்றியது. முதல் நாளே வந்து அவளை பாக்கத்தான் எண்ணினான். ஆனால்..., அவனை தேக்கியது முருகனே.

மருத்துவமனையில் நிலைமை சரியில்லை எனக் கூறி அவனை தடுத்து விட்டான். சொந்தங்கள் கலைந்த பிறகு சென்று பார்க்கச் சொல்ல, அவர்களோ, அந்த இடத்தை விட்டு அசையும் வழியையே காணவில்லை.

எனவேதான்..., இன்று அவர்கள் இருந்தாலும் பரவாயில்லை அவளைப் பார்த்து விடுவது என்ற முடிவோடு வந்தான். அங்கே இருந்த நிலையைப் பார்த்தால்..., அவளை நிம்மதியாக யாரும் இருக்க விடுவதுபோல் தோன்றவில்லை.

தனிமை மட்டுமே அவளுக்கு நிம்மதியை கொடுக்கும் என எண்ணியவன், செவிலியைப் போய் பார்த்து, உறவினர்களை சத்தம் போட்டு விரட்டச் சொல்லி கேட்டுக் கொண்டான். அவள் சத்தம் போடவில்லை என்றால்..., அவளை ஏய்த்து

விடுவார்கள் என்பதையும் சேர்த்து சொல்லவே..., செவிலி அவ்வாறு செய்தாள்.

இந்த தனிமையில் என்னைக் கண்டால் பேசுவாளா...? அறிய உள்ளம் விரும்பியது.

அவள் அப்பாவின்மேல் அவனுக்கு கொஞ்சம் கூட கோபம் வரவில்லை. அவருக்கு வரவில்லை என்றால்தான் ஆச்சரியம் என்றே தோன்றியது. அவர் அடித்தாலும் வாங்கிக்கொள்ளும் உறுதியோடுதான் நின்றான்.

ஆனால்..., தீபிகாவின் கண்களில் தெரிந்த அதிர்ச்சியும், பரிதவிப்பும்..., தான் அடி வாங்குவதை அவள் விரும்பவில்லை என்பதாலேயே அங்கிருந்து அகன்றான்.

தான் அவளை வேண்டாம் என்று உதறிவிட்டு வந்த பிறகும்..., அவள் வலிக்கும், வேதனைக்கும் தான்தான் காரணம் என தெரிந்த பிறகும்..., அவளுக்கு தன்மேல் இருக்கும் நேசம்..., இவன்தான் உன் மாப்பிள்ளை என்று சொன்னால்..., இப்படி ஒரு நேசம் வந்துவிடுமா என்ன? அவனால் யூகிக்க முடியவில்லை.

இந்த நேசத்தை விட்டு விடுவதா...? எண்ணியவன்..., அவள் கோபம் கூட, தன் செய்கையால் எழுந்த பிரதிபலிப்பே என்பதை உணர்ந்தவனுக்கு, அவளது தந்தையை சமாளிப்பதை விட, அவளை சமாதானம் செய்வது மட்டுமே பெரிதாக இருக்கும் என்பது புரிய, மனதுக்குள் ஒருவித வலி.

## சிப்பி – 6

சோர்ந்துபோய் வீட்டுக்கு வந்தவனை, வா என்று கூட சந்திரா அழைக்கவில்லை. அதைப் பார்த்த முருகன்..., “இந்தா..., சூர்யா வந்திருக்கான் பாரு..., சோத்த போடு...”, அதட்டினான்.

விருட்டென எழுந்து சென்றவள்..., சாப்பாட்டு குண்டான்களை கொண்டுவந்து கூடத்தில் அடுக்கினாள். அவள் கோபம், அவள் செய்கையில் வெளிப்பட, முயன்று தன் கோபத்தை அடக்கிக் கொண்டான் முருகன்.

“இம்புட்டு நேரமா எங்கே போயிருந்தானாம்...?”, முருகனிடம் அந்த கேள்வியாக இருந்தாலும், அது தனக்கானது என்பதை உணர்ந்த சூர்யா, அமைதியாக முருகனை ஏறிட்டவன், சாப்பாட்டு பாத்திரங்களுக்கு முன்னர் சென்று அமர்ந்து கொண்டான்.

சூர்யா தன் தமக்கையோடுதான் இருந்தான்..., அவனது திருமணத்துக்குப் பிறகு, அவனை தனியாக வைக்க.., வீடும் கட்டியாயிற்று. வாரம் ஒருமுறை சென்று அந்த வீட்டை சுத்தம் செய்துவிட்டு, விளகேற்றிவிட்டு வருவாள்.

மேலே எதையும் துருவாமல்..., தம்பிக்கு சாப்பாட்டை பரிமாற, அவன் உண்டு முடிக்கும் வரைக்கும் அங்கே எந்தவிதமான பேச்சுக்கும் இடம் இருக்கவில்லை.

அவன் கை கழுவிவிட்டு வரவே..., “சூர்யா..., அதெப்படிடா..., உன்னால் இம்புட்டு நெஞ்சழுத்தத்தோட இருக்க முடியுது. என் நெஞ்சே பதறுதுடா..., அவளை கண்ணால காங்கற வரைக்கும் கண்ணில் உறக்கம் பிடிக்காது போல..., ஆனா நீ...,

“அதெப்படிடா..., ஒண்ணுமே நடக்காத மாதிரி ரெண்டு நாளா இருக்க? உன் மனசு என்ன கல்லா...?”, அவள் கேட்க கேட்க, முகம் இறுகி நின்ற சூர்யாவைக் காண முருகனுக்கே சற்று பரிதாபமாகத்தான் இருந்தது.

“நீ செய்து வச்சதுக்கு அவன்மேல் காஞ்சா ஆச்சா....”, முருகனின் கோபம் மொத்தமும் மனைவியிடம் மட்டுமே பாய்ந்தது.

“தம்பிக்கு கல்யாணம் பண்ணிப் பாக்கணும்னு ஆசைப்பட்டது தப்பா...?”, அவள் வெடிக்க,

“அது தப்பில்லை..., அவனைப் பத்தி தெரிஞ்சும்..., பொண்ணைப்பத்தி சரியா சொல்லாமல்..., அவன் முழு சம்மதமில்லாமல்..., உன் இஷ்டத்துக்கு முடிவெடுத்ததுதான் தப்பு..., ஏதோ..., அந்த பொண்ணு பொழைச்சுகிட்டா இல்லன்னா..., போனா உசுரு திரும்ப வருமா...?

“சரி..., நீயும் உன் பங்குக்கு செய்த..., உன் தம்பியும் அவன் பங்குக்கு செய்தாச்சு. இதுக்கு மேலே..., அங்கே போய் எதுவும் செய்து வைக்க வேண்டாம். புரிஞ்சுதா...? இத்தோட

எல்லாத்தையும் நிறுத்திக்க. இனிமேல் உன் தம்பி எந்த பொண்ணைப் பாத்து புடிச்சிருக்குன்னு சொல்றானோ..., அவளை பேசி முடிக்கலாம் அவ்வளவு தான்...", விஷயம் இத்தோடு முடிந்தது என தீர்த்து உரைத்தான்.

"அவங்களைப் பாத்து ஒரு வார்த்தை...", துவங்கியவள், கணவனின் கண்களில் கோபத்தைக் காணவே வார்த்தைகளை அப்படியே நிறுத்தி விட்டாள்.

"இதோ நிக்கறானே உன் தம்பி..., இப்போ ஆஸ்பத்திரிக்குத்தான் போயிட்டு வந்திருப்பார்..., அவரே எல்லாம் நல்லா பேசியிருப்பார். அதனால்... நீ இனிமேல் உன் வேலையை மட்டும் பாரு சரியா...".

"ஏண்டா தம்பி..., ஆஸ்பத்திரிக்கு போனியா...? தீபிகா எப்படிடா இருக்கா? சாத்துக்குடி ஏதாச்சும் வாங்கிப் போனியா?", அவள் கேட்க, தன் தலையிலேயே பட் பட்டென அடித்துக் கொண்டான் முருகன்.

'ஏன்..' என்பதுபோல் அவள் கணவனை ஏறிட..., அந்த சூழலிலும் சூர்யாவின் இதழ்களில் சிறு புன்னகை எட்டிப் பார்த்தது.

இதுதான் சந்திரா..., எதிலும் வெள்ளந்தியாக சிந்திக்கும் குணம்...,

"ஆமா..., அவன் சம்பந்தம் பேசப் போனான் சாத்துக்குடி வாங்கிட்டு போக. ஏண்டி..., விஷம் வைக்காத குறையா அந்த புள்ளையை கொன்னுட்டு, அதுக்கு சாத்துக்குடி வேற..., உன் தம்பியை பிழியாம விட்டாகளான்னு முதல்ல கேளு...", அவன் சாட,

"அடிச்சாங்களாடா...", அவள் கவனம் அதில் செல்ல,

"ஏண்டி.., அந்த புள்ள எப்படி இருக்குன்னு கேப்பியா..., அதை விட்டுட்டு..., கல்லு குண்டு மாதிரி இருக்க இவனுக்கு கவலைப்படுற?", முருகன் இடையிட...,

"அதானே..., தீபிகா எப்படிடா தம்பி இருக்கா? பேசினாளா...? உன்னைய அவளுக்கு ரொம்ப புடிக்கும்டா. நான் போனாலே...,

அவங்க என்னைய பத்தி கேட்டாங்ளான்னு ஆசையா கேப்பா..., அவளைப்போய்..., போடா...”, சலித்துப் போனாள்.

“அக்கா..., அவளுக்கு என்னைய தெரியுமா? அதாவது..., நான் கேக்கறது உனக்கு புரியுதா?”, அவள் தன்னைத் தெரியாததுபோல் பேசியதை வைத்து அவன் வினவினான். அவள் கண்களில் தெறித்த மின்னல்..., தன்னை அவளுக்குத் தெரியும் என உணர்த்தினாலும், நூறில் ஒன்றாக கெஸ் செய்திருப்பாளோ என்பதனால் கேட்டான்.

‘இவள் கேட்டதுக்கு இது பதில் இல்லையே....’ முருகனின் கண்கள் மைத்துனனை அளவிடத் துவங்கியது.

அவன் கண்களில் தெரிந்த தடுமாற்றம்..., சலனம்..., பதட்டம்..., ‘இது இப்பொழுது நல்லதுக்கு இல்லையே...’ செய்துவைத்த காரியங்கள் அவனை இப்படித்தான் சிந்திக்கச் செய்தது.

திருமண நிச்சயம் வரைக்கும் போயிருக்கிறார்கள் என்றால்..., நிச்சயம் தன் புகைப்படத்தையாவது பார்க்காமலோ.., அவளுக்கு காட்டாமலோ இருக்க மாட்டார்கள் என்பது அவனுக்கும் தெரியும். ஆனாலும்..., தான் புகைப்படத்தில் இருப்பதுபோல் இல்லையோ..., என்ற சந்தேகம் அவனை அப்படி கேட்கத் தூண்டியது.

“ஏன் தெரியாமல்..., நான்தான் உன் போட்டோவை அவளுக்கு தனியா வேற ஒண்ணு கொடுத்தேனே...”, வேகமாக உரைக்க, ‘இது எப்பொழுது நடந்தது...’ என முருகன் அவளை கூர்ந்து நோக்க.., பிடிபட்ட உணர்வில் விழித்தாள்.

“அப்போ எல்லாம் நீயே முடிவு பண்ணிட்ட..., இந்த வீட்டில் ஒரு ஆம்பளை இருக்கானே..., அவனைக் கேக்கணும்னு உனக்கு தோணவே இல்லை இல்ல...”, அவன் வெடிக்க, பதில் சொல்ல முடியாமல் விழித்தாள்.

“விடுங்க மாமா..., நான்தான் அவசரப் பட்டுட்டேன். எதுவா இருந்தாலும் வீட்டுக்கு வந்து அக்காகிட்டே பேசியிருக்கணும். அதை விட்டுட்டு..., வியாபாரத்தில் சட்டுன்னு முடிவெடுக்குற மாதிரி..., வாழ்க்கையிலேயும் முடிவெடுத்தது நான் செய்த தப்பு.

“அதிலும்...., இதில் மூணாவதா ஒருத்தி சம்பந்தப் பட்டிருக்கான்னு தெரிந்தும், துச்சமா போய் பேசிட்டு வந்தேனே..., என்னையச் சொல்லணும்” உண்மையான கவலையை அவன் குரலில் உணர்ந்தவர்கள், காலம் கடந்த செய்கைக்கு வருத்தப்பட்டு என்ன செய்ய என்ற விதத்தில் அமைதியாக இருந்தார்கள்.

“மாப்ள..., அதான் எல்லாம் முடிஞ்சு போச்சே..., இனிமேல் வருத்தப்பட்டு என்ன செய்ய? போய் வேலையைப் பார்..., இனிமேல் அதைப்பத்தி நாம பேச வேண்டாம்...”, முருகன் அனைத்தையும் முடிவிற்கு கொண்டுவர முயன்றான்.

“மாமா..., எனக்கு...”, இப்பொழுது இருக்கும் நிலையில், அவளை திருமணம் செய்ய வேண்டும் என எப்படிக் கேட்டவென்று தெரியாமல் அவன் தடுமாறிப் போனான். அதைச் சொல்ல சரியான தருணம் இதுவல்ல என்று அவனுக்குப் புரிந்துதான் இருந்தது. எனவே அவன் திணற,

அவன் செய்கையை சற்று வித்தியாசமாகத்தான் பார்த்தான் முருகன். சூர்யா, இதுவரை எதற்காகவும் தடுமாறி அவன் பார்த்ததே இல்லை. அப்படிப் பட்டவன்..., வார்த்தைகளும், செய்கையும் தடுமாறுவது என்றால்.., ‘பழனிமலை முருகா..., இவன் அடுத்த ஏழரையை கூட்றான் போலையே...’, மனதுக்குள் நொந்து போனான்.

“மாப்ள..., அதான் தைரியமா முடிவு எடுத்தாச்சே பொறவென்ன..., போய் வேலையைப் பார்..., இனிமேல் அதை ஆராய வேண்டாம்...., சொல்றது புரியுதா...?”, கண்டிக்கும் குரலில் வினவ, மையமாக தலையசைத்தான்.

“சரி மாமா..., நான் கடைக்கு கிளம்பறேன்...”, வீட்டில் இருந்து மனதை குழப்பிக் கொள்ள விரும்பாமல், அங்கிருந்து கிளம்பிவிட்டான்.

“என்னங்க..., பேசிட்டு இருக்கும்போதே கிளம்பிட்டான்...?”, அவள் திகைக்க, அவளுக்கு பதில் சொல்லாமல்..., தங்கள் மகனை பள்ளியில் இருந்து அழைத்து வர சென்றான்.

கடையைத் திறந்து அங்கே அமர்ந்தவனுக்கு..., எப்பொழுது தீபிகாவைக் காண்போம் என்பது மட்டுமே நினைப்பாக

இருந்தது. அவளை தான் எதிர்பாராத இடத்தில் காணப் போகிறோம் என்பதை அறிந்திருந்தால்...?

# சிப்பி – 7

ஒரு வாரம்..., பத்து நாள் ஓடியதே தெரியவில்லை. தீபிகா உடல்நலமும், மன நலமும் சற்று முன்னேற..., வீட்டை விட்டு வெளியே செல்வதை நினைத்தாலே அவளுக்கு சங்கடமாகத்தான் இருந்தது.

தான் வேலை செய்யும் பள்ளிக்கு கூடச் செல்லாமல்..., வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கொண்டாள். பெற்றவர்களுக்கும் அதைப் பார்த்து வருத்தம்தான் என்றாலும்..., அவள் மனம் புண்படும்படி எதையும் சொல்லிவிடக் கூடாது என்பதில் கவனமாக இருந்தார்கள்.

பெற்றவர்களுக்காக என உண்டு, உறங்கி..., பேசி என தன்னை இயல்பாக காட்டிக் கொண்டாலும்..., நெஞ்சை அறுக்கும் அந்த ஏமாற்றம் கொடுத்த வலியை ஜீரணிப்பது அவளுக்கு சற்று கடினமாகத்தான் இருந்தது.

அவள் மனதுக்குள் இருக்கும் ரணத்தை முழுதாக உணர்ந்தவள் சித்ரா மட்டுமே. அவளாலும் எதுவும் செய்ய இயலாத சூழல். தீபிகா வீட்டுக்குள் இருக்கும் வரைக்கும், தன் நினைவுகளில் இருந்து வெளியேற மாட்டாள் என்பதை உணர்ந்த சித்ரா...,

“இன்னும் எம்புட்டு நாள் இந்த மோட்டுவளையவே வெறிச்சுகிட்டு உக்காந்து இருக்கலாம்னு இருக்க...?”, தன் அறையில் கட்டிலில் முடங்கியிருந்த தீபிகாவின் அருகில் அமர்ந்தவளாகக் கேட்டாள்.

“வேற என்ன செய்ய...?”

“இம்புட்டு நாள் என்ன செஞ்சுட்டு இருந்தியோ அதைத்தான். ஏன் உனக்கு மட்டும் முழுவாண்டு லீவை இப்பவே குடுத்துட்டாங்களா என்ன? இல்லல்ல அப்போ நாளையில் இருந்து கிளம்பி பள்ளிக்கூடத்துக்கு போ...”, கண்டிப்பாக உரைத்தாள்.

“பள்ளிக்கூடத்துக்கா..., அங்க போய்..., எந்த மூஞ்சியோட அவங்களை எல்லாம் பாப்பேன்...?”, சங்கடமும், துக்கமுமாக கேட்டாள்.

“ம்கும்..., இதுக்குன்னு என்ன புது மூஞ்சியா வாங்க முடியும்? எல்லாம் இந்த மொகரையே போதும்..., முதல்ல கிளம்புற வேலையைப் பார்..., புரியுதா...”.

“எல்லாரும் பகடி பேசுவாங்க...”.

“பின்ன..., நீ செஞ்ச காரியத்துக்கு பாராட்டு விழாவா நடத்துவாங்க...? பேசுறவங்க எங்க இருந்தாலும் பேசத்தான் செய்வாக..., உன்னோட அப்பத்தா பேசாததா...? வாயத் தொறந்தா வண்டி வண்டியா கழுவி ஊத்துது. அத கேட்டுகிட்டு பேசாம கெடக்க..., பள்ளிக்கூடத்தில் கேட்டா மட்டும் உங்க கிரீடம் விழுந்துடுமாக்கும்...,

“யார் என்ன கேட்டாலும்..., உம்பாட்டுக்கு போய்கிட்டே இரு.., பத்து நாள் பேசுவாக..., பதினோராவது நாள் அவங்களுக்கே சலிச்சு போய்டும். இல்லையா, புதுசா பேச, வேற விஷயம் கிடைச்சுடும்..., மத்தவகளுக்காக எல்லாம் நாம வாழ முடியாது, மொதோ அத புரிஞ்சுக்க....”.

“அப்பாரு...”, தீபிகா இழுக்க,

“யாரு..., உங்க அப்பாரா..., நீ கேட்டு எதையாச்சும் அவரு வேணாம்னு சொல்லுவாரா...? நீ இப்படி கெடக்கதுதான் அவருக்கு வருத்தமா இருக்கும். காலையில கிளம்பி..., பள்ளிகூடத்துக்கு போறேன்னு சொல்லிட்டு போயிட்டே இரு..., ஒண்ணும் கேக்க மாட்டார்...”, சித்ரா உரைப்பது உண்மை எனத் தெரிந்ததால்..., மௌனமாக கேட்டுக் கொண்டாள்.

“என்ன போறியா...?”, சித்ரா உலுக்க, சம்மதமாக தலை அசைத்தாள். ஆனாலும், ஊரை எதிர்கொள்ள பிரத்தியேக தைரியம் வேண்டும் என்றே அவளுக்குத் தோன்றியது.

அதை எல்லாம் விட..., எங்கே எப்பொழுது சூர்யாவைக் காணவேண்டி வருமோ என எண்ணுகையிலேயே..., மனதின் ஓரம் கொஞ்சம் நஞ்சம் ஒட்டிக் கொண்டிருக்கும் தைரியமும் வற்றிப் போகும் உணர்வு.

அவன் யாரோவாக இருந்த பொழுதே..., அவன் நடவடிக்கைகள், செய்கை, பேச்சு..., என அனைத்தையும் படம் பிடிக்கும் மனம், உரிமையுள்ளவனாக ஆகப் போகிறான் என்ற பொழுது வளர்த்துக் கொண்ட கனவு..., அது கலைந்து போனதை ஏற்க முடியாமல் மனம் தடுமாறியது.

நிச்சயம் அவனை எதிர்கொள்வோம் என நூறு சதவீதம் தெரிந்த பிறகு, எப்படி அதை செய்யப் போகிறோம்...? என்பதுதான் தவிப்பாக இருந்தது.

அவள் மௌனத்தையும், கண்களில் தெரிந்த பரிதவிப்பையும் சரியாக உணர்ந்துகொண்ட சித்ரா அவள் கரத்தைப் பற்றி அழுத்த..., “அவர் அம்புட்டு நல்லவரா இல்லாமல் இருந்திருக்கலாம்....”, அவளை மீறி வார்த்தைகள் வெளியேற..., கண்களோ கண்ணீரை சட்டென வடித்தது.

“தீபி...”, சட்டென அவளை தோளில் சாய்த்தவள்..., “இதுக்கு நான்தானே காரணம்..., என்னைய மன்னிச்சுடுடி..., இப்படியெல்லாம் ஆவும்னு எனக்கு சத்தியமா தெரியாதுடி...”, தீபிகா படும் துன்பம் பொறுக்காமல்..., நிலை குலைந்து போனாள்.

“நீயென்ன செஞ்ச..., எல்லாம் என் தப்புதான்..., மனசுக்குள்ளே ஆசையை வளத்துகிட்டது நான்தானே..., அப்போ.., தண்டனையையும் நான்தான் அனுபவிக்கணும்...”, தேம்பினாள்.

இருவரின் எண்ணங்களும்..., சூர்யாவைப் பற்றிய விஷயத்துக்குத் தாவியது. சூர்யாவின் வீடும்..., தீபிகாவின் வீடும் இரண்டு கிலோமீட்டர் தூரத்தில் இருந்தது. அதாவது..., தீபிகாவின் வீட்டைத் தாண்டி..., இரண்டு கிலோமீட்டர் சென்றால்..., சூர்யாவின் வீடு வரும்.

ஆனால்..., அவர்களுக்கு..., ஒரே ரேஷன்கடை..., ஒரே பேங்க்... ஒரே கூட்டுறவு வங்கி..., என அனைத்தும் பொதுவிலேயே இருந்தது.

அந்த சம்பவம் நடக்கும் வரைக்கும் சூர்யாவை தீபிகாவுக்கோ, சித்ராவுக்கோ தெரியாது.

அன்று பக்கத்து ஊர் கோவில் திருவிழா..., திருவிழா என்றாலே ஊரோடு திரண்டு, திருவிழா காணச் செல்வது வழக்கம். அன்றும் அப்படித்தான்..., ஊருக்குள் இருந்து அனைவரும் செல்ல..., மறுநாள் தீபிகாவுக்கு கல்லூரியில் செமஸ்டர் என்பதால் அவள் செல்லவில்லை.

அவள் செல்லாததால்..., அவளது பெற்றோரும் செல்லாமல் இருக்க...., சித்ரா.., காவேரியோடு திருவிழா காணச் சென்றாள்.

என்னதான் இருந்தாலும்..., தன் வயது பிள்ளைகளோடு திருவிழா காண்பதுபோல் இருக்காதே. எனவே..., தன் வயது பெண்களோடு அவள் சேர்ந்து கொள்ள..., சற்று நேரம் சுற்றிப் பார்த்த காவேரி..., இதற்குமேல் முடியாது எனத் தோன்ற..., வீட்டுக்கு கிளம்பி விட்டார்.

போகும் முன்னர்..., தன் மகளையும் அவர்களோடு அழைத்து வரும்படி சொல்லிச் செல்ல..., அவர்களும் ஒத்துக் கொண்டார்கள். ஆனால்..., நேரம் கடக்கையில்..., சித்ரா..., பொருட்கள் வாங்கும் ஆர்வத்தில் தன் கூட்டத்தை பிரிந்துவிட, அது அறியாத மற்றவர்கள்..., சித்ரா என்ற ஒருத்தி தங்களோடு வந்ததையே மறந்து கிளம்பி விட்டார்கள்.

அதற்கு காரணமும் இருந்தது. திருவிழா நடக்கும் ஊரில் இருந்து தங்கள் ஊருக்குச் செல்ல குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே பேருந்து வசதி உண்டு. அத்தோடு..., இரவில் கடைசி ட்ரிப் வண்டியை நம்பவே முடியாது. கூட்டம் இல்லை என்றால்..., வண்டியை ஓரம் கட்டிவிட்டு உறங்கி விடுவார்கள்.

மற்றவர்கள் அனைவரும் இறுதி வண்டியை நம்ப முடியாமல் கிளம்பி விட்டிருக்க..., கடைசி வண்டிக்கு அனைவரும் பஸ்ஸ்டாப்புக்கு வருவார்கள் என எண்ணிய சித்ரா..., அந்த நேரத்துக்கு அங்கே சென்றால்.., பேருந்து நிறுத்தத்தில் அவர்கள் ஊர்க்காரரர்கள் ஒருவரையும் காணவில்லை.

அதைக் காண்கையிலே அடிவயிற்றில் பயப்பந்து சுழல..., அடி வயிற்றில் அமிலம் சுரக்கும் உணர்வு.  கிராமமாக இருந்தாலும் சரி, பட்டணமாக இருந்தாலும் சரி, ஒரு பெண் தனியாக நின்றால்..., அவள் நிலை பரிதாபம் தானே.

நேரம் செல்லச் செல்ல..., அங்கிருந்த மற்ற ஊர்க்கார மக்கள் கூட்டம் கலைய.., சித்ராவுக்கு சர்வாங்கமும் நடுங்கியது. கடைசி பஸ் வர வேண்டுமே..., என ஒரு பக்கம் மனம் வேண்ட..., தான் ஒற்றையில் நின்றுவிடக் கூடாதே என மனம் தவித்தது.

பஸ்ஸை நம்பாமல்..., நடையைக் கட்டிவிடலாம் என்றாலோ..., ஊருக்குச் செல்லும் வழியில்... ஒரு கிலோமீட்டர் தூரத்துக்கு இருக்கும் முந்திரிக் காட்டை நினைத்தாலே பகீரென இருந்தது. பகல் வேளையில் கூட வயது பெண்கள் போக அஞ்சும் பாதை. அப்படி இருக்கையில்..., இரவில்..., அதுவும் தனியாக..., அவளுக்கு அழுகை வரும்போல் இருந்தது.

சாதாரணமாக பேருந்து வர வேண்டிய நேரம் கடந்து..., பதினைந்து நிமிடம் சென்றிருக்க..., அவள் கண்களில் நீர் வடியவே துவங்கி விட்டது.

அவர்கள் ஊரில் ஒன்பது மணியே நள்ளிரவு என்கையில்.., ஒன்பது முப்பது என்கையில்...., சித்ராவின் நிலையை சொல்லவே தேவையில்லை. பெண்கள் கூட்டம் முற்றாக அகன்றிருக்க..., ரெக்கார்ட் டேன்ஸ் ஆரம்பமாகும் அறிவிப்பு ஒலிப்பெருக்கியில் ஒலிக்கவே..., ஆண்கள் கூட்டம் திரளத் துவங்கியது.

அதில்..., ஒன்றிரண்டு இளவட்டங்கள் அவளை வட்டமிட..., மொத்தமாக நடுங்கிப் போனாள். தாயிடம் அலைபேசியை வாங்கிக் கொள்ளாத தன் முட்டாள்தனத்தை நொந்தவளாக..., சற்று முன்பாவது யாரிடமாவது அலைபேசியை வாங்கி தன் மாமனுக்கு பேசியிருந்திருக்க வேண்டும் என்ற காலம் கடந்த நினைவும் சேர..., என்ன செய்வதெனத் தெரியாமல் குலை நடுக்கம் கொண்டாள்.

அதே நேரம்..., அவளை சற்று நேரம் கவனித்துக் கொண்டிருந்த சூர்யா..., தான் செல்லும் பேருந்துக்குத்தான் அவளும் காத்திருக்கிறாளோ என ஐயம் கொண்டான்.

ஒரு அக்காவின் தம்பியாக..., ஒரு வயதுப் பெண்ணின் நிலையை அவனால் சரியாக உணர முடிந்தது. அதே நேரம்..., தான் இப்பொழுது அவளை நெருங்கினால்..., அவள் பேரச்சம்

கொள்ளவும் வாய்ப்பிருப்பதை உணர்ந்த சூர்யா..., தன் புருவம் தேய்த்து..., வேகமாக சிந்தித்தான்.

சட்டென ஒரு யோசனை பளிச்சிட..., தன் அலைபேசியை எடுத்தவன்..., தன் நண்பன் பரத்தை அழைத்தான். அந்தப் பக்கம் ரிங் போக..., தான் பேச வேண்டியதை மனதுக்குள் கோர்த்தவன், அவன் போனை எடுக்கவே...,

“டேய் பரத்..., நான் சூர்யா பேசறேன்டா. நம்ம வெக்காளியம்மன் கோயில் திருவிழாவுக்கு வந்தேன். வந்த இடத்தில்..., வழக்கம்போல் நம்ம பஸ்காரன் வண்டியைப் போட்டான் போல..., இப்போ ஊருக்கு வரணும்..., இங்கேதான் உன் ப்ரண்டு பாஸ்கர் இருக்கானே..., அவன் வண்டியைத் தருவானான்னு கேட்டுச் சொல்லேன். காலையில் திருப்பிக் கொடுத்துடுறேன்...”, சூர்யா கேட்க,

“சூர்யா..., அவனும் அங்கதான் இருக்கான். இப்போதான் நான் அவன்கிட்டே பேசிட்டு வைத்தேன். நீ பஸ்ஸ்டாப்புல நிக்கறியா..., இதோ உடனே வரச் சொல்றேன். நிச்சயம் செய்வான்...”, அலைபேசியை வைத்து விட்டு, பாஸ்கருக்கு முயன்றான்.

இவன் பேச்சைக் கேட்ட சித்ராவுக்கு..., தூரத்தில் கண்ட வெளிச்சம்போல், மெல்லிய நம்பிக்கை பிறக்க, அவனை ஏறிட்டாள்.

அவளை அப்பொழுதுதான் கவனித்தவன் போன்று..., “ஏங்க..., நீங்களும் அந்த 18c பஸ்ஸுக்கு தான் வெயிட் பண்றீங்களா? அவன் இன்னைக்கு வர மாட்டான் போல..., உங்ககிட்டே போனும் இல்ல போல..., இந்தாங்க..., உங்க வீட்டுக்கு பேசுங்க. யாரையாச்சும் வரச் சொல்றதா இருந்தா சொல்லுங்க. உங்களுக்கு காவலுக்கு நான் இங்கயே இருக்கேன்.

“இல்ல..., உங்களுக்கு என்மேல் நம்பிக்கை இருந்தால்..., என் ப்ரண்ட் ஒருத்தன் வண்டி கொண்டு வருவான்..., என்னோட வரதா இருந்தால் வாங்க...”, அவள் மிரண்டுவிடக் கூடாதே என வார்த்தைகளைக் கோர்த்தான்.

அவன் பேசவே..., அவளது கவனம் ஒன்றுகூடி..., கண்கள் கூர்மையாக அவனை அளவிட..., கூடவே அச்சமும் படர

அவனை ஏறிட்டாள்.

அதைப் பார்த்தவன்..., "ஏங்க..., கொஞ்சம் சாதாரணமா இருங்க..., இல்லன்னா சுத்தி இருக்க ஆளுங்க ஏதாச்சும் நினைக்கப் போறாங்க...., நான் காப்பிக்காட்டுக் காரன்தாங்க...", பரிதாபமாக உரைத்தான்.

அவன் பேச்சில் நம்பிக்கை எழுந்தாலும்..., முழுதாக நம்ப முடியாமல், அவள் கண்களில் அச்சம் விலகாமல் இருக்க, அதைப் பார்த்தவன், "நீங்க பயப்படுறது நியாயம்தான். எனக்கும் புரியுது...., உங்களை நம்ப வைக்க என்ன செய்யன்னு எனக்குத் தெரியலை.

"வேணா ஒண்ணு பண்றேன். என் செல்போனை நீங்களே கையில் வச்சுக்கோங்க..., அதோட...", தன் இடுப்பின் மடிப்பில் இருந்து சிறு பட்டா கத்தியை எடுத்தவன்,

"இது என்னோட கத்தி தான்..., சாக்கு மூட்டையை பிரிக்க எப்பவும் என்னோடவே வச்சிருப்பேன். இதை நீங்க கையில் வச்சுக்கோங்க. என்மேல் எப்போ நம்பிக்கை பொய்க்குதோ, அப்போ என்னைய நீங்க தாராளமா குத்தலாம்...", இரண்டையும் அவள் கையில் திணித்தான்.

அவன் தோற்றத்தையும்..., தன் நிலையையும் ஒப்பிட்டவள்.., அவனது ஒரு அறைக்கு தான் தாங்க மாட்டோம் என்பது புரிய, இன்னும் நம்பிக்கை இன்றியே அவனை ஏறிட்டாள்.

"ஏங்க.., இப்படிப் பாக்காதீங்க..., என்னவோ காவாலிப்பய உங்ககிட்டே வம்பு பண்றான்னு நினைக்கப் போறாங்க...", தூரத்தில் எங்கேயோ பார்வையைப் பதித்து..., அவளை விட்டு சற்று தூரத்தில் நின்றவன்..., சற்று உரக்க குரல் கொடுத்தான்.

"சரி..., இன்னுமே நீங்க என்னைய நம்பலை..., உங்களுக்கு இப்போ யார்ட்ட பேசணும் சொல்லுங்க..., அவங்களுக்கு நானே போனைப் போட்டு பேசறேன்..., என்னைய உங்க அண்ணனாவோ..., தம்பியாவோ நினைச்சுக்கோங்க..., எனக்கும் ஒரு அக்கா இருக்குங்க...", அவன் அலைபேசியில் எண்களை அழுத்த தயாரானான்.

அவனது இந்த வார்த்தைகள் அவளை சற்று நம்பத் தூண்டியது.

அத்தோடு..., “என் பேர் சூர்யா..., காப்பிக்காட்டில் அரிசி மண்டி, உர மண்டி வச்சிருக்கேன்..., என் விவரம் இதுதான். இதையும் சேத்தே சொல்லுங்க...”, அவளுக்கு நம்பிக்கை வர உரைத்தான்.

சற்று சிந்தித்தவள், இப்பொழுது தான் பெரியவர்களுக்கு அழைத்தால்..., ஊரையே ரெண்டு பண்ணிவிடுவார்கள் என்பதால்..., தீபிகாவின் எண்ணை அவள் உரைக்க, அந்த எண்ணை அழுத்தியவன்..., ரிங் போகவே..., அதை அவள் கையில் கொடுத்தான்.

“நீங்க பேசுங்க..., பாஸ்கர் வராப்ல இருக்கு..., நான் அவனைப் பாக்கறேன். அப்படியே..., நீங்க ஒரு பர்லாங்கு தூரம் நடந்துட்டா தேவலை..., நம்மளை ஒட்டுக்கா பாத்தா வம்பா போய்டும் அதான்....”, உரைத்தவன் விலகிச் சென்றான்.

அவன் செல்லவே..., தீபிகாவிடம் நிலைமையை உரைத்தவள்..., “பத்து நிமிஷத்தில் ஊர் எல்லையில் வந்துடுவேன்..., கொஞ்சம் அங்க வரைக்கும் வரியா..., நீ வந்தன்னா பெரியவங்கள சமாளிக்கலாம்..., இல்லன்னா எங்க அம்மாவே ஏழரையை கூட்டிடும்....”, இப்பொழுது சற்று தைரியமாகவே பேசினாள்.

“அடியேய்..., அத்த இங்கனதான் இருக்கு..., கடைசி பஸ் லேட்டா வருது போலன்னு புலம்பிகிட்டு இருக்கு..., என்னத்த செய்ய...?சரி நீ வா..., நான் நம்ம தாமரைய பாக்க வரேன்னு சொல்லிட்டு வாரேன்..., ஆனா அப்பாரு நம்பணும்...”, அவளும் பதட்டமானாள்.

“உன்னோட அப்பாரு..., நீ வெள்ள காக்கா பறக்குதுன்னு சொன்னா..., ஆமா நாலு பறக்குதுன்னு சொல்லுவாரு..., நீ வா..., ஆத்தாள வேண்டிக்கடி..., ஆனாலும் மனுஷன் நல்லவனாத்தான் தெரியறான்...”, உரைத்தவள், அவனது விவரங்களையும், அவன் சொன்னவற்றையும் உரைத்தவாறு..., இருட்டுக்குள் நடையை விரைவு படுத்தினாள்.

ஆனால்..., தீபிகாவுக்கு இதயம் தொண்டைக்குழியில் துடிக்கத் துவங்கியது. ஒரு வழியாக அடுத்த பத்தாவது நிமிடம்..., அவர்கள் ஊர் எல்லையில் சித்ராவை விட்டவன்..., அங்கிருந்த

தீபிகாவிடமும்...., அவளால் தாமரை என அழைக்கப்பட்ட தாமரைக் கண்ணன்.., அவர்கள் சித்தப்பா பையனோடு காத்திருக்க..., அவர்களிடம் பொறுப்பாக ஒப்படைத்துவிட்டே நகர்ந்து சென்றான்.

## சிப்பி – 8

சித்ரா தன் அத்தை மகளுக்கு அவனை அறிமுகப்படுத்த அழைத்த பொழுது கூட மறுத்து விட்டான். எப்பொழுதுமே பெண்களை கூர்ந்து கவனிக்கும் வழக்கம் அவனுக்கு இல்லை என்பதால்..., அங்கே இருந்த தீபிகாவை பெயரளவுக்கு கூட அவன் நிமிர்ந்து பார்க்கவில்லை.

அவ்வளவு ஏன்..., சித்ராவின் முகம் கூட அவன் மனதில் பதியவில்லை என்றால்..., அவன் எந்த அளவுக்கு அவளை கவனித்திருப்பான் என்பதை நீங்கள் யூகித்துக் கொள்ளலாம்.

நடந்து முடிந்த சம்பவத்தை, செய்த உதவியை சூர்யா வேண்டுமானால் மறந்து விடலாம்..., ஆனால் பெற்ற உதவியை.., அதுவும், எப்படி ஒரு சூழலில்..., நேரமறிந்து, குறித்த சமயத்தில் பெற்றுக்கொண்ட உதவியை பெண்களால் மறக்க முடியுமா?

சித்ராவுக்கு..., அந்த இக்கட்டில் இருந்து தன்னைக் காத்த அவன்மேல் பெரும் மதிப்பும், மரியாதையும் ஏற்பட்டு இருக்க..., தன் அத்தை மகளிடம் அவனைப்பற்றி, அவன் செய்கையைப் பற்றி..., அவன் எடுத்துக்கொண்ட முயற்சியைப் பற்றி விடாமல் புகழ்ந்து தள்ளினாள்.

அதைக் கேட்ட தீபிகாவுக்கு..., அவன்மேல் சிறு சலனம் விழுந்தது. அதைவிட..., அவர்கள் ஊருக்கு முந்தின பஸ் ஸ்டாப்புக்கு முன்னால் அவர்களை நிற்கச் சொல்லி..., பஸ் தூரத்தில் பிரேக்டவுண் ஆகி விட்டதால், நடந்து வர தாமதமாகிவிட்டது என சொல்லச் சொல்லி ஐடியா வேறு கொடுக்க..., அவன் சமயோசித புத்தி அப்பொழுதே அவளை வசீகரித்தது.

அதை ஊதி பெரிதாக்குவதுபோல்..., சித்ராவின் பேச்சும் சேர, அவனைப் பற்றி கேட்டுக் கொண்டிருப்பதே ஒரு சுகானுபவமாக இருந்தது. எந்த பேச்சில் துவங்கினாலும்...,

ஏதாவது ஒரு கட்டத்தில், சூர்யாவின் பேச்சுக்குத் தாவும் அவள் செய்கை..., சித்ராவை சற்று கவனிக்கத் தூண்டியது.

ஒன்றிரண்டு முறை சித்ரா பேச்சை மாற்ற முயன்ற பொழுதும்..., அந்த நேரம் அதைத் தவிர்த்தாலும், அடுத்த நிமிடம் அவனிடம் வந்து நிற்கும் அவளது ஆர்வம்..., அவளை யோசிக்கச் செய்தது.

“ஏய்..., என்னடி நினைச்சுகிட்டு இருக்க...? நினைப்பு முழுக்க எங்க இருக்கு?”, சித்ரா வினவ, பிடிபட்ட உணர்வில் விழித்தாள்.

“எல்லாம் சரியாத்தான் இருக்கு. நீ போ..., அத்த சத்தம்போடப் போகுது...”, அங்கே இல்லாத அத்தையை அவள் இழுக்க,

“எனக்கு புரிஞ்சு போச்சுடி...., நல்லா புரிஞ்சு போச்சு...”, சித்ரா போலியாக முறைக்க, பெண்கள் இருவரும் சிரித்து விட்டார்கள். இது அந்த வயதுக்கே உரிய சிறிய விளையாட்டுக்கள்..., தங்கள் இளமையை சுவாரசியமாக்கும் விஷயங்கள்..., அவர்கள் நாட்களையும் அழகாக்கியது.

தீபிகாவுக்கு அவனை மறுபடியும் ஒரு முறை காண வேண்டும் என்ற ஆர்வம் பிறந்தாலும், அதற்கான சாத்தியக்கூறுகள் அவர்கள் ஊருக்குள் மிகவும் குறைவு என்பதால் தன் படிப்பில் கவனம் செலுத்த துவங்கினாள்.

இந்த நேரத்தில் தான்..., அவனைப் பற்றிய அடுத்த விஷயம் அவர்கள் கவனத்துக்கு வந்தது.

அன்று வயலுக்கு மருந்தடிக்க..., பால்டாயில் வாங்கி வருவதாகச் சொல்லிச் சென்ற ரத்தினம் வெறும் கையாக வரவே...,

“என்னங்க..., மருந்து வாங்கிட்டு வரேன்னு சொல்லிட்டு..., இப்போ வெறும் கையோட வந்து இருக்கீங்க...? கட தொறக்கலையா என்ன..?”, அவர் கையில் தண்ணீர் சொம்பை கொடுத்தவாறு கேட்டாள்.

“கடையெல்லாம் தொறந்துதான் இருக்கு..., நம்ம ஊர்க்காரன்கிட்டே உரமெல்லாம் சரியா இல்லன்னு எல்லாம் ஒரே பேச்சு. அதான்..., காப்பிகாட்டுக்கு போனேன். அவன் பேர்

கூட...”, அவர் யோசிக்க, தீபிகாவின் செவிகள் இரண்டும் காப்பிக்காடு என்னும் விஷயத்திலேயே கூர்மையாகி இருக்க..., அவர் பெயரை யோசிக்கையில் இதயம் படபடத்தது.

தீபிகா, தன் அறைக்குள் இருந்து ஒருக்கழித்திருந்த கதவுக்கு பின்னால் வந்து நின்று கொண்டாள். அவனாக இருக்குமோ..., இருக்க வேண்டுமே..., மனம் படபடத்தது.

“என்ன பேரா இருந்தா என்ன..., நீங்க விஷயத்துக்கு வாங்க...”, சியாமளா குரல் கொடுக்க..., நிச்சயம் அந்த நேரம் தன் தாயை மனதுக்குள் அர்ச்சித்தாள் தீபிகா.

“இல்லடி..., இங்கிட்டு பேராவே இல்லை..., ஊருக்கே ஒட்டாமல்..., அவன் வேலைக்கு கூட ஒட்டாமல்..., நல்லா..., ஆங்..., சூர்யா..., அவன் என்னன்னா..., வயலுக்குன்னா பால்டாயில் தர மாட்டேன்னு சொல்லிட்டான்...”, அவர் அடுத்த விஷயம் பேச..., தீபிகாவுக்கோ எதுவும் செவியைத் தாண்டி நுழையவே இல்லை.

முயன்று தன்னை நடப்புக்குத் திருப்பியவள், தந்தையின் பேச்சில் கவனமானாள்.

“என்னப்பா இப்படி சொல்ற...? வயலுக்கு பூச்சிக்கு அடிக்கறது தானேன்னு சொன்னா..., வயக்காட்டுக்கு அதை அடிச்சா..., நல்லது செய்யிற பூச்சியும் செத்துப் போகும்..., நான் வேற மருந்து தரேன்னு சொல்லுறான். அது எப்படி இருக்கும்னு நமக்குத் தெரியாதே..., பேசாம வந்துட்டேன்.

“வந்த பொறகுதான்..., நம்ம பக்கத்து வயல்காரன பாத்தேன். அவன்கிட்டே விஷயத்த சொன்னா..., அவனும் அந்த கடைக்காரன்கிட்டே தான் கேட்டு..., அவன் சொன்ன மருந்தைத்தான் போட்டானாம். மகசூல் நல்லாத்தான் இருக்கு..., பூச்சியும் இல்லன்னு சொன்னான்.

“அதான் ஊருக்கு வந்துட்டோம்..., மறுபடி எங்க அலையறதுன்னு.. அவன்கிட்டே காசக் கொடுத்துட்டு வந்துட்டேன். இந்த காலத்திலும் இப்படி ஒருத்தன். காச வாங்கிப்போட்டு கல்லாவை நிரப்பாமல்..., செய்யிற தொழிலுக்கு மனசாட்சியோட இருக்கான் பாரு...,

இத்தனைக்கும் சின்னப் பய...”, அவனது நேர்மையை வியந்தார்.

இந்த விஷயத்தை அவள் சித்ராவிடம் உரைக்க..., “அதுக்கு...?”, சிரிப்புக் குரலில் அவளைச் சீண்ட..., “போடி குந்தாணி...”, தீபிகா அவளைக் குத்தினாள்.

“அம்மணி காட்டில் அடைமழை போல..., பாத்துடி..., இடி கிடி விழுந்துடப் போகுது...”, சித்ரா உரைத்து, அதற்கும் நாலு அடியை பெற்றுக் கொண்டாள்.

‘ஆனாலும் பார்க்கவே முடியலையே....’ தீபிகாவின் மனம் சிணுங்கியது.

“என்னடி...., இம்புட்டு நேரம் பிரகாசமா இருந்த மூஞ்சி சுருங்கிப் போச்சு. என்ன விஷயம்...?” புருவம் தூக்கினாள்.

“ஒண்ணும் இல்ல...” இழுத்தவள்..., தன் எண்ணத்தை தயங்கி, தயங்கி உரைக்க, “அவன் உனக்குதான்னா..., அந்த ஆண்டவனே அவனை உன் முன்னால் நிறுத்துவான் பாரேன்...” சித்ரா உரைக்க, ஒரு பெருமூச்சு அவளிடம் எழுந்தது.

சித்ராவுக்கு மனதுக்குள் மெல்லிய நடுக்கம்...., தன் அத்தை மகளின் நினைப்பு ஈடேறுமா...? எப்படியோ..., அவர்கள் இருவருக்குமே கட்டிக்கொள்ளும் முறையில் அத்தை மகன்கள் இல்லாததால் இருவரும் தப்பித்தார்கள்..., இல்லையென்றால்...,

எப்படியோ..., தீபிகாவுக்கு திருமணம் பேசும்பொழுது, தன் அத்தை சியாமளாவிடம் விஷயத்தை சொல்லிக் கொள்ளலாம் என அமைதி காத்தாள். நிச்சயம் தீபிகாவின் விருப்பத்துக்கு மாறாக அவர்கள் எதையும் செய்ய மாட்டார்கள் என்பது நூறு சதவீதம் உறுதியே.

ஆனால்..., சித்ராவின் வாக்கு நிறைவேறிய அன்று..., இரண்டு பெண்களுமே ஒரு நிமிடம் திகைத்துத் தான் போனார்கள்.

அன்று தீபிகாவுக்கு பேங்குக்கு சென்று டிடி எடுக்க வேண்டிய வேலை இருக்கவே..., சித்ராவையும் அழைத்துக் கொண்டு சென்றாள். ஃபாமை பில் செய்துவிட்டு தீபிகா வரிசையில்

நிற்க, சித்ராவோ அங்கிருந்த இருக்கையில் அமர்ந்து கொண்டாள்.

அதே நேரம்..., தீபிகா, பரபரப்பாக சித்ராவை நெருங்க..., "என்னடி..., அதுக்குள்ள டிடி எடுத்துட்டியா...? வெரசா வந்துட்ட...", அவள் முகம் பார்க்க, தீபிகாவின் பார்வையோ..., வேறொரு இடத்தில் நிலைத்திருப்பதைக் கண்டாள்.

'என்ன இவ..., கேட்டதுக்கு பதில் சொல்லாம..., எங்கயோ வெறிக்கறா...' எண்ணியவள் தானும் அங்கே பார்க்க, அங்கே சல்லானை ஃபில் பண்ணிக் கொண்டிருந்தான் சூர்யா.

"அடியேய்..., உனக்கு கண்ணுக்கே தெரியாம எங்கயோ ஒரு மச்சம் இருக்கு போலடி..., சாமி தானா வந்து தரிசனம் கொடுக்குது...", அவள் காதுக்குள் கிசுகிசுக்க, தீபிகாவோ அதை கொஞ்சம் கூட கவனித்ததாகவே இல்லை.

"விளங்கிடும்..., இன்னைக்கு டிடி எடுத்தாப்புலதான்..." சித்ரா சலிக்க, அதற்கும் அவளிடம் எதிர்வினை இருக்கவில்லை.

"ஏய்.., பாத்துடி..., நீ பாக்கறத பாத்தா நானே பத்திக்கிடுவேன் போல...", சித்ரா, தீபிகாவைக் கிள்ள, "ஸ்...ஆ..., ஏண்டி லூசே என்னைய கிள்ளிவிட்ட..." கையை பரபரவென தேய்த்துக் கொண்டாள்.

"அதுசரி..., இப்போ மாப்பிளை பாக்கத்தான் வந்தமா? அப்போ பாத்தாச்சு..., கிளம்புவோமா..." அவள் இருக்கையை விட்டு எழ, வேகமாக அவளைத் தடுத்தாள்.

"கொன்னே புடுவேன்...", தீபிகா சொல்லிக் கொண்டிருக்கையிலேயே..., சூர்யா இருந்த இடம் சிறு சலசலப்புக்கு உள்ளானது.

சூர்யா ஒருவனின் சட்டையை கொத்தாகப் பற்றி இருப்பதும்..., அவன், அவனுடைய பிடியில் இருந்து விலகி ஓட முயல்வதும் பார்வையில் பட, திகைத்துப் போனார்கள்.

"என்னடி நடக்குது அங்கே...", சித்ரா இருக்கையில் இருந்து எழ, அங்கே பெரும் கூட்டமே கூடி விட்டது.

“ஏண்டா நாயே…, யார்கிட்டே உன் வேலையைக் காட்ற…, உன் சல்லித்தனத்தை காட்ட உனக்கு வேற ஆள் கிடைக்கல…” மற்றவனின் கன்னத்தில் ஓங்கி அறைந்தான்.

பெண்கள் இருவரும் அங்கே செல்ல…, சூர்யாவின் முதுகின் பின்னால் ஒரு வயதானவர் அதிர்ச்சி நிறைந்த முகத்தோடு நின்று கொண்டிருந்தார்.

அதற்குள்ளாக…, பேன்க் செக்யூரிட்டி அவர்களை நெருங்கி…, “ஏம்ப்பா…, என்ன ஆச்சு…? என்னத்துக்கு இவனைப் போட்டு இப்படி அடிக்கிற…? அப்படி அவன் என்னதான் செஞ்சான்…?” அவன் கையில் இருந்து மற்றவனை விடுவிக்க முயன்றான்.

“என்ன செஞ்சானா…, இதோ இருக்காரே…, இந்த பெரியவர்…, அவரோட செக்கை, அவரோட அக்கவுண்ட்ல போடச் சொல்லி சொன்னா…, இந்த காவாளிப்பய…, அவன் அக்கவுண்ட் நம்பரை சலான்ல எழுதி கொடுத்திருக்கான்.

“ஒருத்தர் உபகாரம்னு கேட்டா…, வயசானவர்ன்னு கூட பாக்காமல், கொஞ்சம் கூட மனசாட்சியே இல்லாமல்…, இப்படி ஒரு ஈனத்தனம் செஞ்ச இவனை கொஞ்சச் சொல்றீங்களா…?” ஆத்திரமாகக் கேட்டான்.

எப்படி இவனால் இப்படி ஒரு செயலை செய்ய முடிந்தது? அங்கிருந்த அனைவருமே திகைத்துப் போனார்கள்.

“எப்படி தம்பி நீங்க கண்டு புடிச்சீங்க…?” அந்த காவலாளி வினவ,

“அதா…, இவன் சலானை பில் பண்ணி கொடுத்ததில் இருந்து இவன் மூஞ்சியே சரியில்லை. இந்த பெரியவர் வரிசையில் போய் நிக்கவே…, நைசா கிளம்பப் பாத்தான். அதான்…, இவன் மேல் ஒரு கண்ணு வச்சுட்டு, பெரியவர்கிட்டே இருந்து சலானை வாங்கிப் பாத்தா…

“அவர் கொடுத்த அக்கவுண்ட் நம்பர் வேறையாவும்…, இவன் எழுதிக் கொடுத்தது வேறையாவும் இருக்கவே…, இவனை கையும் களவுமா பிடிச்சுட்டேன்….” விட்டால் அவனை அங்கேயே பொலி போட்டுவிடும் ஆத்திரம் அவனிடம்.

“இந்த தம்பி மட்டும் சுதாரிக்கலன்னா….? கடைசி காலத்துக்கு என்கிட்டே இருந்த சொச்ச நிலத்தையும் வித்து வந்த பணம் அம்போன்னு போயிருக்கும். நானும் ஏமாந்தது தெரிஞ்சு நாண்டுக்கிட்டுதான் செத்திருக்கணும்…”, தன் தோளில் கிடந்த துண்டால் தன் கண்ணீரை துடைத்துக் கொண்டார்.

அனைவரின் மனமும் பாரமாகிப் போனது. “கேட்டியாடா…, நீ ஏமாத்தப் பாத்தது பணத்தை மட்டும் இல்லை…, அவர் உசுரையும் தான்…, இதுக்கு என்ன பதில் சொல்லப் போற…?” அவனை உலுக்கினான்.

“சரி தம்பி…, பேங்க்ல வேலையெல்லாம் தடையாவுது…, நாம வெளியே போய் பஞ்சாயத்தை வச்சுக்கலாம்…”, காவலாளி அவர்களோடு வெளியே செல்ல, சூர்யாவின் பின்னால் அவள் மனமும் சென்றே விட்டது.

யாருக்கு வந்தால் எனக்கென்ன என இருக்காமல்…, தன்னைச் சுற்றி அனைத்திலும் இருக்கும் அவன் கவனம்…, நல்லெண்ணம்…, அவள் மனதுக்குள் அழுத்தமாக குடியேறிப் போனான்.

அதன் பிறகு கூட…, பேருந்தில் சில நேரங்களில் காணக் கிடைத்த அவன் முகம்…, அவன் நினைவை பசுமையாக இருக்கச் செய்தது.

அவளுக்கு சம்பந்தம் பேச சந்திரா வந்தபொழுது…, தீபிகாவால் நம்பவே முடியவில்லை. தன் காதல் இவ்வளவு சுலபமாக கைகூடி விட்டதே என இறுமாந்துதான் போனாள். அதற்கு வந்த சோதனையா இது…?

அவனது அவசர புத்தி…, அவன் செய்கை…, அவள் காதல் கொண்ட மனதை மிகவும் காயப்படுத்தியது. அவன்மேல் கோபம் கொள்ள வேண்டிய தானே…, மருத்துவ மனையில் அவனைக் கண்ட பொழுது இளகிய தன் மனதை எண்ணி துவண்டு போனாள்.

அவன் தன்னைத் தேடி வந்தது மன்னிப்பு வேண்டத்தான் என்றாலும்…, அவன் வருகையை, அவள் மனம் விரும்பியதை எதில் சேர்க்க…? தன்னைக் குறித்தே அவளுக்கு பயமாக இருந்தது.

நினைவுகளில் இருந்து மீண்ட தீபிகா..., சித்ராவை ஏறிட..., “இங்க பாரு..., நடந்ததை எல்லாம் தூக்கி தூரமா போட்டுட்டு..., மனசை தெளிவா வச்சுகிட்டு வேலைக்குப் போ..., எல்லாம் நல்லபடியா நடக்கும்...”, அவளுக்கு நம்பிக்கை அளிக்க, அமைதியாக அதை கேட்டுக் கொண்டாள்.

சித்ராவுக்கோ..., ஒரு வாரமாக தங்கள் பக்கம் வந்து போகும் சூர்யாவின் செய்கையில் சிக்கித் தவித்தது. ‘இனிமேல் என்னவாகும்...?’ அவளால் யூகிக்க முடியவில்லை.

# சிப்பி – 9

தீபிகா பள்ளிக்குச் செல்லாத இத்தனை நாட்களில்..., அவளது பள்ளியை நாளுக்கு ஒரு முறையாவது சென்று பார்த்துவிட்டு வந்துவிட்டான் சூர்யா. தீபிகா இன்னும் பள்ளிக்கு வரவில்லை என்பதை அறிந்து சற்று தவித்துதான் போனான்.

‘ஒருவேளை பள்ளிக்கு வர மாட்டாளோ...? வீட்டுக்குள்ளேயே முடங்கி விட்டாளா? அப்படியா...?’ நினைவுகளில் தாக்கத்தில் சுருண்டு போனான்.

முதலில் அவள் வீட்டுக்குச் சென்றுதான் அவளைக் காண நினைத்தான். அதற்கான முயற்சியையும் மேற்கொண்டான்.

ஆனால்..., அவளது தந்தை ரத்தினமோ..., அவனை வழியிலேயே கண்டு கண்டித்து திருப்பி அனுப்பி விட்டார்.

தப்பித்தவறி அவனை தங்கள் வீட்டில் கண்டால்..., அவனைக் கழுத்தை பிடித்து வெளியே தள்ளி விடுவேன் என மிரட்டவே..., அவனால் அதற்கும் வழியின்றி போனது.

அவன் சொல்ல வந்த விஷயத்தை அவர் காதுகொடுத்து கேட்கவே தயாராக இருக்கவில்லை. குறித்த முகூர்த்தத்தில் அவர்கள் திருமணம் நடக்க வேண்டும்..., அதற்கு அவர் அனுமதிக்க வேண்டும் என கேட்கத்தான் விரும்பினான்.

எங்கே..., அவனைக் கண்டாலே கனல் கக்கும் விழிகளால் நோக்கி, சுட்டெரித்துவிட்டுச் செல்லும் அவரிடம் நெருங்கவே அவனால் முடியவில்லை.

இது ஒரு பக்கம் என்றால்..., அவன் எண்ணத்தை எப்படியோ யூகித்த முருகன் வேறு..., அவனுக்கு இப்படி ஒரு நினைப்பு இருந்தால் அடியோடு அழித்து விடச் சொல்லி மறைமுகமாகச் சொல்வதை மறுத்துப் பேசி, தமக்கையிடம் முறையிடவும் வழியின்றி தவித்தான்.

அவன் விருப்பத்தை தமக்கையிடம் ஒரு கோடி காட்டினால் போதும், என்ன தடைகள் இருந்தாலும் அனைத்தையும் உடைத்துவிட்டு, தீபிகாவின் வீட்டுக்குச் செல்ல அவள் தயங்கவே மாட்டாள்.

ஆனால்..., தன் மனதில் இருப்பதை அவளிடம் வெளிப்படுத்தி, அதைக் கேட்டு உடனடியாக அவள், தீபிகாவின் வீட்டுக்கு கிளம்பி விட்டால்..., அதன் மூலம், அக்காவுக்கும், மாமாவுக்கும் இடையே பிரச்சனை வேண்டாம் என்று ஒதுங்கினான்.

சந்திராவின் தயக்கமெல்லாம்..., தம்பி வேண்டாம் என்று உரைத்துவிட்ட பிறகு, அதன்பிறகு தீபிகாவும் அப்படியான ஒரு பெரிய முடிவை தேடிக்கொள்ள பார்த்த பிறகு, எந்த முகத்தை வைத்துக் கொண்டு அவர்களை எதிர்கொள்வது? என்பதாகவே இருந்தது.

முருகனுக்கோ..., அவ்வளவு தீர்மானமாக வேண்டாம் என சொல்லிவிட்டு வந்த பிறகு..., தாங்கள் அவர்களை நாடிச் சென்றால்..., அதுவும், தீபிகாவின் செய்கைக்குப் பிறகு, தாங்களாக மறுபடியும் சென்றால்..., வார்த்தைகள் தடித்து, நிலைமை இன்னும் சீர்கெடுமே தவிர, இணக்கமான முடிவு ஏற்படாது என்பதாலேயே அவ்வாறு சொன்னான்.

அத்தோடு..., கை கலப்பு..., தகராறு..., என சம்பவம் திசை திரும்பினால், அது அந்த பெண்ணை மட்டுமல்ல..., சூர்யாவின் எதிர்காலத்தையும் பாதிக்கும் என்பதாலும், வேண்டும்..., வேண்டாம்..., என சொல்லி விளையாட திருமணம் ஒன்றும் விளையாட்டு பந்தமில்லை என்பதுமே காரணம்.

இப்பொழுது தீபிகா இப்படிச் செய்துவிட்டாள் என்ற வேகத்தில்..., அவளோடான திருமணத்தை நாடுபவன்..., ஏதேனும் சந்தர்ப்பத்தில் இப்படி ஒரு முடிவு எடுத்திருக்கக்

கூடாது என சிந்திக்கத் துவங்கி விட்டால்.., அது முதலுக்கே மோசமாகிப் போகும் நிலையாகி விடுமே.

எனவே..., முடிந்தது முடிந்ததாகவே இருக்கட்டும் என தீர்மானித்தான்.

ஆக மொத்தம்..., பெரியவர்கள் அனைவரும் ஒரே மூச்சாக திருமணம் வேண்டாம் என முடிவெடுத்திருக்க, சூர்யாவுக்கோ..., அதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

பெரியவர்களின் முடிவை ஒரு நொடியில் மாற்றும் வல்லமை ஒரே ஒருவருக்கு இருக்கிறது என அவன் உறுதியாக நம்பினான்..., அது வேறு யாருமல்ல..., தீபிகா தான்.

அவளிடம் மட்டும் பேச முடிந்தால்..., நிச்சயம் நல்ல முடிவாக எடுக்க முடியும் என எண்ணினான். அவளை எங்கே பார்த்து பேசுவது என்பதுதான் பெரும் குழப்பமாக இருந்தது.

பள்ளிக்குச் சென்றால் பேசுவாளா...? கோவிலுக்கு எப்பொழுது போவாள்? வெளியே எங்காவது செல்வாளா...?' 'ச்சே..., வெளியே அவளை சந்திக்க ஒரு வாய்ப்பு கூட இல்லையே...' எண்ணியவன், முதல் முறையாக தான் கிராமத்தில் இருப்பதையே வெறுத்தான்.

எடுத்த எடுப்பில் பள்ளிக்குச் சென்று நிற்பது வேறு சரியாகப் படவில்லை. வேறு என்ன செய்வது என்றும் தோன்றவில்லை. சற்று திணறிய நிலையை உணர்ந்த நிமிடம் அது.

ஒருவாறு தைரியத்தை வரவழைத்துக் கொண்டு..., அவள் பள்ளி செல்லும் நேரத்தை யூகித்து..., அதே பேருந்தில்..., தானும் தங்கள் ஸ்டாப்பில் ஏறிக் கொண்டான்.

அவளது ஸ்டாப்பில் தீபிகா பேருந்தில் ஏற..., அப்பொழுதுதான் அவளது முழு அழகும் அவனுக்குத் தெரிந்தது. மெல்லிய காட்டன் புடவையில்..., பின்னிய கூந்தல்..., சாதாரண ஒப்பனை எதுவுமற்ற முகம்..., நெற்றியின் நடுவில் வட்டப் பொட்டு..., தோளில் ஒரு கைப்பையோடு..., கூட்டத்தோடு ஒருத்தியாக உள்ளே ஏறினாள்.

'ஹையோ..., கூட்டமா இருக்குன்னு முன்னாடி போய் நின்னுடப் போறா...' அவன் தவிக்க..., "உள்ளே இடம் இருக்கு...,

எல்லாம் உள்ளே போங்க..., படிகிட்டேயே தொங்குறது...."
நடத்துனர் குரல் கொடுக்க, படிக்கட்டின் அருகில் இருந்து உள்பக்கம் நகர்ந்தாள்.

சட்டென தோன்றிய பரபரப்போடு..., தான் இருந்த இடத்தில் இருந்து எழுந்தவன்..., மற்றவர் கவனத்தை கவராமல், அவள் பக்கம் நடந்தான்.

அவள் பின்னால் சென்று நின்றவனுக்கு எப்படி பேச்சைத் துவங்குவது என்பது பெரும் பிரச்சனையாக இருந்தது. இன்னும் நான்கு நிறுத்தத்தில் அவள் இறங்கிவிடுவாள் என்பதும் கூடச் சேர..., உடனடியாக ஏதாவது பேசியே ஆக வேண்டிய கட்டாயம்.

ஒரு பெண்ணும் ஆணும் சாதாரணமாக பார்த்துக் கொண்டாலே கிசுகிசுக்கும் ஊருக்குள்...., பேருந்தில் வைத்து அவளிடம் உரையாடுவது பெரிய ரிஸ்க் என்று அவனுக்கும் தெரியும். ஆனாலும்..., கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விட அவனுக்கு மனமில்லை.

கண்களை மெல்லியதாக சுழற்றியவன், மற்றவர்கள் தங்களை கவனிக்கவில்லை என்பதை உறுதி செய்தவன், தனக்கு முதுகு காட்டி நின்ற தீபிகாவின் அருகில் இன்னும் சற்று நெருங்கியவன்..., தொண்டையை லேசாக கனைக்க..., அவளோ அசையவே இல்லை.

அதற்குள்ளாக மூன்று நிறுத்தங்கள் கடந்திருக்க..., இன்னும் இரண்டே நிமிடங்களில், அவள் இறங்கவேண்டிய நிறுத்தமும் வந்துவிடும் எனத் தோன்ற, தைரியத்தை வரவழைத்துக் கொண்டு..., "தீபா...", மெதுவாக..., மிகவும் மெதுவாக அழைத்தான்.

தீபிகாவின் பள்ளித் தோழிகள் அவளை தீபா என்றே அழைப்பார்கள். எனவே..., அந்த அழைப்புக்கே...., சட்டென திரும்பிப் பார்த்தவள், அங்கே நிச்சயம் சூர்யாவை எதிர்பார்க்கவில்லை.

முகத்தில் அப்பட்டமான அதிர்ச்சியை தேக்கியவள்..., மூச்சு விடவும் மறந்து, தன்னை மறந்து அவனை வெறித்தாள்..., அதே நேரம்...., நடத்துனர் விசில் ஊதி பேருந்தை

நிறுத்தியவர்..., “ஈச்சம்பட்டி எல்லாம் இறங்கு...” ஓங்கி குரல் கொடுக்க, அப்பொழுதுதான் நடப்புக்குத் திரும்பியவள், அவனை கோபமாக முறைத்துவிட்டு வேகமாக பேருந்தை விட்டு இறங்கினாள்.

அவள் இறங்கவே..., தானும் அவள் பின்னால் இறங்கியவன்..., சற்று இடைவெளி விட்டு அவளைப் பின் தொடர்ந்தான். அதைப் பார்த்தவள்..., நடையை விரைவு படுத்த..., அவளை விரட்டிச் செல்வது அநாகரீகமாக இருக்கும் எனத் தோன்றவே..., அப்படியே திரும்பி விட்டான்.

கடைக்குத் திரும்பி விட்டாலும்..., அவள் கண்களில் முதலில் தெரிந்த அதிர்ச்சியும், இறுதியில் தெரிந்த கோபமுமே அவனை பெரிதும் இம்சித்தது.

‘ஒரு பேச்சுக்கு நிற்க மாட்டேன் என்கிறாளே....’ ஒரு பக்கம் தவிப்பாக இருந்தது.

அவனுக்கே இப்படி என்றால்..., தீபிகாவின் நிலையை சொல்லவே வேண்டாம். மனதுக்குள் இருக்கும் அவன் ஒரு பக்கம் இம்சித்தால்..., அவனை எங்கேயும் கண்டுவிடக் கூடாதே என மனம் தவித்தால்..., தன் பின்னாடியே நின்ற அவன் செய்கை...,

எதிர்பாராத நேரத்தில்..., எதிர்பாராத இடத்தில் அவனைப் பார்த்த அதிர்ச்சி., அனைத்தும் ஒருங்கே சேர..., அந்த நிமிடம் உறைந்துதான் போனாள்.

அது ஏற்படுத்திய அலையை..., நொடி நேரம் கூட அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அந்த ஒரு நொடி நிமிடத்தில்..., அவன் முகத்தை படம்பிடித்த அவள் கண்கள்..., அதை பொக்கிஷமாக்கிய அவள் மனம்..., அவன் போட்டிருந்த அடர் கிரே வர்ண சட்டை கூட நொடி நேரத்தில் மூளையில் பதிவாகிபோன விந்தை..., தன் இருக்கையில் அமர்ந்தவள், தலையை கைகளால் தாங்கிக் கொண்டாள்.

‘என் தடுமாற்றத்தை உணர்ந்திருப்பாரோ..., என்ன நினைத்திருப்பார்..., கேவலமாக எண்ணியிருப்பாரா...?’ மனம் பரிதவித்தது.

சமயத்தில் அந்த நடத்துனர் குரல் கொடுக்காமல் போயிருந்தால்…’ நினைக்கவே நடுக்கமாக இருந்தது. தன் தடுமாற்றத்தை மறைக்கவே, அவனை முறைத்ததும்…, அங்கிருந்து ஓடி வந்ததும் என்பது அவள் மட்டுமே அறிந்த உண்மையல்லவா…?

இதற்கே இப்படி என்றால்…, வேறு மாப்பிள்ளை பார்க்கிறேன்…, என்ன சொல்கிறாய்…, எனக் கேட்கும் தந்தைக்கு என்ன பதில் சொல்ல? அவன்மேல் இருக்கும் கோபத்தால் கூட…, தந்தைக்கு சரி என்று சொல்ல முடியவில்லையே…, அப்படி இருக்கையில்…, இன்னொருவனுடன் திருமணம் என நினைத்தாலே அடிவயிற்றை பிரட்டியது.

இவை எல்லாம் விட…., ‘அவன் உனக்கு வேண்டாம் கண்ணு…, இனிமே அவனா வந்தா கூட…, இந்த வாசப்படியை மிதிக்க விட மாட்டேன். என் பொண்ணை என்கிட்டே இருந்து பிரிக்கப் பாத்தானே….’ தந்தையின் கோபம்…, நெஞ்சில் அமிலம் வார்த்தது.

‘இப்பொழுது எதற்காக வந்தாராம்…? என்ன வேண்டுமாம்…? அதுதான் மன்னிப்பு வேண்டும் என கேட்டுவிட்டு சென்று விட்டாரே…, பிறகு…., இன்னும் என்னிடம் என்ன பேச வேண்டுமாம்…, ஒரு வேளை…’, சட்டென அந்த நினைப்பை அப்படியே தடை செய்தாள்.

தன் தந்தையை மீறி…, அவளால் ஒரு முடிவும் எடுக்க முடியாது. முடியவே முடியாது. அவன்மேல் நினைப்பை வளர்த்துக் கொண்டிருந்த பொழுது கூட, சித்ரா இருக்கிறாள்…, பார்த்துக் கொள்வாள் என்ற நம்பிக்கை அதிகம் இருந்தது.

ஆனால்…, யாரின் துணை இன்றியும் ஈடேறப்போன அவளது காதல் மரத்தை…, காதலனே வெட்டி வீழ்த்திய துயரம்…, அடங்க மறுத்தது.

“தீபிகா…, போர்த்துக்கு(4th) முதல் பீரியட் நீங்கதான்…, கிளாஸ்க்கு போகாமல் இங்கே என்ன பண்றீங்க…?” உடன் பயிலும் ஆசிரியை குரல் கொடுக்க, சிந்தை கலைந்தவள், தன் கைப்பையில் இருந்து தண்ணீரை எடுத்து பருகிவிட்டு, தன்னை சீர்படுத்திக் கொண்டு வகுப்புக்கு விரைந்தாள்.

# சிப்பி – 10

வகுப்பில் படம் நடத்தக்கூட முடியாமல் தடுமாறியவள், முயன்று தன்னை நிலை நிறுத்த போராடினாள். மனதுக்குள் பெரும் பிரளயம்..., ஒரு மாதிரி காற்றில் பறக்கும் உணர்வையும், சிறு கோபத்தையும் கலந்து அளித்தது.

அன்றைய நாளை ஒரு வழியாக கடத்தியவள், அடுத்த நாளிலும் இதுவே தொடர, அதை எப்படி எடுத்துக் கொள்ள எனத் தெரியாமல் தடுமாறினாள்.

சூர்யாவோ..., மூன்றுநாள் பொறுத்தவன், நான்காம்நாள்..., அவள் பள்ளிக்கே சென்று நின்றான். அலுவலகத்தில் சொல்லி, அலுவலக உதவியாளரை அனுப்பி, அவளை வரச் சொன்னான்.

சூர்யா என பெயரையும் சொல்லி அனுப்ப..., அவளுக்கு வர விருப்பமில்லை என்றால்..., அப்படியே திரும்பிவிடலாம் என எண்ணினான்.

ஒரு மனமோ..., அவள் வர வேண்டுமே என அடித்துக் கொண்டது. தீபிகாவுக்கோ..., அவன் இப்படிச் செய்வான் என நம்ப முடியாத திகைப்பு ஒரு பக்கம்..., அவன் அழைத்தால் நான் செல்ல வேண்டுமா என்ற பிடிவாதம் ஒரு பக்கம்..., இவை அனைத்தையும் அவள் மனதுக்குள் ஒளிந்திருந்த காதல் வென்றது.

‘இவர் எப்படி இதைச் செய்யலாம்...? இங்கே இருப்பவர்கள் என்ன நினைப்பார்கள்...? அப்பாவுக்குத் தெரிந்தால்....’ கலவையான உணர்வுகள் தாக்கி, அவளை சற்று கோபம் கொள்ள செய்தது.

திருமணம் வேண்டாம் எனச் சொல்லிவிட்டு, இப்பொழுது எந்த முகத்தோடு என்னை பார்க்க வந்தாராம்...? கேட்டு விடுவோம்...’ முடிவெடுத்தவள், பக்கத்து வகுப்பு ஆசிரியையிடம் தன் வகுப்பையும் பார்த்துக் கொள்ள சொல்லிவிட்டு விரைந்தாள்.

அவள் வருவதைப் பார்த்தவன்…, அப்பொழுதுதான் அவ்வளவு அருகில், தெளிவாக அவள் முகம் கண்டான். பார்வையை அவளிடமிருந்து திருப்பிக் கொள்ள முடியவில்லை.

அவன் பார்வையை உணர்ந்தவள், மனதுக்குள் பல்லைக் கடித்தாள். “யார் நீங்க…? உங்களுக்கு என்ன வேண்டும்…?” தன் கோபத்தை கொட்டினாள்.

அவள் வார்த்தைகள் அவனுக்கு வலித்தாலும்…, அவள் வந்ததே பெரும் நிம்மதியாக இருக்க, “ஓ…, என்னை யார்ன்னு உனக்குத் தெரியாதுல்ல…? தெரியாமலா வந்த…? அப்போ இதை அவர்கிட்டேயே சொல்லி அனுப்பியிருக்க வேண்டியது தானே…” அவள் கோபத்தை ரசிக்க முயன்றான்.

“அப்போ சரி…, நான் போறேன்…”, அவள் கிளம்ப,

“நான் சொல்வதை கேட்டுட்டு போ தீபா…” அவன் உரைக்கவே…, கோபம், ஆத்திரம்…, ஆற்றாமை என அனைத்தும் அவள் கண்களை மறைக்க,

“கேட்ட வரைக்கும் போதும்…, நான் பட்டதும் போதும்…”, வெடித்தாள்.

“அது நான் ஏதோ அவசரத்தில்…, தெரியாமல் செய்தது…?” விளக்க முயன்றான்.

“எது தெரியாமல் செய்தது…? எல்லாம் தெரிஞ்சே தான் செய்தீங்க. அதுவும் தெளிவா செய்தீங்க. நான்தான் பைத்தியக்காரி மாதிரி…, மனசுக்குள் நினைப்பை வளத்துகிட்டு…” இதைச் சொல்கையிலே அவள் கண்கள் கலங்கி, குரல் தடுமாறி…, கலங்கிப் போனாள்.

அதைப் பார்த்த சூர்யா…, கையாலாகாத நிலையில் அவளை வெறித்தான். ‘இந்த அன்பை உதறிவிட்டேனே…, நான் எவ்வளவு கொடூர மனம் படைத்தவன்…’ தன்னையே நொந்து கொண்டான்.

அதே நேரம்…, அவள் மனதுக்குள் இருக்கும் அன்பை உணர்ந்தவனுக்கு…, அந்த நேரத்திலும் மனதுக்குள் ஒரு பெரும் நிம்மதி.

அவளோ..., அவன் முன்பாக கண் கலங்கியதை வெறுத்தவளாக.., “ச்சே... இப்போ எதுக்கு அதெல்லாம்...”, தன்னிடமே கேட்டவள்...,

“எனக்கு எதையும் கேக்கவும் வேண்டாம்..., தெரிஞ்சுக்கவும் வேண்டாம்.., உங்க விளக்கமும் வேண்டாம்..., என்னை கொஞ்சம் நிம்மதியா இருக்க விடுங்க. இது நான் வேலை செய்யும் இடம். ஆயிரம் பிள்ளைங்களுக்கு நான் முன் மாதிரியா இருக்கணும்.

“இங்கே வந்து என்னை தொல்லை செய்யாதீங்க. ஏற்கனவே எனக்கு நீங்க வாங்கிக் கொடுத்த பேர் போதும். இப்போ..., என் நடத்தையையும் விமர்சனம் செய்ய வச்சுடாதீங்க ப்ளீஸ்...” அவள் கையெடுத்து கும்பிட, துடித்துப் போனான்.

ஆங்காங்கே சில ஆசிரியைகளின் பார்வை இங்கே பாய்வதைக் கண்டவன்..., “இனிமேல் நான் இங்கே வர மாட்டேன்..., நான் கூப்பிட்டதும் இங்கே வந்ததுக்கு நன்றி...” அவள் வார்த்தைகள் ஏற்படுத்திய தகிப்பு அடங்க மறுத்தது.

இவ்வளவு நேரமாக அவனிடம் ஆத்திரம் தீர, தன் மன பாரம் தீர கொதித்தவளுக்கோ..., அவன் விலகிச் செல்கையில், தன் உயிரை யாரோ உருவிச் செல்லும் வலி...

பள்ளிக்கு விடுப்பு சொல்லிவிட்டு உடனே கிளம்பிவிட்டாள்.

வீட்டுக்குச் சென்றவளுக்கோ..., சூர்யா தன்னை நாடி வந்ததை..., தன்னிடம் பேச முயன்றதை..., தீபிகாவால் சித்ராவிடம் கூட பகிர்ந்து கொள்ள முடியவில்லை.

‘இதை எப்படி அவளிடம் சொல்ல....? சொன்னால் என்ன நினைப்பாள்..., அப்பாவிடம் சொல்லி விடுவாளா...?’ நினைக்கையிலேயே...

‘அப்படியென்றால்..., நீ அப்பாவிடமிருந்து இதை மறைக்க விரும்புகிறாயா?’ மனம் கேள்வி கேட்க விதிர்த்துப் போனாள்.

தீபிகாவால் எதையும் சித்ராவிடமிருந்து மறைக்க முடியாது. சிறு வயது முதலே..., பழகிய பழக்கமது. சந்தோஷமோ..., துக்கமோ..., கேலியோ..., கிண்டலோ..., சீரியசோ..., எதுவாக இருந்தாலும், உடனடியாக அவளிடம் பகிர்ந்து விடுவாள்.

எனவே..., அவளிடம் மறைப்பது என்னவோ பெரும் அவஸ்தையாகத் தான் இருந்தது. ஏற்கனவே சூர்யா, தீபிகாவைத் தேடி வந்ததையும், அது முடியாமல் திரும்பியதையும் சித்ரா உணர்ந்தே இருந்ததால்..., நிச்சயம் தீபிகாவை வேறு எங்காவது சந்திக்க முயல்வான் என உறுதியாக நம்பினாள்.

எனவே..., இரண்டும் நாட்கள் கழித்து, தீபிகா பள்ளி முடித்து வரும் வேளை..., அவள் வீட்டுக்குச் செல்ல..., வழக்கமாக தன்னைக் கண்டவுடன்..., முகம் கொள்ளா புன்னகையோடு எதிர் கொள்பவள்.., ஒரு கீற்று புன்னகையோடு விலகிச் செல்ல..., புருவம் உயர்த்தினாள்.

அவள் பின்னாலேயே தானும் அவள் அறைக்குள் நுழைந்தவள்..., “அப்புறம்..., பள்ளிக்கூடத்தில் எதுவும் பிரச்சனை இல்லையே...” அவளைப் பார்த்தவாறே..., வினவ, ஒரு நொடி தீபிகாவின் முகத்தில் மின்னி மறைந்த கலவரம்..., அவளை குறித்துக் கொள்ளச் செய்தது.

“எ..ன்...ன பிர...ச்சனை..., எது...க்கு...” வார்த்தைகள் தந்தியடித்தது.

“என்னடி இப்படி கேக்கற...?” அவள் புருவம் உயர்த்த...,

“ஏன்...?” தடுமாறியவள், சட்டென அமைதியானாள்.

“விளங்கும்..., ஏண்டி..., பள்ளிக்கூடம் தானே போயிட்டு வர..., அதைப்பத்தி கேட்டா...., சரி..., நீ என்னத்த நினைச்ச...” விஷமம் சொட்டியது அவள் வார்த்தைகளில்.

“அ..து..., இல்ல..., யாரும் எதுவும் கேக்கல..., அவங்களுக்குள்ளே குசுகுசுன்னு பேசிகிட்டாக..., அதையெல்லாம் நான் கண்டுக்கலை...” இமைகளை படபடவென கொட்டியவள், அவளைப் பார்ப்பதை தவிர்த்தாள்.

அவள் செய்கையில் மனதுக்குள் சிரித்துக் கொண்டவள்..., “உனக்குத்தான் மறைக்க வரலையே..., பிறகென்ன...? சும்மா சொல்லு...” சித்ரா வினவ, அது...” இழுத்தவள்..., வேகமாக தன் அறையின் வாயிலை நோட்டமிட்டாள்.

அவள் கவனத்தைக் கண்ட சித்ரா..., ‘மனசுக்குள் இருக்கவன் செய்யிற வேலை... யாருக்கும் தெரியக் கூடாதாமாம்...’ தனக்குத் தானே சொல்லிக் கொண்டவள், “என்னடி..., ஒத்திகையெல்லாம் பலமா இருக்கு....” அவளைச் சீண்டினாள்.

“சித்ரா...” அவள் தயங்க,

“நான்தாண்டி..., சொல்ல வரதை சீக்கிரம் சொல்லித் தொலைடி..., சஸ்பென்ஸ் தாங்கலை...” ஆர்வமானாள்.

தீபிகாவும், இதற்குமேல் அவளிடம் மறைக்க முடியாமல், சின்னக் குரலில்..., அவன் இரண்டு நாட்களாக தன்னைப் பின்தொடர்வதையும், அவள் தட்டிக் கழித்ததையும், இன்று பள்ளிக்கே வந்து அவன் பேசியதையும் உரைக்க, “அதெப்படிடி..., அப்பனும் பொண்ணும் ஒரே மாதிரி இருக்கீங்க...? அவரு என்னன்னா..., இந்த பக்கம் பார்த்தாலே வெட்டி பொலி போட்டுடுவேன்னு சத்தம் போட்டு விரட்டிட்டார்.

“நீ என்னன்னா..., பேசியே... அவன விரட்டுற..., ஹம்..., நல்ல குடும்பம்...” நொடித்துக் கொண்டாள்.

“என்னடி சொல்லுத...? அப்பா அவரை விரட்டினாரா...?” அதிர்ச்சியாக வினவினாள்.

“பின்ன..., கூப்பிட்டு வச்சு கொஞ்சுவாரா...? இருந்தாலும் அவனுக்கு தைரியம் ஜாஸ்திதான். இப்போ இம்புட்டு தொங்குறவன்..., அப்போ ஏன் வாயக் குடுத்துட்டு போனானாம்...?

“சரி..., அம்மணி என்ன முடிவுல இருக்கீங்க...? கட்டிக்கிடணும்ன்னா...?” சித்ரா வினவ, அவள் கேட்கவே..., அப்பொழுதுதான் தெளிந்தவள், அவன் தன்னைப் பின்தொடர்வதைக் கொண்டு, எந்த நம்பிக்கையில் அவன் தன்னை கட்டிக்கொள்ள ஆசைபட்டுதான் பின்தொடர்கிறான் என்று எண்ணினாள்...? தன்னைத் தானே கேட்டுக் கொண்டவள்,

“அப்படியொண்ணும் நாங்க ரோஷம் கெட்டுப் போயிடலை..., கட்டிக்கிட வேண்டாம்னுதான் ஆத்திரமா பேசி விரட்டினேன். போவட்டுமே..., யார் தொங்கச் சொன்னதாம்...? மறுக்காவும் ஏமாற நான் தயாரா இல்லை..., மனசுல ஆசைய

வளத்துக்கவும் இல்லை..., நீ உன் வேலைய பாத்துகிட்டு போடி..., என் வாயப் புடுங்கிகிட்டு...” அறையை விட்டு வெளியேறி, முகம் கழுவச் சென்றாள்.

அவள் செல்லவே..., ‘மனசுக்குள்ள இருக்கவனை விரட்ட முடியாமல் மருகுறா..., அவன் பின்னாடி வரது, கட்டிக்கவா..., இல்ல வெட்டிக்கவான்னு தெரியாத குழப்பம் வேற..., இதை கவனிக்கணுமே...’ தனக்குள் எண்ணியவள், ஒரு முடிவிற்கு வந்தாள்.

மறுநாள் காலையில்..., தீபிகா பள்ளி சென்ற பிறகு, தன் மாமனின் வயலுக்கு மருந்து வாங்கும் சாக்கிட்டு..., சூர்யாவைக் காணச் சென்றாள்.

சித்ராவைப் பார்த்த அவனுக்கு, அவளை எங்கோ பார்த்த நினைவு. தன் சிந்தையை முடுக்கி அலசியவன்..., அதில் தோல்வியையே தழுவினான். சட்டென அவளிடமும் கேட்டுவிட முடியாது. சிந்தையின் நடுவில், அவளுக்குத் தேவையானதை கேட்டு, எடுத்துக் கொடுத்தான்.

சித்ராவுக்குமே அவனிடம் எப்படி விஷயத்தை வாங்குவது என்ற தயக்கம். சற்று நேரம் இருவரும் கண்ணாமூச்சி ஆட, அவனுக்கு கொடுக்க வேண்டிய பணத்தில் நூறு ரூபாய் அவள் அதிகமாக கொடுத்துவிட, அதை அவன் திருப்பிக் கொடுத்தான்.

“என்னஙக..., நூறு ரூபா அதிகமா இருக்கு....” அவளிடம் பணத்தை நீட்ட,

“ஓ..., ஐயாவுக்கு பணக்கணக்குதான் சட்டுன்னு புரியும் போல, மனக் கணக்கு புரியாதோ...? எல்லாம் எடுத்தோம் கவுத்தோம்னு தான் நடக்கும் போல...”, பணத்தை வாங்கியவள், தன் பர்ஸில் திணித்தாள்.

அவள் பேச்சை புரியாமல் நோக்கியவன், நொடியில் முகம் பிரகாசமாக, “ஏங்க..., நீங்க தீபாவுக்கு சொந்தங்களா...?” ஆர்வமாய் வினவினானோ...?

“ஏன்..., அவ சொந்தம்னா சரக்கு தர மாட்டிகளோ...” நொடித்துக் கொள்ள, “அட..., என்னங்க நீங்க..., தீபா சொந்தம்னா சும்மாவே தந்துட்டு போறேன். சொந்த வீட்டில்

யாராச்சும் கணக்கு பாப்பாங்களா...?” அவள் தேடியது அவன் வாய் வார்த்தையாகவே கிடைத்துவிட,

“பாத்து..., கடையே காலியாயிட போவுது...” உர மூட்டையை தூக்கிக் கொண்டு கிளம்பி விட, அவள் பதிலில், அவனுக்கு ஆர்வம் தொற்றிக் கொண்டது.

கிராமத்துக்கே உரிய மர்மம் நிறைந்த, மறைபொருளைக் கொண்ட பேச்சுக்கள் இவை.

“ஏங்க..., தெளிவா சொல்லிட்டு போங்க...” அவன் குரல் அவள் பின்னால் ஒலிக்க, “நீங்க தெளிவாகுங்க...” பதில் குரல் கொடுத்தவள், சென்றே விட்டாள்.

அவள் பதில்..., சூர்யாவுக்கு சீக்கிரமே தீபிகாவிடம் மீண்டும் பேசும் வேகத்தை அளித்தது.

சூர்யா எடுத்த அதே முடிவை, சித்ராவையும் எடுக்க வைக்க, அவளோ..., தன் அத்தையிடம் பேச முடிவெடுத்தாள்.

அடுத்த நாட்களிலும்..., தீபிகாவின் செயல்பாட்டில் ஒரு ஒதுக்கமும், நடத்தையில் ஒரு இறுக்கமும் தெரிய, சியாமளாவும் சற்று பரிதவித்துதான் போனார்.

ஆசையாக எதையும் செய்யாமல், கடமைக்காக செய்யும் அவள் செய்கை, அவரை வெகுவாக காயப்படுத்தியது. சித்ராவும் அதை கவனிக்க, தன் அத்தையிடம் அன்று வந்தாள்.

அடுக்களையில் வேலையாக இருந்தவரிடம், “அத்த..., சமையல் வேலை எல்லாம் முடிஞ்சதா...?” கேட்டவள் அவள் அருகில் அமர்ந்தாள்.

“என்னத்த பெரிய வேலை..., தட்டுல என்னத்த போட்டாலும், அப்பாவும் பொண்ணும், அது வெந்ததா..., வேகாததான்னு கூட தெரியாமல் வாயில அள்ளி போட்டுட்டு போறாங்க..., இதில் பொல்லாத வேலை..., எப்படி இருந்த வீடு...” அவருக்கு மனதே கேட்கவில்லை.

“எல்லாம் சீக்கிரம் சரியா போய்டும்..., அதுக்கு நீ மனசு வச்சா போதும்...”, அவள் பீடிகை போட, புருவம் உயர்த்தினார்.

அதைப் பார்த்தவள்..., தீபிகாவின் மனதுக்குள் இருக்கும் விஷயத்தைச் சொல்ல, இதுதான் சரியான சந்தர்ப்பம் என்பதை உணர்ந்தவள், “உன் மவ மனசுக்குள் என்ன இருக்குன்னு தெரியாமல் இருக்க..., நீயெல்லாம் ஒரு அம்மாவா...?” திடுமென அவள் கேட்க, சற்று அதிர்ந்துபோய் அவளைப் பார்த்தார்.

“அவ மனசுக்குள்ள இருக்கறது தெரியாமையா அவனை பேசி முடிச்சேன்...? பாவிப்பய இப்படி செஞ்சுபோட்டு போயிட்டானே...” மூக்கை சிந்தினார்.

“மருமகப்பிள்ளையை இப்படி மருவாதை இல்லாமல் பேசப்படாது அத்த...” அவள் உரைக்க,

“நீ என்கிட்டே அடிதாண்டி வாங்கப்போற...” அவர் கோபமாக,

அதைக் கண்டுகொள்ளாமல், “மவளை இன்னும் நல்லா கவனி..., உனக்கே புரியும்...” பூடகமாக உரைக்க, சற்று அதிர்ந்துதான் போனார்.

“ஏண்டி..., இன்னுமா அவன் நினைப்பில் இருக்கா...?”.

“எப்போ இல்லாமல் இருந்தா...?” அவள் திருப்பிக் கேட்க,

“ஐயோ..., நெஞ்சில நெருப்பள்ளி கொட்டாதடி..., வேண்டாம்னு சொல்லிட்டு போனவன் நினைப்பில் இருக்கான்னு சொல்றியே..., நெஞ்சமே பதறுதுடி...”.

“ரொம்ப பதறாதே..., அந்த பயபுள்ளையும் இப்போ உன் பொண்ணு பின்னாடிதான் சுத்தி வரான்....”, அவள் அசால்ட்டாக உரைக்க, திடுக்கிட்டார்.

“என்னடி சொல்லுற...? அதெப்படி உனக்குத் தெரியும்...?”.

“ஆமா..., விஷயத்தை சொல்லுற என்கிட்டேயே விசாரணை கமிஷனை வைய்யி...”, நொடித்துக் கொண்டாள்.

“படுத்தாமல் விஷயத்த சொல்லுடி...”, சியாமளா கேட்க, தனக்குத் தெரிந்த விஷயங்களை அவரிடம் உரைத்தவள், “எனக்கென்னவோ இப்போ பேசினால் சரியா வரும்னுதான் நினைக்கறேன்...” யோசனையாக உரைத்தாள்.

“அதெப்படிடி சரியா வரும்…? உன் மாமன்கிட்டே யார் பேசுறது…? அது மட்டுமில்ல…, நிமிஷத்துக்கு ஒரு பேச்சு பேசுவானான்னு அவர் கேட்டா…, என்ன பதில் சொல்லுறது…? அந்த மனுஷன் கிட்டே இனிமேல் அவனைப் பத்தி பேசவே முடியாதே…”, சற்று நடுக்கமாகத்தான் உரைத்தார்.

“அட போ அத்த…, நீயும், உன் பொண்ணும் ஒண்ணு வேணும்னு கேட்டா…, என்னோட மாமன் மறுத்து பேசிடுவாராக்கும்…, அதை விடு…, இப்போ உன் பொண்ணு சந்தோசம் முக்கியமா, உன் புருஷன் வீம்பு முக்கியமா நீயே முடிவெடு…”, அவரிடம் ஒரே பேச்சாக நின்றாள்.

“அதுக்கு…?”

“இப்போ என்ன…, உன்னால தானே பேச முடியாது. தீபிய விடு, அவ பாத்துப்பா. அவளை அப்பப்போ வெளியே…, கடைத்தெருவுக்கு, கோயில் குளத்துக்கு, விசேஷத்துக்குன்னு அனுப்பு…, மத்ததை அவன் பாத்துப்பான்” யோசனை வழங்கினாள்.

“ஏண்டி…, நான் அவ அம்மாடி…, என்கிட்டேயே அவளை வெளியே அனுப்புன்னு தைரியமா சொல்லுற…”.

“நான் என்ன அடுத்த வீட்டுக்காரின்னா சொன்னேன்…? அத்தோட…, வெளியே அனுப்புன்னுதானே சொன்னேன்…, அவன்கூட அனுப்புன்னா சொன்னேன்…?”, அவள் வாயாட,

“எடு அந்த விளக்குமாத்த…, எப்படி பேசுதுபார்…, கொஞ்சம் கூட வெக்கமே இல்லாமல்…”.

“ம்கும்…, நான் வெக்கபட்டா புள்ள பெத்தா மாதிரிதான். உன் மவன் வர்ற ஒரு மாசத்துக்கே மூணுநாள் லீவு விட வேண்டி இருக்கேன்னு வெசனப்படுறேன்…, நீ வேற…” அசால்ட்டாக உரைக்க, கொதித்தே போனார்.

“ச்சீ…, தூர போடி…, அத்தகிட்டே பேசுற பேச்சா இது…?” அவளை போலியாக அடிக்க,

“அதான…,உன்கிட்டே போய் பேசுறேன் பாரேன். உனக்கு என்னளவு விவரம் இருந்தால் ஒத்த புள்ளையோட நிப்பாட்டி இருப்பியா…?” கழுத்தை வெட்ட,

“ஆத்தீ..., என்னையவே குத்தம் சொல்லுறியா...? அந்த வெளக்கமாத்த இங்க தான வச்சேன்...” அவர் தேட...,

“நீ சாவகாசமா தேடு..., நான் போறேன்..., என் மவன் வீட்டையே ரெண்டு பண்ணியிருப்பான்..., வாரேன்..., நான் சொன்னத மனசுல ஓரமா போட்டுக்க..., உன் மவ மொகத்தில் சந்தோஷத்தை பாக்கணுமின்னா, அவனால்தான் முடியும் பாத்துக்க...” அவள் சென்றுவிட, சியாமளாவின் மனதிலோ பெரும் பாரம்.

## சிப்பி – 11

சியாமளாவோ...., சித்ரா வீசிச் சென்ற புயலின் தாக்கம் அடங்காமல் சுற்றிக் கொண்டிருந்தார்.

தன் மகளின் முகத்தில், முன்னர் காணும் இயல்பான உற்சாகம் இல்லை என்பதையும், எதையோ மனதுக்குள் போட்டு உழப்பிக் கொண்டிருக்கிறாள் என்பதையும் அவள் முகத்திலிருந்தே அவரால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

எப்பொழுதும் ஊருக்குள் யார் உதவி என கேட்டாலும் தயங்காமல் செய்பவள், மற்றவர்களுக்கு உதவி தேவையா என கேட்டு ஈடுபடுபவள், சில நாட்களாக தன் அறைக்குள் முடங்கிக் கொள்வதை அவரால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

முதலில்..., ஊருக்குள் தன்னை கேலி செய்வார்களோ என தயங்குகிறாள் என கருதியவர், பள்ளிக்கு செல்லத் துவங்கியபொழுது, சற்று நிம்மதியாகத்தான் உணர்ந்தார்.

ஆனால்..., பள்ளி முடித்தவுடன், தன் அறைக்குள் முடங்கிக் கொள்ளும் அவள் செய்கைதான் அவரை கலவரப்படுத்தி, கவலை கொள்ள செய்தது. ‘இதை எப்படி மாற்ற...? அவன் நினைப்பை மனதுக்குள் போட்டு உழப்பிகொள்ளும் அவளை என்ன செய்து வெளிக்கொணர...?’ தாய் உள்ளம் பரிதவித்தது.

‘இதற்கு எதையாவது செய்தே ஆக வேண்டும்...., அதற்கு முன்பு..., அவள் மனதில் இருப்பதை அவள் மூலமாக அறிய வேண்டும்...’ முடிவு செய்தவர், வயக்காட்டில் இருந்து வீட்டுக்கு

வந்த கணவரின் கையில் மோர் டம்ளரை திணித்தவர், ஓரமாக நின்றார்.

மனைவியின் செய்கையே..., அவள் எதையோ சொல்ல நினைப்பதை உணர்த்த, “என்ன..., என்னவோ சொல்ல வந்துட்டு அப்படியே நிக்கற....?” மனைவியை உணர்ந்தவராக கேட்டார்.

“நம்ம பொண்ணைப்பத்தி என்ன முடிவு செய்திருக்கீங்க...? இன்னும் எம்புட்டு நாள் இப்படியே பேசாம இருக்கறதா உத்தேசம்...?”, மெதுவாகத் துவங்கினார்.

“அதான் எதையும் சட்டுன்னு முடிவெடுக்க முடியாத மாதிரி உன் பொண்ணு பண்ணி வச்சிருக்காளே...” பொருமினார்.

கணவனின் பேச்சைக் கேட்டவர்..., ‘ஆமா..., அவ பெருமைப்படுற மாதிரி எதையாச்சும் செஞ்சா, தன்னோட பொண்ணுன்னு மார் தட்டிக்குவாரு..., இப்போ மட்டும் என் பொண்ணாயிட்டாளாம்...’ மனதுக்குள் நொடித்தவர்,

“அதுக்கு..., அப்படியே விட்டுட முடியுமா...?”.

“இப்போ என்ன என்னதாண்டி செய்யச் சொல்ற...? சொல்லு செய்யறேன்..., மனுஷன் நிலைமை தெரியாமல்....” ஒரே பெண் என்பதால், கண்டிப்பாகவோ, எடுத்த வேகத்திலோ எதையும் செய்ய இயலாத தன்மை அவரை கோபம் கொள்ளச் செய்தது.

“அந்த பய வேற..., வேண்டாம்னு சொல்லிட்டு போனவன் அப்படியே போகாமல்..., இப்போ பின்னாடியே சுத்தி வரான்..., ஊர் பெரிய மனுஷங்க பஞ்சாயத்தை கூட்டவா..., வேண்டாமான்னு நானே யோசிச்சுட்டு இருக்கேன். இதில் இவ வேற....”.

“அப்படியெல்லாம் அவசரப்பட்டு எதையும் செஞ்சுப் போடாதீங்க...., கொஞ்சம் நிதானமா இருங்க...”.

“என்ன நீ..., இப்படியும் சொல்லுற..., அப்படியும் பேசுற..., உன் மனசுக்குள்ளே என்னதான் இருக்கு...?” மனைவியை கூர்மையாக ஏறிட்டார்.

“என் மனசுக்குள்ளே ஒண்ணும் இல்லை…., உம்ம பொண்ணு மனசுக்குள்ளதான் எல்லாம் இருக்கு….” பூடகமாக உரைக்க,

“என்னசொன்ன…? அவ மனசுக்குள்ளே…, செத்த இரு நீ…” மனைவியிடம் கண்டிக்கும் குரலில் உறுமியவர்,

“தீபி…, அம்மாடி…” உரக்க குரல் கொடுக்க, தந்தையின் குரலில், தன் அறையில் யோசனையில் அமர்ந்திருந்தவள், வேகமாக எழுந்து வெளியே வந்தாள்.

“அப்பா…, கூப்பிட்டீங்களா…?” தாயும் அங்கே இருக்கவே…, அவள் மனம் ஏனென்றே தெரியாமல் அதிர்ந்தது.

தாய், தந்தையை வேகமாக நோக்கியவள்…, தன் நைட்டியை அழுந்த பற்றிக் கொண்டாள். கை சற்று நடுங்கியது.

“இப்படி வந்து உக்காரும்மா…” தன் கட்டிலின் அருகே தட்டிக் காட்ட, தயக்கமாக அவர் அருகில் வந்து அமர்ந்தாள்.

“அம்மாடி…, உன் அப்பன்.., இது வரைக்கும் உனக்கு பிடிக்காத எதையாச்சும் செய்து இருக்கேனா?” அவர் கேட்க, அவள் மறுப்பாக தலை அசைத்தாள்.

“உன்னோட நிச்சயம் கூட…, உன் சம்மதத்தோடதான் நடந்தது. ஆனா…, நான் நல்லவன்னு நம்பின அந்த நாய்…” அவர் குரல் உயர்த்த, அவரது ‘நாய்’ என்ற சொல்லில்…, அவள் பார்வை பரிதவிப்பும், கெஞ்சலுமாக அவரை நோக்கியது.

அவளது பார்வையில்…, சட்டென தன் வேகத்தையும் வார்த்தைகளையும் அப்படியே நிறுத்தி விட்டார்.

மகளது பார்வையே…, அவன், அவள் மனதுக்குள் உறைந்து போயிருப்பதை அவருக்கு உணர்த்த, மனைவியை வேகமாக ஏறிட்டார். சியாமளாவின் பார்வை அர்த்தமுடன் அவர்மேல் பதிய, தன் கோபத்தை முழு வேகத்தில் வெளிப்படுத்த முடியாமல் தேங்கினார்.

“என்னம்மா…?” மனைவியிடமிருந்து பார்வையை திருப்பியவர், மகளது தலை கோத…, “அப்பா….” அவர் தோள் சாய்ந்து தேம்ப, ஏனோ அந்த அனுசரணை அவளை உடைத்துதான் போட்டது.

“ஐயோ…, என் பொண்ணு கண்ணில் ஒரு சொட்டு கண்ணீர் வராமல் வளத்தேனே…, இப்போ….” ஒரு பாசமிகு தந்தையால்…, அதை தாங்க முடியவில்லை.

மகளது அழுகையை சகிக்க முடியாமல், அவர் கண்களும் கலங்கியது. சற்று நேரம் அவள் அழுகையை சகித்தவர், தன் வீம்பை மூட்டை கட்டியவராக, “அம்மாடி…., வேண்டாம்…, அழாதே…, உனக்கு அவன்தான் வேணுமின்னா…, நான் அவன்கிட்டே பேசுறேன்…, உனக்காக இந்த அப்பன் எதையும் செய்வான் கண்ணு….” மகளது கண்ணீரைத் துடைத்தார்.

“வேண்டாம்…, அப்படியொண்ணும் நீங்க இறங்கிப் போக வேண்டாம். என் அப்பா யார்கிட்டேயும் கையேந்தி நிக்க நான் விட மாட்டேன். அது எனக்காக இருந்தாலும் சரி… என்ன கொஞ்ச நாள் இப்படியே விடுங்கப்பா.., பிறகு…” அதற்குமேல் சொல்ல முடியாமல் எழுந்து அறைக்கு ஓடியே போனாள்.

ஒரு பேச்சுக்காக கூட மற்ற திருமணத்துக்கு சம்மதிக்கிறேன் என சொல்ல முடியாமல் எழுந்து ஓடிய மகளைக் கண்டு, அவர் இதயம் ரத்தக் கண்ணீர் வடித்தது.

“சியாமளா…” கலங்கிய குரலில் மனைவியை அழைக்க, அந்த அழைப்பே தன் கணவன் மனதளவில் உடைந்து போயிருப்பதை உணர்த்த, வேகமாக அவரை நெருங்கினாள்.

“என்னங்க இது…, நீங்களே இப்படி உடைஞ்சு போனால்…, எல்லாம் விதிப்படிதான் நடக்கும். நான் சொல்லுறத கொஞ்சம் காது கொடுத்து கேக்கறீங்களா…” அவர் கை பிடித்து கேட்க, ‘சொல்…’ என்பதுபோல் அவரைப் பார்த்தார்.

“கொஞ்ச நாள் பொறுமையா இருப்போம்…, நீங்க கொஞ்ச நாள் மாப்பிள்ளையை முறச்சுக்காதீங்க….” அவர் முறைக்கவே…, “இதுக்குத்தான் சொன்னேன்…, அவரும் ஏதோ வேகத்தில் செஞ்சுட்டார். ஏதோ ஒரு கெரகம்…, அவங்களை பிடிச்சு ஆட்டுது. நம்ம பொண்ணு மனசு இப்போ உங்களுக்கு புரிஞ்சு போச்சுல்ல…, அதுக்கு தக்க நடந்துக்கங்க…” அவள் அறிவுறுத்த,

“அவதான் வேண்டாம்னு சொல்லிபோட்டு போறாளே…” அவர் குமுற,

“அவளே வேணுமின்னு கேப்பா..., அதுக்கு நீங்க தடை சொல்லாம இருந்தா போதும். இனிமேலாவது அவளை ரூமுக்குள்ளே அடைஞ்சு கிடக்க விடாமல்..., நாலு இடம் அழைச்சுட்டு போங்க..., புரியுதுங்களா...”.

“ஏண்டி..., நான்தான்..., அவன்...” மனைவியின் பார்வையில் சட்டென அடங்கிப் போனார்.

ஆனாலும்..., அவன்மேல் இருக்கும் கோபம் விடாமல்..., “என் எதிரில் அவன் வந்தா..., நிச்சயமா அவனை பொலி போட்ருவேன்..., அம்புட்டு ஆத்திரம் இருக்கு அவன் மேல்...” தன் கையை கட்டும் அவர்கள் பாசம் அவரை இவ்வாறு பேசத் தூண்டியது.

அவர் அதை சற்று உரக்க உரைக்க..., அதை உள்ளே இருந்து கேட்ட தீபிகாவின் மனம் துடித்துதான் போனது.

சூர்யாவுக்கு அன்று காலையிலேயே பேங்குக்கு போகவேண்டிய வேலை இருந்தது. தன் கடையை மேலும் விரிவுபடுத்த..., தொழில்கடன் கேட்டிருந்தான்.., அதற்காக மேனேஜர் இன்று அவனை வந்து பார்க்கச் சொல்லியிருந்தார்.

“மேனேஜரைப் பாக்கணும்....” அங்கிருந்த காவலாளியிடம் உரைக்க,

“உள்ளே ஆள் இருக்காங்க..., கொஞ்சம் வெளியே இருங்க...” அவன் உரைக்கவே..., மேனேஜர் அறைக்கு வெளியே இருந்த இருக்கையில் சென்று அமர்ந்தான்.

“அதெப்படி நீங்க இப்படி சொல்ல முடியும்...? அரசாங்கம் மானியம் வழங்கச் சொல்லி உத்தரவு போட்டு ஒரு மாசம் ஆகுதே...” ஒரு பெண்ணின் குரல் கோபமாக ஒலிக்க...,

‘நம்ம ஊருக்குள் இம்புட்டு தைரியமான புள்ளை யாருடா...?’ எண்ணியவன் திரும்பிப் பார்க்க, அவனால் தன் கண்களையே நம்ப முடியவில்லை.

அங்கிருந்த அதிகாரியிடம் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தவள்..., சாட்சாத் தீபிகாவே. சில நாட்கள் கழித்து அவளைக் காண்பதால்..., ஆர்வமாக அவளை நோக்கினான்.

அன்றைய அவளது பேச்சுக்குப் பிறகு..., உடனடியாக அவள் முன்னால் சென்று நிற்க அவனுக்கு சற்று தயக்கமாகத்தான் இருந்தது. அதைவிட, தன்னிடம் கொட்டிவிட்ட வார்த்தைகளுக்குப் பிறகு, அவள் மனம் சற்று தெளிந்து, தன்னைப்பற்றி சிந்திக்க வேண்டும் என விரும்பினான்.

“எம்மா..., கவர்மென்ட் ஆர்டர் போட்டிருக்கலாம்..., ஆனா..., அது எங்களுக்கு இன்னும் லீகலா வந்து சேரலை. அப்படி சேர்ந்தால் தான்..., நாங்க செய்ய முடியும். நீங்க கேட்டப்போ உடனே தூக்கி கொடுத்துட முடியாது...”, மேனேஜரும் கோபமானார்.

“சரி..., அந்த மானியத்தை தான் கொடுக்க முடியாது..., பயிர்க்கடன்..., உர மானியம்..., இப்படி எதையுமே கொடுக்க மாட்டேன்னு சொல்றீங்க. நகைக்கடன் மட்டும் உடனே கொடுக்கறீங்க? அப்போ..., தங்கத்துக்கு இருக்கும் மதிப்பு, ஒரு விவசாயியின் உழைப்புக்கு கிடையாதா?” கோபத்தில் அவளுக்கு மூச்சு வாங்கியது.

“இங்க பாரும்மா..., இங்கே யாருக்கு..., எப்படி லோன் கொடுக்கணும்.. எப்போ மானியம் கொடுக்கணும்..., எல்லாம் எனக்குத் தெரியும்..., உன்னால் என்ன முடியுமோ நீ பாத்துக்கோ...” கோபத்தில் குரல் உயர்த்தினார்.

“என்னால் முடிந்ததா...?” ஒரு மாதிரி குரலில் இழுத்தவள்..., “இரண்டாயிரத்துப் பதினொன்றில் வாங்கிய பயிர்க்கடன்..., அதுவும்..., முப்பதாயிரம் ரூபாய்க்கு மேல் வாங்கியவர்கள்..., இரண்டாயிரத்து பதினைந்து வரைக்கும் கட்டாமல் இருந்தால்...,

“அவங்களோட நில அளவு..., மூன்று ஏக்கருக்கு குறைவாக இருந்தால், அதை தள்ளுபடி செய்யச் சொல்லி உத்தரவு வந்ததாமே. ஆனா..., நம்ம பேங்கில் அதைபத்தியே மூச்சே விடக் காணோம்னு பேசிகிட்டாக..., நிசமா?” அவள் கேட்க, சட்டென திகைப்பது அவனது முக பாவனையிலேயே தெரிந்தது.

“ஏய்..., உனக்கு யார் இப்படி தப்பான தகவல் எல்லாம் தரது....? முதல்ல நீ இங்கே இருந்து எந்திருச்சு வெளியே போ. சின்னப்

பொண்ணாச்சேன்னு உள்ளே விட்டா..., பெரிய பேச்செல்லாம் பேசுற...", தன் இருக்கையில் இருந்து எழுந்தே விட்டான்.

"தப்பான தகவல்னா..., அப்போ ஐயா ஏன் இவ்வளவு டென்ஷன் ஆவறீங்க?" அவள் நக்கலாகக் கேட்க, அவள் தைரியத்தைப் பார்த்து வியந்தான் சூர்யா.

அவன் ஊர் பெண்கள் எல்லாம் பேங்குக்கு தனியாக வருவது என்பதே பெரிய விஷயம்..., இதில்..., மேனேஜரையே நிற்க வைத்து கேள்வி கேட்கிறாளே..., அவளை மெச்சாமல் இருக்க முடியவில்லை.

'இப்படி ஒரு பெண்ணைத்தானே எதிர்பார்த்தேன்..., அந்த தைரியம்..., தன்னம்பிக்கை...' அவனுக்குள் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தாள்.

மேனேஜர் எழுந்து அவள் அருகில் வருவதைப் பார்த்த சூர்யா..., கோபத்தில் அந்த அதிகாரி எதுவும் செய்துவிடக் கூடாதே என்ற வேகத்தில்..., சட்டென அறைக்குள் நுழைந்தான்.

அதைப் பார்த்த மேனேஜர்..., "ஓ..., ஆளையெல்லாம் வெளியே கூட்டி உக்கார வச்சுட்டுதான் உள்ளே வந்து இவ்வளவு சவடால் விட்டியா? அதானே பாத்தேன்..., என்னடா பொட்டக்கோழி ரொம்ப கூவுதேன்னு..." தன் மேல் இருக்கும் தவறை மறைக்க, பெண்ணின் பலவீனத்தில் அடிக்க முயன்றான்.

அவன் வார்த்தையில் வெகுண்டவள்..., சூர்யாவை முறைத்தவாறே..., அவனைப் பார்த்து, "யாரப் பாத்து பொட்டக் கோழின்னு சொன்ன..., இன்னைக்கே போய்..., உன் வண்டவாளத்தை சொல்லி..., உன்னைய வேலைய விட்டு அனுப்பல..." சவால் விட்டவள்..., அங்கிருந்து வெளியேறினாள்.

"போடி போ..., உன்னால் என்னை எதுவும் செய்ய முடியாது..." மேனேஜர் குரல் அவளைத் தொடர்ந்தது.

அதைக் கண்டுகொள்ளாமல் அவள் நடக்க..., அவள் பின்னால் ஓடிய சூர்யா..., "இப்படித்தான் தனியா வந்து பேசுவாங்களா...?", அவள் பாதுகாப்பை பற்றிய பயம் அவனுக்குள்.

தான் அந்த வார்த்தைகளை அவளிடம் கேட்ட பிறகுதான்..., தான் தைரியமான பெண் வேண்டும் என நினைத்ததற்கும், இப்பொழுது அவள் செய்கையில் ஒரு நொடி வியந்த அவன் மனம்..., அடுத்த நொடியே..., அவள் பாதுகாப்பு பற்றி சிந்திக்க..., தன் சிந்தையின் முரண்பாடைக் கண்டு திகைத்தான்.

அவளோ..., 'தனியாவா...' அவனிடம் பார்வையில் வினவியவள், பதில் பேச மறுத்து திரும்பி நடக்க முயல,

"தீபா...", அவன் அழைக்க, சிலநாள் பிரிவு, அவளையும் அவனை ஆர்வமாக நோக்கத் தூண்டியது. கூடவே..., வாயாடவும்.... அவன் தன்னை வேண்டாம் என சொல்லிச் சென்றாலும்..., தன்னை நாடிவரும் அவன் செய்கை அவளை..., அவள் மனதை ஒரு பக்கம் தாலாட்டியது.

அதை அவனிடம் வெளிப்படுத்தாமல்..., "என்னவோ நீங்கதான் பெத்து பேர் வச்ச மாதிரி உரிமையா கூப்பிடுறீங்க..?" அவள் கோபம் காட்ட, அதற்கு பதில் கொடுக்க முடியாமல் திகைத்தான். ஆனாலும்..., அவள் கண்கள் அவளுக்கு விரோதியாகி..., அவள் ஏக்கத்தை, எதிர்பார்ப்பை, ஆசையை அவனுக்கு உணர்த்த...., அவள் கோபத்தை ரசித்தான்.

அது ஒரு நொடிதான். தன்னை சுதாரித்தவன்..., "என்னைய...", அவன் தயக்கமாகத் துவங்க, அவளுக்கு ஆத்திரமாக வந்தது..., 'இவர் எதுக்குதான் பின்னாடி வரார்..., இவருக்கு என்னதான் வேணும்...' சட்டென ஒரு கோபம்...

"என்ன..., மன்னிச்சிடணுமா...? மன்னிச்சுட்டேன்னு சொன்னால்..., என் பின்னாடி வரதை நிறுத்திடுவீங்களா...? அப்போ சரி..., நான் உங்களை மன்னிச்சுட்டேன் போதுமா...? இப்போ சந்தோஷமா...? போங்க...,

"இனிமேல் என் பின்னாடி வராதீங்க..., அப்படி வந்தீங்க..?" மூக்குநுனி சிவக்க, கோபமா..., துயரமா எனத் தெரியாத குரலில் உரைத்தவள், பேங்குக்கு வெளியே இருந்த மரத்தடியில், அவளுக்காக காத்திருந்த கூட்டத்துக்குள் ஐக்கியமானாள்.

“வரக் கூடாதா..., சரி இனிமேல் வரலை...” அவன் குரல் முதுகின் பின்னால் ஒலிக்க..., அது ஏற்படுத்திய அதிர்வை மீறி சென்றே விட்டாள்.

‘இப்பவும் தப்பிச்சுட்டாளே....’ அவள் பின்னால் செல்லப் போனவன், நடையை நிறுத்தி விட்டான்.

‘என்னைய கட்டிக்கிறியான்னு கேக்க வந்தால்..., நான் சொல்ல வரதையே கேக்காமல் பொரிஞ்சுட்டு போறா...? எப்படியோ..., பேசிட்டால்ல..., எனக்கு அது போதும்...’, அவன் மனதுக்குள் ஒரு பெரும் நிம்மதி.

அவள் கண்களில் தெரிந்த ஒருவித எதிர்பார்ப்பு.., தன் பேச்சால் எழுந்த ஏமாற்றம்..., அதை மறைக்க அவள் கொண்ட கோபம்..., அவனுக்கு வானத்தில் பறக்கும் உணர்வு.

உன்னை விட்டு புடிக்கறேண்டி என் பொண்டாட்டி... மனதுக்குள் கொஞ்சியவன், அவளையே ஆசையாய் பார்த்திருந்தான். அடுத்தவாட்டி நல்லபடியா பேசணும்...’ முடிவெடுத்தான்.

“என்னம்மா சொன்னான் அந்த மேனேஜர்...?” அவளது தந்தை அவளிடம் கேட்க,

“என்னத்த சொல்லுவான்..., ஆடு களவாண்டவன் கணக்கா முழிக்கறான். இந்த மேனேஜர் சரியே வரமாட்டாம்ப்பா..., நாம மேலிடத்துக்கு ஒரு பெட்டிஷன் கொடுப்போம். புதுசா வரவன் எப்படின்னு பாக்கலாம்....”, உரைத்தவள், அவர்களோடு நடந்தாள்.

தூரத்தில் இருந்து அவற்றைப் பார்த்தவன்..., ‘பொண்ணை நல்லாத்தான் வளத்து வச்சிருக்கார். ஹம்..., நாமதான் நடுவில் புகுந்து சொதப்பிட்டோம் போல...’ திருமணத்தை நிறுத்திய தன் மடத்தனத்தை நொந்து கொண்டான்.

அவள் தன் தந்தையிடம் உரையாடுவதைப் பார்த்தவன், அவள் பாதுகாப்போடுதான் வந்திருக்கிறாள் என்பதை உறுதிபடுத்திக்கொண்டு, திரும்பினான்.

ஏனோ..., இதற்குமேல் உள்ளே சென்று தன் தொழில்கடன் பற்றி பேச மனமின்றி..., வீட்டுக்கு நடையைக் கட்டினான்.

பேச்சு தன் தந்தையிடம் இருந்தாலும்..., தன் கவனத்தை சூர்யாவின் பக்கம் வைத்திருந்தவள்..., அவன் அங்கே இல்லாமல்..., திரும்பிச் செல்வதைப் பார்த்தவளுக்கு..., இதயம் பிளக்கும் வலி.

மேனேஜர் அறைக்குள் அவனைப் பார்த்த பொழுது..., அவன் கண்களில் தெரிந்த அக்கறையை கண்டு மனம் நனையவே செய்தது.

தனக்கு ஏதோ ஆபத்து என காக்க வந்த அவன் செய்கை..., அந்த செயலை, உரிமையாக கொண்டாட முடியாத தன் துர்பாக்கிய நிலை...., 'ஓ..' வென கதற வேண்டும்போல் இருந்தது.

ஒரு விதத்தில் அவன் செய்கையில் மனம் நனைய அவள் வெளியேற.., அவன் பேச்சைத் துவங்கிய விதம்..., 'இந்த மன்னிப்பை வேண்டத்தான் என் பின்னால் அலைகிறாரா...?' எதையோ எதிர்பார்த்து ஏமாந்த உணர்வு.

தன் தந்தையிடம்..., தான் இயல்பாக மாறி விட்டோம்..., மனதுக்குள் எந்த அழுத்தமும் இல்லை..., தான் சரியாகத்தான் இருக்கிறோம் என காட்ட வேண்டி, அவர் கேட்டவுடன் இந்த பேங்குக்கு வந்தது தவறு..., தன்னையே கடிந்து கொண்டாள்.

'வீட்டிலேயே இருந்திருந்தால் இந்த வலி இருந்தே இருக்காதே...' காலம் கடந்த நினைவு...,

'இனிமேல் அவர் வந்தால்..., அவர் முகத்திலேயே முழிக்கக் கூடாது...' தீர்மானித்தாள். 'எதிர்பார்க்க வைத்து ஏமாற்றுவதே இவர் வேலையாக போயிற்று...' மனம் நொந்தாள்.

அதே நேரம்...., தன் மனதுக்குள் பொத்தி வைத்த காதல் கைகூடி வந்து..., அது கனவாகிப் போனதை ஏற்க மனம் தயாராகவே இல்லை. ஒரு இனிமையான கனவு கண்டுகொண்டிருக்கும் வேளையில்...., முகத்தில் சுடுநீர் தெளித்தார் போன்ற அவன் செய்கை..., மனம் வெதும்பி, கனத்துப் போனது.

மனதுக்குள் நினைப்பவனையே கைபிடிக்கும் பாக்கியம் அனைவருக்கும் கிடைக்காதுதான்..., ஆனாலும்..., அந்த வயதில்..., அவன் முகம் பார்க்காத பொழுதே..., அவன்

செய்கை ஏற்படுத்திய தாக்கம்..., மனதுக்குள் அவன் உறைந்து போன விதம்..., 'மறக்க முடியுமா என்ன...?' கேட்டவளுக்கு, தன் நிலை மிகவும் பரிதாபமாகத்தான் இருந்தது.

# சிப்பி – 12

தீபிகாவுக்கு, அடுத்து வந்த நாட்கள் பெரும் துயரமாகத்தான் கடந்தது. பேருந்தில் பின்தொடர்வதை நிறுத்தி விட்டான். பள்ளிக்கும் வரவில்லை..., அவனைக் காணவே வழியில்லை..., துக்கம் பொங்கியது.

'நான் என் பின்னால் வராதே என்று சொன்னவுடன், வராமே இருந்து விட்டாரா? அப்போ எல்லாம் அவ்வளவு தானா...?' எண்ணுகையிலேயே கண்கள் நனைந்தது.

நிம்மதி வேண்டும் என மனம் போராட..., கோயிலுக்குச் செல்ல முடிவெடுத்தாள். தாயிடம் சொல்லிவிட்டு..., பூஜைக்குத் தேவையான அனைத்தையும் எடுத்துக் கொண்டு, நடையை எட்டிப் போட்டாள்.

சித்ராவை அழைக்கலாம் என்றால்..., அவள் வீட்டுக்கு தூரமாகி இருப்பாள் என்பதால்..., தனியாகவே நடந்தாள்.

தனிமை அவளை கண்டதையும் நினைத்து கலங்கச் செய்தது. கோவில் வரவே..., முயன்று மனதை ஒருமுகப் படுத்தியவள், வேண்டுதலை முன்வைக்க விரும்பினால்..., 'அவனைக் காண வேண்டும்...' என்றே மனம் முனகியது.

தீபாரதனையை கண்ணில் ஒற்றிவிட்டு, பிரகாரத்தை சுற்றச் சென்றாள். முதல் சுற்று முடித்து..., இரண்டாம் சுற்றுக்கு..., அவள் வழியை யாரோ மறிப்பதுபோல் இருக்க, சட்டென நிமிர்ந்து பார்த்தாள்.

அந்த நொடி..., உலகம் அதன் இயக்கத்தை அவளுக்காக நிறுத்திதான் விட்டது. 'என் வேண்டுதல் பலித்து விட்டதா...?' உள்ளம் சிலிர்க்க, அவன்மேல் இருந்து அசைய மறுத்தது அவள் பார்வை.

அவள் பார்வையை கண்டவனுக்கோ..., மனதுக்குள் அடைமழை. எவ்வளவு நேரம் அப்படியே நின்றார்களோ..., கோயில் மணி ஒலித்து அவர்களை கலைக்க, 'வரமாட்டேன்

எனச் சொன்னாய்...' அவள் பார்வை அவனிடம் மௌனமாக கேள்வி கேட்டது.

அதைப் புரிந்தவனாக..., "உன் பின்னாடிதான் வர மாட்டேன்னு சொன்னேன். இப்போ நான் உன் முன்னாடிதானே நிக்கறேன்..." அவன் விளக்கத்தில் நெஞ்சுக்குள் ஏனோ நிம்மதி.

இதயம் படபடக்க..., தான் இருக்கும் இடம் நினைவிற்கு வர..., கூடவே..., தன் எதிர்பார்ப்பும், ஏமாற்றமும் வலு சேர்க்க..., விலகி நடந்தாள். அவள் செல்லவே..., "பேச மாட்டியா...?" ஏக்கம் தொனித்த அவன் குரல் அவள் கால்கள் இரண்டையும் கட்டிப் போட்டது.

வேகமாக அவளை நெருங்கியவன்..., அவள் பக்கவாட்டில், சற்று நெருங்கி நின்றான்.

அவன் நெருக்கத்தில் நெஞ்சம் படபடத்தது...., 'உங்ககிட்டே மட்டும்தான் காலம் முழுக்க பேச ஆசைப்பட்டேன்...' அவள் மனம் மௌனமொழியாய் அவனுக்கு பதில் கொடுத்தது.

அவள் விலகிச் செல்லாததே நிம்மதியையும், நம்பிக்கையையும் அளிக்க, "உன்ன பாக்காம இருக்க முடியல..." அவன் உதிர்த்த வார்த்தைகள் மனதிலும் உடலிலும் பல அதிர்வலைகளை நிகழ்த்தியது.

அதைத் தாங்க முடியாமல்..., நடக்க முயல..., "ஒரு நிமிஷம் என்னைப் பாரேன்..." அவள் கண்களில் காதலைக் காண அவன் மனம் கெஞ்சிற்று.

'இதற்குமேல் அங்கே ஒரு நிமிடம் நின்றாலும்..., அவன் தோள் சாய்ந்து அழுதே விடுவோம் எனத் தோன்ற..., "எனக்குப் போகணும்..." அவனைப் பார்க்காமல் முகத்தை பக்கவாட்டில் திருப்பிக் கொண்டாள். கலங்கும் கண்களை இமைகொட்டி தடுத்தாள்.

அதை உணர்ந்தவனாக...., "உன் மனசுக்குள் நான் இல்லையா...? இல்லன்னு சொல்லு..., நான் இப்படியே போய்டுறேன்..." அவள் வாயால் அவள் நினைப்பை அறியும் வேட்கை அவனிடம்.

அவனது இந்த கேள்வி..., அவளை கலவையான உணர்வுக்குத் தள்ள..., "மனசுக்குள்ளே இல்லாமத்தான் சாவுற வரைக்கும் போனேனா...? ஆனா..., என் அன்புக்கு ஒரு அர்த்தமும் இல்லாதபோது..., அந்த பைத்தியக்காரத்தனத்துக்கு உங்ககிட்டே என்ன மதிப்பிருக்க போகுது..." வெடித்துச் சிதறும் மனநிலை அவளிடம்.

அவன் முகம் பார்க்க மறுத்தே இவற்றையும் உரைக்க..., "இதை அப்படியே என் முகத்தைப் பார்த்து சொல்..." அவன் அழுத்தமாக நிற்க, 'இவன் என்ன விளையாடுகிறானா...?' அவன் முகம் ஏறிட முயன்றவள், அந்த முயற்சியை கைவிட்டாள்....

அவன் முகம் பார்க்கும் தைரியம் அவளுக்கு இல்லை..., தேகம் நடுங்க, செல் என ஒரு மனம் உரைக்க..., நில் என ஆசை மனம் தடுக்க..., உயிர்ப்புக்கும், மரணத்துக்கும் இடையிலான ஒரு போராட்டம் அவளுக்குள்.

அவள் மனம் கதறுவதை உணர்ந்தவனாக..., நிலைமையை சமாளிக்க முயன்றான். அவள் மனதுக்குள் இருக்கும் இந்த நினைப்பு போதுமே.., இந்த சம்மதம் போதுமே...., "சரி..., பாக்கத்தான் மாட்ட..., பிரசாதமாவது தாயேன். குளிச்சுட்டு அப்படியே வந்துட்டேன்..., ரொம்ப பசிக்குது..." அவன் கேட்டு..., அவள் மறுப்பதா?

தன் மனநிலை முற்றாக மாற, கையில் வைத்திருந்த பையில் இருந்து வாழைப்பழத்தை அவள் எடுக்க..., "விபூதி கூட வச்சுக்கலை..." அவன் உரைக்க, அவள் பார்வை உயர்ந்து, அவன் நெற்றியில் பதிந்தது.

இடக்கைக்குள் ஈரத்தில் நனைந்திருந்த விபூதி குங்குமத்தை அவன் பக்கம் நீட்ட..., "நீயே வச்சு விடேன்..." அவன் கேட்க, சட்டென கரத்தை மடக்கிக் கொண்டாள்.

"சரி..., சரி..., நானே எடுத்துக்கறேன்...." அவன் சமாதானத்துக்கு வர, தயக்கமாக கரத்தை நீட்டினாள்.

விபூதியை எடுக்கும் சாக்கில்..., அவள் உள்ளங்கையை கிள்ளி அதை எடுக்க, அவசரமாக கரத்தை உருவிக் கொண்டாள்.

பழத்தை அவன் கையில் திணித்தவள்..., அங்கிருந்து அகன்று செல்ல, "ஏதாவது சொல்லிட்டு போ தீபா..., உன் நினைப்பாவே இருக்கு..., இதற்குமேல் ஒத்திப்போட முடியும்னு தோணலை..." பின்னால் இருந்து சற்று குரல் உயர்த்தி கத்த, அதைக் கண்டுகொள்ளாமல் சென்றாள்.

'ஐயோ..., என்ன நடக்கிறது எனக்குள்...? நடந்து முடிந்தவற்றுக்கு அவனால் என்ன விளக்கம் கொடுக்க முடியும்? எதையும் சிந்திக்காமல்...' தன்னையே நொந்தவளாக கிட்டத்தட்ட ஓடினாள்.

கோயில் நடை வரைக்குமே அவனைத் திரும்பிப் பாராமல் செல்ல, அவன் மனமோ சற்று சோர்ந்து போனது. 'திரும்பிப் பார் தீபா...' மனதுக்குள் முனக, ஓட்டமாக ஓடியவளோ..., நடையைத் தாண்டுகையில் தன்னையும் மீறி, அவனை திரும்பிப் பார்த்தாள்.

அவள் கண்களில் தெரிந்த கலக்கத்தில்..., நொறுங்கிக் கொண்டிருந்தான் அவன்.

சூர்யாவுக்கோ...., அடுத்து வந்த நாட்கள் வாரத்தை எட்டிய பிறகும், தீபிகாவிடம் மனம்விட்டு பேச முடியாத ஏக்கம் மனதை அரித்தது. மனதுக்குள் இருப்பதை அவளிடம் கொட்டிவிட தவித்தது.

பள்ளியிலும் சரி..., பேங்கிலும் சரி..., கோவிலிலும்..., அவளை அருகில் கண்ட பிறகும், அவளை நெருங்கிய பிறகும், மனம் திறந்து பேச முடியாத விதம், தன்னையே நினைத்து கொஞ்சம் வருத்தமாகக் கூட இருந்தது.

தன் அவசரபுத்தி தன் வாழ்க்கையை எங்கே வந்து நிறுத்தி இருக்கிறது என்பதை நினைக்கையில்..., எதுவுமே ஓடவில்லை. செய்யும் தொழில்..., அதை விஸ்தரிக்க நினைத்த நினைப்புகள், அனைத்தும் அதே இடத்தில் உறைந்து போனது.

அவனது நண்பர்கள் அனைவருமே சொல்லி வைத்தாற்போல்..., அவனது மனைவியை விலக்கி வைத்துவிட்டதாகவே பேசினார்கள். அதைவிட..., எந்த நிமிடம்..., தீபிகாவின் இடத்தில் தன் அக்கா இருந்திருந்தால்...,

என்ற நினைப்பு விழுந்ததோ..., அந்த நொடியில் இருந்து, நிம்மதியாக ஒரு வாய் உணவை உண்ணவோ..., உறங்கவோ முடியாமல் தவித்தான்.

அந்த தவிப்புதான்..., உடனடியாக..., குறித்த முகூர்த்தத்திலேயே..., அவளோடான திருமணத்தை நடத்திவிட துடித்தது.

தமக்கையின் வாழ்வில் குழப்பம் வந்துவிடக் கூடாது என இத்தனை நாட்களாக அவளிடம் சொல்லாமல் தவிர்த்தவன், இதற்குமேல் தனியாக எதையும் செய்ய முடியாது எனத் தோன்றவே..., சந்திராவிடம் பேச முடிவெடுத்தான்.

கடையில் இருப்பு கொள்ள முடியாமல், முருகன் வயலுக்கு கிளம்பியிருப்பான் என்ற நம்பிக்கையில், வீட்டுக்கு கிளம்பினான்.

ஆனால்..., அங்கே..., அவன் நம்பிக்கையை பொய்யாக்கிவிட்டு, வீட்டில் அமர்ந்திருந்தான் முருகன். அவனை அந்த நேரம் அங்கே எதிர்பார்க்காமல் சற்று தடுமாறியவன், வேகமாக தன் அறைக்குள் புகுந்து கொண்டான்.

தன் தலையிலேயே அடித்துக் கொண்டான். தன் அவசர செய்கை, தன்னை எங்கே கொண்டுவந்து நிறுத்தி இருக்கிறது..., என்பதை எண்ணுகையிலேயே, தனக்கே தன்னை பிடிக்கவில்லை.

“என்ன தம்பி இந்த நேரத்தில் வீட்டுக்கு வந்திருக்க...?” சந்திரா குரல் கொடுக்க,

‘இது வேற..., மனுஷன் அவஸ்தை புரியாமல்...’ மனதுக்குள் புலம்பியவன், “இல்லக்கா...., உரம் வாங்க காசு எடுத்துட்டு போக வந்தேன்...” அறைக்குள் இருந்து கத்தியவன், தன் கட்டிலில் அமர்ந்து கொண்டான்.

கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். ‘இவன் இப்படி செய்பவன் இல்லையே...’ இருவரின் யோசனையும் ஒன்றாகத்தான் இருந்தது.

அவர்கள் எண்ணம் உணர்ந்தவன் போன்று..., சூர்யாவும் தன் தலையிலேயே அடித்துக் கொண்டான். ‘ஏன் இப்படி சொதப்பறேன்...?’ தனக்குத் தானே கேட்டுக் கொண்டான்.

திருமணம் வேண்டாம் எனச் சொல்வதற்கு இருந்த வேகம்..., வேண்டும் என சொல்வதற்கு ஏன் இல்லை. அப்படியென்ன தயக்கம்...’ தனக்குத் தானே கேட்டுக் கொண்டான்.

கட்டிலில் அமர்ந்திருக்க முடியாமல், எழுந்தவன், அறையை குறுக்கும் நெடுக்குமாக நடந்தான். அவன் உள்ளே சென்று நேரம் செல்லவே...,

“ஏன்டா..., பணம் எடுக்க இம்புட்டு நேரமா...?” சந்திரா மீண்டும் கத்த,

“எண்ணிகிட்டே இருக்கான் போல...” முருகன் பதில் குரல் கொடுக்க, இதற்குமேல் அறைக்குள் இருக்க முடியாது என உணர்ந்தவனாக வெளியே வந்தான்.

சந்திரா முருங்கைக் கீரையை ஆய்ந்து கொண்டிருக்க, தன் மாமாவை ஒரு பார்வை பார்த்த சூர்யா, தயக்கமாக தமக்கையை நெருங்கினான்.

‘இவன் தோரணையே சரியில்லையே...’ முருகன் எண்ண..., மனைவியை முறைப்பாக ஏறிட்டான்.

‘ஆத்தி..., இவரு அன்னைக்கு சொன்ன மாதிரி எதையாச்சும் சொல்லப் போறானா?’ சந்திராவின் மனம் எண்ணிக் கொண்டது.

“மாப்ள..., உரம் வாங்கப்போறேன்ன..., இப்போ கீரை ஆய உக்கார்ற...” முருகன் நக்கலாக வினவ, சந்திரா கணவனை கெஞ்சலாக பார்த்தாள்.

சூர்யாவோ..., அவனை கண்டுகொள்ளாமல், “அக்கா..., நானு..., தீபிகாவையே கட்டிக்கறேன்...” தயங்கினாலும் வார்த்தைகளை உதிர்த்தே விட்டான்.

“கேட்டுக்கடி..., அவளையே கட்டிக்கிறாராமாம்..., சரி..., எவன் கொடுப்பான்னு கேளு..., அவ அப்பன் எங்கே பாத்தாலும், என்னையவே வெட்டவா குத்தவான்னு பாக்கறான். இதில்

இவர் தாராள மனசா ஒத்துக்கறார்....” அவன் குரலில் நக்கல் வழிந்தது.

“டேய்..., நிசமாத்தான் சொல்றியா...?” கணவனின் பேச்சை கண்டுகொள்ளாமல், தம்பியிடம் வினவ,

“ஏண்டி..., இங்கே ஒருத்தன் பேசுறது உன் காதிலேயே விழலையோ...?” கடுப்பானான்.

“என்னங்க நீங்க..., அந்த புள்ளைக்கும் பிடிச்சிருக்கு...., இவனுக்கும் சம்மதம்...., பொறவு..., நாமதானே நடத்திக் கொடுக்கணும்...” கணவனிடம் கெஞ்சினாள்.

“அந்த புள்ளைக்கு புடிச்சிருக்கா...? எவன் சொன்னான்..., அந்த புள்ளைக்கு மட்டும் புடிச்சிருந்தா..., இந்நேரம் உன் தம்பி உன்னைய அத்தையாக்கி இருப்பான்..., அது தெரியுமா உனக்கு...” அவன் கேட்க,

“ஆங்...” வியந்தவள், தம்பியை அதிர்வாய் நோக்க, அவனோ, ஒரு சங்கடமான முகபாவத்தோடு தன் மாமாவை திரும்பிப் பார்த்தான்.

“மாப்ள..., நானும் உன்ன கவனிச்சுகிட்டுதான் இருக்கேன்..., பின்னாடி சுத்துனது வேலைக்கு ஆகலையோ...” கூர்மையாக கேட்க, தலை கவிழ்ந்தான்.

“இப்போ எந்த மூஞ்சிய வச்சுகிட்டு அங்கே போகணுமுன்னு சொல்லுத? அவங்க வீட்டுக்கு போனா..., அந்த புள்ளையே உன் மூஞ்சியில் காரி துப்பும். அதை வாங்கியே ஆவணுமா? செஞ்ச வேலை பத்தாது..., இன்னும் அசிங்கம் வேற படணுமா...?

“இதுக்குதான் அன்னைக்கே நான் சொன்னேன்..., விஷயம் இத்தோட முடிஞ்சு போச்சுன்னு..., எனக்கும் இத திரும்பத் திரும்ப சொல்ல சங்கடமாத்தான் இருக்கு. ஆனா..., நீ சொல்ல வைக்கிற...” கோபம் காட்டினான்.

“இல்ல மாமா..., தீபாவுக்கு என்னை புடிச்சிருக்கு...” திடனாக உரைக்க, முருகன் தன் நெற்றியை தேய்த்துக் கொண்டான்.

“ஆமாங்க…” துவங்கிய சந்திரா…, கணவனின் பார்வையில் சட்டென அமைதியானாள்.

“அதெப்படி உனக்குத் தெரியும்…?” முருகன் கேட்க, “என் மனசு சொல்லுது மாமா…” அவன் பதிலில் முருகனுக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை.

‘தீபிகாவின் பார்வைகள் ஏற்படுத்திய நம்பிக்கை அது…, சட்டென அவள் கண்கள் வெளிப்படுத்தும் அந்த பிரகாசம் மட்டுமே அவனை தொல்லை செய்து கொண்டிருந்தது…, அவள் கண்களில் இறுதியில் வெளிப்படும் கோபம்…, தன் செய்கைக்கான வெளிப்பாடு என்பது அவனுக்குப் புரியாதா?

“இந்த மனசு சொல்லுற பேச்செல்லாம் இங்க வேண்டவே வேண்டாம். கூடவே இருக்க உன் மனசையே எங்களால் புரிஞ்சுக்க முடியலை, இதில், அவ மனசை புரிஞ்சுகிட்டேன்னா…, இதெல்லாம் வேலைக்கே ஆகாது…

“அவ மனசுக்குள் நீ இருக்கன்னு உறுதியா தெரிஞ்சுகிட்டு வா…, நானே உனக்கு வேண்டி அவங்க வீட்டில் போய் பேசுறேன்…” முருகன் இவ்வளவு இறங்கி வந்ததே பெரிது என்பதுபோல் அமைதியாக கேட்டுக் கொண்டான்.

# சிப்பி – 13

முருகன் சொன்ன விஷயத்தை அவ்வளவு சாதாரணமாக சூர்யாவால் தள்ளிவிட முடியவில்லை. தீபிகாவை சந்தித்து உறுதியாக பேசிவிடும் முடிவை எடுத்தவன், மீண்டும் பள்ளிக்குச் சென்று பேசிவிட முடிவெடுத்தான்.

யார் என்ன நினைத்தாலும் அதைப்பற்றி கவலைப்பட அவன் தயாராக இருக்கவில்லை.

பள்ளிக்குச் சென்றவனை, மூடிய கேட்டே வரவேற்க…, வெளியே இருந்த பெட்டிக் கடையில் போய் விசாரித்தான்.

“அதுவா தம்பி…, இன்னைக்கு…, இந்த பள்ளிகூடத்தை ஆரம்பிச்சவரோட நினைவு நாளாம்…, அதான் பள்ளிக்கூடம் லீவு…”, அவர் உரைக்க, தான் வந்த நேரம் இப்படியா ஆக வேண்டும் என நொந்து போனான்.

ஆனாலும்..., எடுத்த முடிவில் இருந்து பின்வாங்க முடியாமல்...., அவர்கள் வீட்டுப்பக்கம் சென்று பார்க்கலாம் என முடிவெடுத்தவன், பஸ் ஏறினான்.

அவர்கள் தெருவில் இறங்கி நடக்க..., அவனை எதிர்கொண்டாள் சித்ரா.

அவளைக் கண்டவனது முகம் பிரகாசமாக..., “ஒரு நிமிஷம்...” அவள் எதிரில் சென்று நின்றான்.

“என்ன..., இந்தப் பக்கம்...?” தன் மகனை இடுப்பில் இருந்து இறக்கியவளாக வினவ,

“எனக்கு ஒரு சின்ன உதவி....” தயங்கியவன்..., “தீபா கிட்டே கொஞ்சம் பேசணும்...” அவள் ‘அதுக்கு...’ என்பதுபோல் பார்க்க..., இவளிடம் எப்படி சொல்வது என தயங்கி நின்றுவிட்டான்.

“தைரியம்தான்....” அவள் இழுக்க...,

அவன் சங்கடம் உணர்ந்தவளாக..., “அவ வீட்டில் இல்லை..., அப்பனுக்கு சோறுகொண்டு வயக்காட்டுக்கு போயிருக்கா..., தெக்கால போனா..., நாலு கஜ தூரத்தில் அவங்க வயக்காடு இருக்கு...” அவனுக்கு தகவல் சொல்லிவிட்டு கிளம்பிவிட்டாள்.

“நன்றிங்க...” உரைத்தவன், இதுவே போதும் என்பதுபோல்..., நடையை விரைவுபடுத்தினான்.

அவன் சென்ற இடம் மொத்தமுமே வயக்காடாக காட்சியளிக்க, ‘இங்கே அவளை எப்படித் தேடுவது...?’ திகைத்து நின்றுவிட்டான்.

‘அப்பாவுக்கு வயலுக்கு சோறு கொண்டு வந்தாள் என்றால்..., அப்போ அங்கே ஏதோ வேலை நடக்குன்னு அர்த்தம்..., தேடுவோம்....’ நடையைத் தொடர்ந்தான்.

வயலுக்குள் செருப்புக் காலோடு நுழைய முடியாது என்பதால்..., செருப்பை அங்கேயே விட்டுவிட்டு..., வரப்பில் ஏறி நடந்தான்.

இரண்டு மூன்று வயல்களை சுற்றிய பிறகும்..., அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை. வெயிலும் உச்சிக்கு ஏற..., சற்று

தாகமாகக் கூட இருந்தது.

காலையில் சாப்பிட்ட பிறகு, தண்ணீர் கூட குடிக்கவில்லை..., கூடவே அலைச்சல்..., தான் கட்டியிருந்த வேஷ்டி நுனியில் வியர்வை வழியும் முகத்தை துடைத்துக் கொண்டான்.

வயல்காட்டில் நிச்சயம் கிணறு, பம்ப் செட் இருக்கும் என்பதால், பார்வையை சுழற்ற..., தூரத்தில் ஒரு சிறு பம்ப் செட் இருப்பது அவன் பார்வைக்குப் பட்டது.

அதன் அருகிலேயே..., ஒரு பெரிய வேப்பமரம் இருப்பதைப் பார்த்தவன், அதன் குளுமையை அனுபவிக்க விரும்பினான். அத்தோடு அதன் அருகில் வைக்கோல்போர் இருக்கவே..., அங்கே அருகில் களத்துமேடு இருப்பதையும் உறுதிபடுத்திக் கொண்டான்.

இப்பொழுதுதான் வயல் கதிர் விட்டிருப்பதால்..., களத்துமேட்டில் யாரும் இருக்க மாட்டார்கள் என்பதும் உறுதியானது.

கிணறு என்றால்..., நீர் இறைக்கும் கிணறு அல்ல..., மாறாக..., வயலுக்கு நீர் இறைக்கும் கிணறு என்பதால், அதன் சுற்றளவு பத்தடி இருக்கும். அதில் நீர் அருந்த வேண்டுமென்றால்..., ஒன்று பம்ப் செட்டை ஆன் செய்து அருந்த வேண்டும்..., இல்லையா..., அதன் ஓரத்தில்..., உள்பக்கமாக இருக்கும் படிகளில் இறங்கி நேரடியாக அருந்த வேண்டும்.

மோட்டார் போட முடியாது என்பதால்...., கிணற்றுக்குள் இறங்கிவிடலாம் என எண்ணினான். கிராமத்தில் இருக்கும் அனைவருக்குமே நீச்சல் தெரியும் என்பதால், கிணற்றில் இறங்க அவனுக்கு ஒன்றும் பயம் இல்லை.

கிணற்றை நெருங்கியவன், அதன் ஆழம் எவ்வளவு..., எந்தப் பக்கம் படி இருக்கிறது என அறிந்துகொள்ள, கிணற்றுக்குள் எட்டிப் பார்க்க..., சுகமாய் அதிர்ந்து போனான்.

அவனே எதிர்பாராத விதத்தில்..., கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது போல்...., தீபிகா கிணற்றுக்குள் குளித்துக் கொண்டிருந்தாள்.

தன் உள் பாவாடையை ஏற்றிக் கட்டியிருந்தவள்..., மீன் குஞ்சாக நீந்திக் கொண்டிருந்தாள். தான் பேச வந்ததையே மறந்து ஒரு நொடி அப்படியே நின்றுவிட்டான்.

ஒரு பெண் குளிப்பதை பார்ப்பது தவறு எனத் தெரிந்தாலும்..., தனக்கு உரிமையானவளை..., உடைமையாகப் போறவளை பார்ப்பது தவறில்லை என்றே தோன்றியது.

சற்று நேரம் நீருக்குள் நீந்தியவள்..., தன் நீச்சலை நிறுத்திவிட்டு, நீரின் மட்டத்தில் இருந்த இறுதிப் படியில் ஏறி அமர்ந்தவள்..., சோப்பைக் குழைத்து, தன் கையிலும்..., கழுத்திலும் தேய்த்துக் கொண்டவள்..., சட்டென, அவனே எதிர்பாராத அதைச் செய்தாள்.

பாவாடையை சட்டென முழங்காலுக்கு மேலே ஏற்றியவள், தன் வாழைத்தண்டு காலில் சோப்பை தேய்த்தாள். வெயிலின் தாக்கத்தில்..., அவள் கால்கள் இரண்டும் தங்கம்போல் மின்ன..., மூச்சடைக்க..., இதயம் தாறுமாறாக துடிக்க, இமைக்க கூட மறந்து, எச்சில் விழுங்க மறந்து..., அவளையே வெறித்தான்.

‘காலே இப்படியென்றால்....’ யோசனை தாறுமாறாக..., சிந்தையோ கற்பனையில் மிதந்தது.

அங்கிருந்து விலகு என மூளை அறிவுறுத்த, அவன் இளமை முறுக்கோ, அதைச் செய்ய விடாமல், அவளை ரசிக்கத் தூண்டியது.

கிணற்றுக்குள் இருந்தவளுக்கோ..., உள்ளுணர்வு எதையோ உந்த, தன்னை யாரோ பார்க்கிறார்கள் என அறிவுறுத்த, சட்டென நிமிர்ந்து பார்த்தவள், அங்கே நின்ற சூர்யாவைப் பார்த்து அதிர்ந்து..., சட்டென, பதறித் துடித்து பாவாடையை இறக்கினாள்.

அவள் அப்படி பார்ப்பாள் என எதிர்பாராத அவன் திகைத்து, தன் தலையிலேயே அடித்துக் கொண்டு அங்கிருந்து நகர்ந்து சென்று, மரத்தினடியில் சென்று நின்று கொண்டான்.

மனம் திடும், திடுமென அடித்துக் கொண்டது. தான் செய்தது சரியில்லை எனத் தோன்றினாலும்..., அங்கிருந்து பதறி விலகி ஓட மனம் விரும்பவில்லை.

என்னவோ..., தனக்கு சொந்தமான, உரிமையான அவளைத்தான் பார்த்தேன்.., என மனதை திடப்படுத்திக்கொண்டு நின்றிருந்தான்.

சற்று நேரத்தில்..., அதே ஈரப் பாவாடையை, ஈரம் போக பிழிந்து மார்பில் முடிந்தவளாக வெளியே வந்தாள். அவள் தோளைச் சுற்றி, ஈர டவல் போர்த்தப் பட்டிருந்தது.

தீபிகாவின் பார்வை சுழன்று அவனைத் தேட..., மரத்தடியில் நின்ற அவனைப் பார்த்தவள்..., ஒரு முறைப்பான பார்வையை வெளிப்படுத்தினாள். முகம் சிவந்து..., கண்களோ அவனை நேரடியாக ஏறிட்டது.

சட்டென அங்கிருந்த பம்ப் செட்டுக்குள் புகுந்து கொண்டாள். உள்ளே சென்றவளுக்கோ..., அவன்மேல் கோபம் வர மறுப்பதை எண்ணி வியப்பாக இருந்தது. அவனிடம் கோபம் காட்டத்தான் எண்ணினாள். அதைவிட, ‘இந்நேரம் ஓடியே போயிருப்பான்...’ என தான் எண்ணியதற்கு மாறாக..., அழுத்தமாக அவன் நின்ற கோலமே, அவள் பொய் கோபத்தை பொசுக்கியது.

அவன் தன்னை பார்த்து விட்டானே..., என்ற கோபமோ..., எரிச்சலோ, பிடித்தமின்மையோ எழவில்லை. ஒரு வயதுக்குப் பிறகு, தன்னைப் பெற்றவளே கூட காணாத தன் தோற்றத்தை அவன் கண்டுவிட்ட பிறகும், அவன்மேல் கோபம் கொள்ள முடியவில்லை.

தன் மனதுக்குள் எவ்வளவு அழுத்தமாக, உரிமையாக இருக்கிறான் என்பதை அதிர்வாக உள்வாங்கிக் கொண்டாள். அவனின்றி யாரையும் தன் கணவனாக வரிக்கவே முடியாது என முற்றாக உணர்ந்தாள்.

அதையும் மீறி..., ‘ஏன் என்னை வேண்டாம் என்றான்...?’ தெரிந்தே ஆகவேண்டும் என்ற வேகம்..., அவனிடம் பேசியே ஆக வேண்டும்.. என்ற வேகம்.

நிதானமாக உடை மாற்றியவள், ஒரு அழகான பாவாடை தாவணியில் வெளியே வர, அவன் பார்வை, அவளை ஆவலாக, ஆசையாக பருகியது.

அவள் மேனியில் நழுவ முயன்ற தன் பார்வையை கட்டுப்படுத்த அவன் மிகுந்த சிரமப்பட்டான். ஆனாலும்..., அவன் பார்வை கள்ளத்தனம் செய்ய முயல, நொடியில் அதை மீட்டான்.

அவளோ..., ஒரு வார்த்தை பேசாமல் அவனை எதிர்கொள்ள, அவள் பார்வையை சந்தித்தவன், “இல்ல...., நான் வேணும்னு....”, அவள் முறைப்பு அதிகரிக்க, பேச்சை நிறுத்தினான்.

“சரியா எதையுமே..., இல்ல..., எதுவுமே....” தான் ஏன் இவ்வளவு உளறி கொட்டுகிறோம், என நினைத்தவன்..., பேசுவதை நிறுத்திவிட்டு, ஒரு நொடி ஆழ மூச்செடுத்தான்.

“எனக்கு உரிமையானது நான் பாத்தேன்...” நெஞ்சை நிமிர்த்தி, நான் தவறொன்றும் செய்யவில்லை என்பதான நிமிர்ந்த பேச்சு..., கண்கள் அவளை தைரியமோடு ஏறிட்டது.

அவன் தைரியத்தை வியந்தவளாக..., ஆச்சரியமாக அவனை ஏறிட்டாள்.

‘எனக்கு உரிமையானதை நான் பார்த்தேன்...’ அவன் பேச்சு காதுக்குள் ஒலிக்க..., ‘இது எப்போ இருந்தாம்....?’ செல்லமாக அவனிடம் கேள்வி கேட்டுக் கொண்டாள்.

அவனுக்கோ..., தைரியமாக சொல்லிவிட்டாலும்..., இதயம் தாறுமாறாக துடிப்பது இன்னும் அடங்கவில்லை. ஒரு மாதிரி அவஸ்தையான மனநிலை...., அதையும் மீறி..., இன்று அவளிடம் பேசியே ஆக வேண்டும்...., அசையாமல் நின்றிருந்தான்.

அவன் தடுமாறிய பேச்சு..., அவன் பார்வை தடுமாறிய விதம்..., இறுதியாக உரிமையான அந்த வார்த்தைகள்..., ஏனோ அடி நாக்கில் தித்தித்தது.

“உன்கிட்டே பேசணும்...” அவளை நெருங்கி உரைத்தான்.

“என்ன பேசணும்...?” முறைப்பாகவே கேட்டாள்.

அவனும் சுற்றி வளைக்க விரும்பவில்லை. “என்னைய கட்டிக்கறியா...?” ஒரு மாதிரி ஏக்கமான குரல்..., அது அவளை

அசைத்துதான் பார்த்தது.

பிடிவாதமாக அதை இறுக்கியவள்..., "என்ன திடீர்ன்னு..., அன்னைக்கும் இன்னைக்கும் எதுவும் மாறிப்போனதா எனக்குத் தெரியலை..." அடி மனதின் கோபம்..., வார்த்தையாய் வெளியேறியது.

"நான் மாறிட்டேன்....".

"ஏனோ...? என்ன அனுதாபமா...?" தொண்டை கரகரத்தது.

"அனுதாபத்துக்காக கட்டிக்கிற அளவுக்கு என் தீபா ஒண்ணும் தரம் தாழ்ந்துடலை..." அவள் புரிந்துகொள்ள வேண்டுமே என்ற வேகம் அவனிடம்.

"பொறகு..., வேற என்ன...? காதலிக்கிறீங்களோ..." அவள் குரலில் இருந்தது என்ன நக்கலா?

"ஆமான்னு சொன்னா என்ன செய்வ...?" அவன் பதில் கேள்வி கேட்க,

"சிரிப்பேன்..." பட்டென பதில் வந்தது.

ஒரு நொடி அங்கே அசைக்க முடியாத மௌனம் நிலவ, "தீபா..., இந்த கல்யாணம் வேண்டாம்னு சொன்னப்போ..., என் மனசுக்குள் பெரிய பெரிய எதிர்பார்ப்புகள் நிறைய இருந்தது.

"அது என்னன்னா..., எனக்கு மனைவியா வரப்போறவ..., நான் இல்லன்னாலும், அதாவது நான் செத்துப் போய்ட்டாலும்..., இந்த உலகத்தை தைரியமா எதிர் கொள்ளணும்னு நினைச்சேன்...." இதை அவன் சொல்கையில்..., அவள் தேகம் சற்று நடுங்கித்தான் போனது.

அதை கவனித்தவன்..., "ஆமா..., எங்க அப்பா அம்மா இறந்தப்போ..., எங்க அக்கா நின்ன விதம்..., அவள் கண்களில் இருந்த பயம்..., நாமளும் செத்துடுவோம் தம்பின்னு சொன்னப்போ..., அந்த நிமிஷம் நான் செத்துட்டேன்.

"அந்த நேரம் என் மனசுக்குள் விழுந்த விதை..., என்னோடவே வளந்தது. அதுதான்..., அந்த எண்ணம்தான்..., எனக்கு வரவ தைரியமானவளா, படிச்சவளா இருக்கணும்னு எதிர்பார்க்க தூண்டியது.

“என் அக்கா எனக்கு பாத்த பொண்ணெல்லாம்..., அப்படி இருக்கலை என்ற என்னோட கோபம்தான்..., நீயும் அப்படித்தான் இருப்பன்னு என்னை எண்ணத் தூண்டியது.

“ஆனா..., உன்னை இல்ல..., கல்யாணம் வேண்டாம்னு நான் சொல்லிட்டு வந்த அந்த நிமிஷம்..., இப்படி செய்துட்டமேன்னு நானே என்னை வருத்திட்டு இருந்தப்போ..., உன்னோட அந்த முடிவு..., சத்தியமா அந்த நிமிஷம் நீ என் மனசுக்குள்ள வந்துட்ட...

“என் அக்கா சாக வேணும்னு முடிவெடுத்தா..., அது அவளுக்கு வாழ வழி தெரியாமல் ஏற்பட்ட, அல்லது எடுக்கப்பட்ட ஒரு முடிவு. ஆனா நீ..., உன் வாழ்க்கையே நான்தான்னு முடிவெடுத்து..., அது இல்லாமல் போனதால் ஏற்பட்ட ஏமாற்றத்தால் வந்த உணர்வு.

“ரெண்டுக்கும் மிகப்பெரும் வித்தியாசம் இருக்கு. அது எனக்கு அப்போவே புரிந்தது. என் எதிர்பார்ப்புக்கு மாறா..., நீ தற்கொலை என்ற முடிவை தேர்ந்தெடுத்தப்போ கூட, உன்னை கோழைன்னு என்னால் நினைக்க முடியலை.

“ஏன்னா...., இவன் இல்லன்னா..., இன்னொருத்தன்னு ஏற்க முடியாமல், உன் அன்பின் உச்சத்தால் எடுக்கப்பட்ட முடிவு அது. அப்படி இருக்கும்போது...., இந்த அன்பை என்னால் எப்படி உதற முடியும்...?” அவன் கேட்க, அவனுக்கு பதில் கொடுக்க முடியாமல் ஸ்தம்பித்தாள்.

அவன் சொல்வது சரி தானே..., இன்னொரு உறவை ஏற்க முடியாமல் எடுத்த முடிவல்லவா அது..., எனவே அமைதியானாள்.

“நான் செய்தது மிகப்பெரிய முட்டாள்தனம். அதை இல்லன்னு நான் சொல்லவே மாட்டேன். ஆனா..., எனக்காக நீ உயிரையே விடத் துணிஞ்சிருக்க..., உன்னை என்னால் எப்படி விட்டுக் கொடுக்க முடியும்? முடியவே முடியாது.

அவள் அமைதி அவனுக்கு தைரியமளிக்க..., அவள் கரத்தை பற்றியவன்..., “உன்னோட வாழ்ந்த பிறகு... நான் இல்லாமல் போனால் கூட..., என்னோட வாழ்ந்த வாழ்க்கையை நினைத்துக் கொண்டே... நீ உன்னோட மிச்ச வாழ்க்கையை

தைரியமா, தன்னம்பிக்கையா எதிர்கொண்டு வாழ்வன்னு எனக்கு நம்பிக்கை இருக்கு தீபா….

“இப்போ சொல்லு…, என்னை கட்டிக்கறியா…?” அவள் கரத்தை தன் நெஞ்சில் வைத்து அழுத்திக் கொண்டான்.

‘இவர் இல்லாமல்…, இவர் போன பிறகு எனக்கு வாழ்க்கையா…?’ நினைக்கவே நெஞ்சம் நடுங்கியது.

“சும்மா உளறாதீங்க… அப்படி ஒண்ணும் இல்லை…” வெடித்தாள்.

“உன் கண்ணில் என் மீதான பாசம் தெரியுது…, காதல் தெரியுது…, இப்போ சொல்…, உன் மனசுக்குள் நான் இல்லன்னு சொல்…, உன்னை திரும்பி கூட பார்க்காமல் நான் போய்டுறேன்…, இது பொய்யில்லை…, சத்தியம்…” அவன் குரலில் இருந்த உறுதி…, நீ சொன்னால் செய்வேன் என அவளுக்கு உணர்த்த, அவளுக்குள் பிரளயம்.

‘இவரை போகச் சொல்லிவிட்டு…? தன்னெஞ்சறிய பொய்யற்க அல்லவா…, மனம் முழுக்க அவனை வைத்துக் கொண்டு எப்படி நீ என் மனதில் இல்லை எனச் சொல்ல…’ தடுமாற்றம்…

“உன் மனசுக்குள் நான் இல்லன்னு சொல்லு…, இப்படியே போய்டறேன்..” மீண்டும் கேட்டு, அவன் சவால்விட, அமைதியானாள்.

“சொல்லு…” அவன் அவளை உலுக்க, அவள் பதில் சொல்லத் துவங்குகையில், யாரோ நடந்துவரும் அரவம் கேட்டது.

“அம்மாடி…, தீபி…” அவள் தந்தையின் குரல் கேட்க, சட்டென சூர்யாவின் கையை பற்றியவள்…, அவனை இழுத்துக் கொண்டு, வைக்கோல் போருக்குள் நுழைந்தாள்.

## சிப்பி – 14

அவள் செய்கைக்கான காரணம் புரியாமல்…, திகைத்தவன், “தீபா…, உன் அப்பா தானே…” அவன் கேட்க, சட்டென தன் கரத்தால் அவன் வாயை மூடினாள்.

‘ஏன்...?’ அவன் பார்வையால் வினவ..., அவளோ..., வைக்கோல் போர் இடைவெளியின் வாயிலாக வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள்.

“குளிக்கப் போறேன்னுதானே சொல்லிட்டு வந்தா...?” ரத்தினம் கேட்டுக் கொண்டது அவர்களையும் எட்டியது.

தீபிகாவுக்கோ..., அவள் தந்தை அன்று..., அவனை நேர் எதிராகக் காணும்பொழுது பொலி போட்டுவிடுவேன் என்று சொன்னது மட்டுமே அந்த நேரம் யோசனைக்கு வர, எங்கே அவனை, அந்த நேரம் கண்டால்..., கோபத்தில் எதையாவது செய்து விடுவாரோ என்பதாலேயே அவ்வாறு செய்தாள்.

“ஏய்..., என்ன பண்ற...? யாராச்சும் பாத்தா...? விலகு நீ...” அவன் வெளியே செல்ல முயல, சட்டென அவனைப் பிடித்து தடுத்தவள், தடுமாறி, அவன்மீதே சரிந்தாள்.

இதை எதிர்பாராத அவன் அவளைத் தடுக்க முயன்று, அவளை நிறுத்தியவன், அவள் நிற்க முடியாமல் சரிய, தானும் அவள் மீதே விழுந்தான்.

அந்த வைக்கோல்போரில் அது மிகப்பெரும் ஓசையை ஏற்படுத்த, “இந்த எலித்தொல்லை வேற...” ரத்தினம் அங்கே வருவதை, அவரது காலடி அவர்களுக்கு உணர்த்த, “ஷ்...” சன்னமாக முனகியவள், அசையாமல், இருக்க, அவன் தலையை தன்மேல் அழுத்தினாள்.

அப்பொழுதுதான் குளித்திருந்ததால்..., அவள்மேல் இருந்து வந்த ஹமாம் சோப்பின் மணம்..., அவனை தடுமாறச் செய்ய..., தான் புதைந்த இடம் வேறு அவனை கலவரப்படுத்தியது.

‘இது தவறு...’ அவனுக்குள் இருந்த நல்லவன் குரல் கொடுக்க, அவள் கரத்தை விலக்கி எழ முயன்றான்.

அவளோ..., அவன் செய்யப்போவதை உணர்ந்து, இன்னும் தன்னோடு, தன் மார்போடு இறுக்கினாள்.

‘ஆண்டவா....’ மனதுக்குள் முனகியவன், சற்று முன்பு அவன் பார்வைக்கு தரிசனமான பிரதேசம். கண்களுக்குள் அவன் அனுமதியின்றி விரிய, தன் முயற்சியை கைவிட்டவன், அவளுக்குள் புதைந்து போனான்.

“ச்சு…., ச்சு…” ரத்தினம், கையில் ஒரு கோலெடுத்து எலியை விரட்ட…, இருவரும் மூச்சடக்கி காத்திருந்தார்கள்.

“வீட்டுக்கு கிளம்பிட்டா போல….” ரத்தினம் அங்கிருந்து சென்றார்.

எவ்வளவு நேரமோ தெரியாது…, சுற்றுப்புறம் அமைதியில் உறைந்திருக்க, இருவரின் துடிக்கும் இதயங்களின் ஓசை மட்டுமே அங்கே நிலைத்திருந்தது.

முதலில் தெளிந்தவள் தீபிகாதான்…., அவன் அணைப்பில் தெரிந்த வித்தியாசம். தன் மார்புக்கு மத்தியில்…, சூடாகப் பாய்ந்த அவன் மூச்சுக் காற்றின் வெம்மை…, அவள் தேகம் முழுமைக்கும் அலையலையாக ஏதோ உணர்வை தோற்றுவிக்க,

“இது தப்பு….” அவன் காதுக்குள் முனகியவள், அவனை விலக்கினாள்.

“உன் கௌரவத்துக்கு என்னால் எந்த ஆபத்தும் நேராது. நானும் ஒரு அக்காவோடு பிறந்தவன்…, ஆனா…” அவளை விட்டு விலகி எழுந்தவன், அவள் தாவணி அதன் வேலையை செய்ய மறந்திருக்க…, தயங்காமல் அதை சரி செய்தான்.

அதில் பதறி விலகியவள்…, “முதல்ல வெளியே போங்க…” அவனுக்கு முதுகு காட்டி திரும்பினாள்.

அவன் வெளியே சென்ற சற்று நேரத்தில் வெளியே வந்தவள்…., “நான் வீட்டுக்கு போறேன்…” அவள் கிளம்ப,

“நான் கேட்டதுக்கு பதிலே சொல்லலையே…” அவளை தேக்கினான்.

“ஆமா…, உங்க நினைப்புக்கெல்லாம் நான் ஆளாக முடியாது. அவர் இருக்க மாட்டாராம்…, நான்…, போங்க…” அவன் பேச்சு நினைவிற்கு வர கோபம் கொண்டவளாக கிளம்பினாள்.

“இப்போ ஏன் என்னை வைக்கப்போருக்குள் இழுத்துட்டு போனியாம்…”.

“ம்…, என் அப்பா கொலைகாரரா மாறக் கூடாதேன்னு தான்…” மனதறிந்து பொய் உரைத்தாள்.

“பொய் சொல்ற தீபா. எங்கே உன் அப்பா என்னைப் பார்த்தால் கோபப்பட்டு எதையாவது செய்துவிடப் போகிறார் என்ற எண்ணத்தில்தான் இதைச் செய்தன்னு உனக்கே தெரியும்…”, அவன் உரைக்க, நடையைத் தொடர்ந்தாள்.

அவள் வழியை மறித்தவன்…, “தீபா…, கடல்ல ஆயிரம் மழைத்துளி விழும், ஆனா…, ஏதோ ஒரு துளி நீர்தான்…, சிப்பியை அடைந்து முத்தாக மாறும். நான் தேடும் சிப்பி நீதான்னு எனக்குப் புரிஞ்சுடுச்சு….

“நாளைக்கு நான் உன் வீட்டுக்கு என் சொந்தங்களோட வருவேன். அப்போ, அங்கே உன் முடிவைச் சொல்…” கிளம்பி விட்டான்.

“வேண்டாம்….” அவள் சொல்வதைக் கேட்க அவன் அங்கே இருக்கவில்லை.

தன் தந்தையிடம் திரும்பிச் செல்ல முடியாமல்…, வீட்டுக்குச் சென்றவள், தாயிடம் கூட உரைக்க முடியாமல் அறைக்கு விரைந்தாள்.

அங்கே இருந்த சித்ராவைப் பார்த்தவள்…, “சித்ரா…, அவர் நாளைக்கு வீட்டுக்கு வரேன்னு சொல்லிட்டு போய்ட்டார். அப்பா வேற அவர் மேல கோபமா இருக்காங்க. என்னால்…, நீ போய் வர வேண்டாம்னு சொல்லிட்டு வரியா…?” படபடத்தாள்.

“அதெப்படி…, நீங்க பேசி வரச்சொல்லி முடிவெடுப்பிய…, நாங்க போய் வேண்டாம்னு சொல்லணுமா…? இது நல்ல கதையா இருக்கே…” சட்டமாக அமர்ந்து கொண்டாள்.

“சொல்லுறத கேளுடி…” அவளை உலுக்கினாள்.

“வந்தா வந்துட்டு போகட்டும். உனக்கு கட்டிக்க விருப்பமில்லன்னா வேண்டாம்னு அடிச்சு சொல்லிடு. மத்தத மாமா பாத்துப்பார். எனக்கு வீட்டில வேலை கிடக்கு கிளம்பறேன்…” தான் அறியவேண்டிய விஷயத்தை அறிந்த திருப்தி அவளிடம்.

“சித்ரா…” கலங்கிய குரலில் அவள் அழைக்க,

“என்னடி..., இப்போ உனக்கு என்னதான் பிரச்சனை...?” அவளை நெருங்கினாள்.

“அப்பா..., அப்பாவை மீறி என்னால் எதுவும் செய்ய முடியாதுடி...” தேம்பினாள்.

“உன் மனசுக்குள் இருப்பதை உன் அப்பாகிட்டே சொன்னாத்தானே அவருக்குத் தெரியும்...., நீயே முடிவு பண்ணா..., எல்லாம் நல்லபடியா நடக்கும்..., நம்பு...” அவள் என்னவோ சுலபமாக சொல்லிச் சென்று விட்டாள். ஆனால்..., தீபிகாவுக்குத்தான் நிம்மதி பறி போனது.

காலையில் என்ன நடக்குமோ என்ற கவலையிலேயே உணவு பிடிக்கவில்லை, உறக்கம் பிடிக்கவில்லை.

காலையில் எழுந்து பள்ளிக்குச் செல்லாமல் இருக்கும் மகளை கேள்வியாகப் பார்த்த பெற்றவர்கள்..., அவளிடம் எதையும் கேட்டுக் கொள்ளவில்லை.

ரத்தினமோ..., நேற்று தென்னந்தோப்பில் இருக்கும் வேளையில்..., தூரத்தில் கண்ட சூர்யாவையும், அவன் சென்ற சற்று நேரத்தில், பின்னால் சென்ற மகளையும் கண்டவருக்கு..., நொடியில் விஷயம் புரிந்து போனது.

அதை மனைவியிடமும் பகிர்ந்து கொள்ள..., ‘தப்பாக எதுவும் இருக்காது..., கொஞ்சம் பொறுங்கள்...’ என சொல்லியிருந்தார்.

எனவே..., அவரும் மகளிடம் எதையும் கேட்கவில்லை. நேரம் பத்துமணியை நெருங்குகையில்..., சொந்தங்கள் புடை சூழ, தன் அக்கா, மாமாவோடு அவர்கள் வீட்டுக்கு வந்தான் சூர்யா.

அதைப் பார்த்தவர்..., “எந்த மொகத்த வச்சுகிட்டு இந்த வீட்டு படியேறி வரீங்க..., அப்படியே போய்டுங்க..., இவருக்கு என் பொண்ணை கொடுக்க மாட்டேன்...” மரியாதையாகவே தன் மறுப்பை வெளியிட்டார்.

அவர் கொடுத்த மரியாதையை அங்கிருந்தவர்களும் குறித்துக் கொள்ள, “அப்பு..., வீடு தேடி வரவங்களை உள்ளே கூப்பிட்டு வச்சு பேசுறதுதான் மருவாதி...” ஒருவர் குரல் கொடுக்க,

“அதான் முடியாதுன்னு சொல்லிட்டு இருக்கேன்ல...” எகிறினார்.

பார்வையோ..., ஓர விழியாக வீட்டையே நோட்டமிட்டது. ரத்தினத்துக்கோ..., மகள் வாயால் அறிந்துகொள்ளும் வேகம்..., அவள் பதிலுக்காக காத்திருந்தார். போலியாக தன் மறுப்பை வெளியிட்டுக் கொண்டிருந்தார்.

வீட்டுக்குள்ளோ.., “இந்த மனுஷன் ஏன் இப்படி பண்றாருன்னு தெரியலையே....” சியாமளா புலம்பினார்.

“ஏய்..., அந்த அருவாளை எடு..., ஒரே சீவா சீவிப்புடுதேன். ஒத்த மனுஷனா வந்து வேண்டாம்னு சொல்லிட்டு..., இப்போ கும்பலா வந்தால்..., நாங்க ஈன்னு இளிச்சுக்கிட்டு பொண்ணைக் கொடுப்பமா...?” அவர் விடுவதாக இல்லை.

“எலேய் சூர்யா..., இப்படி கூப்பிட்டு வந்து அசிங்கப்படுத்ததான் கூட்டி வந்தியா...?” அவன் சொந்தம் குரல் கொடுக்க, நிலைமை கைமீறுவதை உணர்ந்தவளுக்கு நெஞ்சம் பதறியது.

“அம்மா..., அப்பாவை உள்ள கூப்பிடும்மா...” அவள் கண்களில் கண்ணீர்.

“என்னங்க..., கொஞ்சம் உள்ளே வந்துட்டு போங்க...” சியாமளாவின் குரலுக்கு, உற்சாகமாகவே உள்ளே சென்றார்.

“என்னடி...?” கோபமாக வினவ, “அப்பா..., அவர உள்ள கூப்பிட்டு பேசுங்கப்பா...” உரைத்தவள், வேறு எதுவும் சொல்லாமல், உள்ளே ஓடிப் போனாள்.

“அதான் உங்க மகளே சொல்லிட்டாளே..., போங்க..., பேசுங்க...” சியாமளா உரைக்க வெளியே வந்தார்.

வெளியே வந்தவர்..., “வாங்க....” உள்ளே அழைக்க..., அதன் பிறகு வேலைகள் நொடியில் நடந்தது.

அடுத்த முகூர்த்தத்தில் திருமணம் என முடிவாக, அந்த நாளும் அழகாக விடிந்தது.

அவர்கள் கோயில் சந்நிதியில், தீபிகாவின் கழுத்தில் மூன்று முடிச்சிட்டு தன்னவளாக மாற்றிக் கொண்டவன், முதல்

இரவில் அவள் வரவுக்காக ஆர்வமாக காத்திருந்தான்.

மிதமான அலங்காரத்தில், பதுமையென வந்த அவளிடம்..., அவள் கையில் இருந்த பாலை வாங்கி அருகில் வைத்தவன், “தீபா..., நான் ஒண்ணு கேட்டா பதில் சொல்லுவியா...?” அவன் கேட்க, கேள்வியாக அவனை ஏறிட்டாள்.

“என்னைய..., நம்ம நிச்சயத்துக்கு முன்னாடியே உனக்குத் தெரியுமா...?” தன் நெடுநாள் சந்தேகத்தை கேட்டான்.

“சித்ரா யாருன்னு தெரியுமா...?” வினவியவள்..., அவன் உதவியதை உரைக்க, அன்றுமுதல், அவன்மேல் தான் கொண்ட நேசத்தை உரைக்க, அவளை ஆசையாக இறுக்கிக் கொண்டு, அவள் கன்னத்தில் அழுத்தமாக தன் முத்திரையைப் பதித்தான்.

அதில் சொக்கிப் போனவள்..., “அன்னைக்கு சொன்னீங்களே..., சிப்பியை தேடிட்டு இருந்த மழைத்துளி நீங்கன்னு..., ஆனா..., அது உண்மை இல்லை..., இந்த சிப்பி தேடும் மழைத்துளிதான் நீங்க....”, அவனோடு ஒட்டிக் கொண்டாள்.

“இப்போ சிப்பியும் மழைத்துளியும் சேர்ந்துடுச்சு..., இனிமேல் முத்தை உருவாக்க வேண்டியதுதான் பாக்கி..., அதுக்கான வேலையை பார்ப்போமா...?” அவளை தழுவ..., சுகமாய் அவனைத் தாங்க தயாரானாள் தீபா.

*****